# அருள் மணித்திரள்

அடியார் ஞாயிறு திருக்கூட்டத்தில்

திருப்புகழ்மணி அவர்கள்

ஆற்றிய

## சொற்பொழிவு திரட்டு

(மூன்றாம் பகுதி)

5184



தொகுத்தோர்:

**அ. க. பாலாம்பிகை,**

33, சரோஜனி தெரு, தி. நகர், மதராஸ்-17.

# அருள் மணித்திரள்

அடியார் ஞாயிறு திருக்கூட்டத்தில்

**திருப்புகழ்மணி அவர்கள்**

ஆற்றிய

## சொற்பொழிவு திரட்டு

(மூன்றும் பகுதி)



தொகுத்தோர்:

**அ. க. பாலாம்பிகை,**

33, சரோஜனி தெரு, தி. நகர், மதராஸ்-17.

Rs.0-14-0

ஓம.

கணேச கோவிந்த சிவோஹம் ஷண்முஹம்
குஹேச சரவண பவேச சரணம்
ஸ்ரீ க்ருஷ்ண கோவிந்த ராமராம ஹரிஹரி
ஸ்ரீ க்ருஷ்ண கோவிந்த நாராயண ஹரி
ரகுபதி ராகவ கோவிந்த கேசவ
குஹேச சரவண பவேச சரணம்.

Jyothi Printers, Madras-1.

# THE
# YOGA - VEDANTA FOREST UNIVERSITY

**SEVENTEENTH BIRTHDAY CELEBRATIONS OF SRI SWAMI SIVANANDA**
(PLATINUM JUBILEE)

P. O. SIVANANDA NAGAR
Dist. Dehra Dun I. P. Himalayas.
INDIA. 22nd JUNE 1956.

*H. H. Shri. T. M. Krishnaswami Iyer,*
TIRUPUGAZH MANI,
MYLAPORE, MADRAS.

*Glorious Immortal Self,*

Salutations and prostrations. Om Saravana-bhavaya Namah.

It is with the greatest delight tha I have received from Sri. A. K. Balambikai a copy of Vol. II, Parts I and II of your holiness's immortal teachings.

All the discourses are inspiring and soul-elevating and are vibrant with the soul-force of your Holiness's life and realisation.

To the onrushing demon of meterialism and atheism your Holiness is the divine 'Vel' of Skanda. The undivine forces flee before thee.

May the Supreme Skanda bestow upon your Holiness robust and long life to shine as an eternal inspiration to all devotees. With regards, Prem and Om,

Thy own Self,
(*Sd.*) SIVANANDA.

## பொருளடக்கம்.


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | விநாயக தத்துவம் | 1 |
| 2. | சங்கையும் தெளிவும் | 14 |
| 3. | அன்பு வெள்ளமும் ஆனந்தக் கூத்தும் | 22 |
| 4. | பக்தி ஊறும் இடம் | 31 |
| 5. | சிவகாமமும் அவகாசமும் | 41 |
| 6. | தனி வீடு | 51 |
| 7. | தொண்டரின் தொலையாச்செல்வம் | 72 |
| 8. | புலித்தோலுடுத்த மனிதன் | 89 |
| 9. | முடிச்சவிழ்க்கும் பெருமான் | 93 |
| 10. | மறைபொருள் | 103 |

ஓம்

# வள்ளிக்கு வாய்த்தவன்

அப்பன் உருவாய் வந்து அரும் பொருள் உபதேசித்து
செப்பறிய செந்தமிழால் சேய்மேல் செயுள் பாடி
ஒப்பறிய இசை சேர்த்து உலகெல்லாம் உய்யும் வண்ணம்
செப்புமவர் சரணங்கள் அணிவோம் யாம் தலை மிசையே.

1. வள்ளிக்கு வாய்த்தவனே – மயிலேறும் மாணிக்கமே
சிங்கார வேலவனே – செந்தில் வாழும் சேவகனே
2. கோழிமிளிர் கொடியோனே – தணிகைமலை குருபரனே
ஆவித்துணையானவனே – அந்திச் சுடர் ஜோதியனே
3. அமரர் சிகாமணியே – அமராவதி காவலனே
தெள்ளுதமிழ் கினியோனே – துள்ளுமன்புத்துறை
[யோனே
4, எண்ணமதில் கண்ணவனே – ஏழுலகம் நிறைந்தவனே
ஆறுபடை வீட்டவனே – அருணகிரியாண்டவனே
5. பழனிவளர்கிழவோனே – சரவணத்தில் பயின்றவனே
ஏழையென் மனத்தவனே – அன்பர்க்கர ணனவனே
6. வேதப் பொருள் காட்சியனே – திருப்புகழ்க்கோர்
[ஆட்சியனே
சூரர்க்கொரு சிட்சகனே – தொண்டர் கொருரக்ஷகனே.

---

குருவாயூரப்பன் சந்நிதியில்—P.R. பாலசுப்ரமணியன் பாடியது.

# ஸ்ரீ க்ருஷ்ணன் கீர்த்தனை

ஹம்ஸாநந்தி–ஆதி

பல்லவி

ஸாரஸதள நயன ஹேமாதவ
ஸ்ரீ ஹரிஹரியே சரணம் சரணம் சரணம் சரணம்:–"ஸாரஸ"

அநுபல்லவி

மாரகோடி ஸுந்தர மதுஸூதனே
தீர ஸகல ஸுர பூஜித பதனே "ஸாரஸ"

சரணங்கள்

1. மாமுனிவர் மனக் கோயில்கொள் பரனே
மாயவனே மணி மாலைகளசைய
தாயெனவருங் கொடும்பூதனை தன்மேல்
கருணை பொழிய நளின பதம் வைத்தாடிய "ஸாரஸா"

ஆரபி

2. கோபியர் மனை தேடி வெண்ணெ களவாடி
தடியடி படவே பயந்து ஓடி ஒளிந்து
விளையாடிடவே கோபித்து அவர்
யசோதையிடமே வருமுன் அங்கே
சமர்த்தனெனவே அமர்ந்து களித்து
ஏமாற்றிய அரசே "ஸாரஸ",

ஸிந்துபைரவி

3. பாயும் யமுனை நதிக்கரை தனிலே பரி –
பூரண நிலவொளி படர்கையிலே ஹரி –
வேய்ங்குழல் எடுத்து ஊதிடவே வ்ரஜ –
நாரீ மணிகள் தனை மறந்தே – உனை
நாடிடவே நீ ராதையுடனும் நடமாடிடவே–ரஸ
ராஸ நடனமிதைப் பார்த்திடவே – உயர்
தேவர் முனிகணமும் கூடிடவே – மகிழ் "ஸாரஸ"

மத்யமாவதி

4. த்வேஷபாவனு யுக்த கம்ஸனை ஸம்ஹரித்து வஸுதேவ
சிறைதவிர்த்து அரசாண்டனையே [தேவகி
ருக்மிணி ஸத்ய பாமா முதலிய யுவதிகளை மணம்
பாண்டவர்க்கு உறவாகி கௌரவப் [புரிந்தனையே
பூண்டொழித்த ரத ஸாரதியே
வேத ஸாரமதை கீதையாக உரை
நாதனே பரம பாவனனே
கோதை சூடி பிறகே மகிழ்ந்து மலர்
மாலைகொண்ட திரு நாரணனே
ஆதி மூலமே என்றழைத்த கரி
ராஜனிடர் நீக்க விரைந்தனையே
பாத மலர் மீது பாடி அடி பணியும்
பக்தர்களுக்கருள் பரந்தாமனே. "ஸாரஸ"

# விநாயக தத்துவம்

திருமூர்த்திகளுக்கும் உபதேசமுகமாயிருக்கும் பராசக்தி சுவரூபமே ஔவை. ஔவை பாடிய, ‘வாக்குண்டாம்’ என்ற முதல் செய்யுளில் விநாயக மூர்த்தியின் பெருமைகள் யாவும் அடங்கியிருக்கின்றன. விநாயகமூர்த்தி வேறல்ல, ஔவையார் வேறல்ல. தொண்டரும் ஆண்டவனும் ஒன்றே. உண்மையான பக்தியேற்பட்டவுடன் உள்ளிருந்து வரும் பேச்செல்லாம், ஆண்டவன் பேச்சாக மாறி விடுகிறது. விநாயகமூர்த்தியினருளால், உலகத்தைப் பகட்டுகின்ற அழகு நீங்கி, பதினுலுலகத்தையும் ஆகர்ஷணம் செய்யப்பட்ட தவ வடிவத்தைப் பெற்ருள். வெளியே யிருக்கப்பட்ட பிரகிருதியாகிய மாயை முதுமையுடனும், உள்ளேயிருக்கப்பட்ட ஞானமாகிய சுடர் என்றும் இளமையுடனும் ஔவை உருவத்தில் நின்றன.

> “ஈசன் எனக்கருதி எல்லா உயிர்களையும்
> நேசத்தால் நீ நினைத்துக்கொள்”

என்று உலகத்துக்கு ஞானத்தைப் போதித்தாள் ஔவைப்பாட்டி. பேதமாய்க் காணப்படும் உலகில் அபேதமாய் எங்கும் நிறைந்த முருகனையும் கிருஷ்ணனையும் காணவேண்டும். ரூபத்தில் அரூபமான தெய்வதத்துவம் மறைந்திருக்கிறது. அதைப் பார்ப்பதுதான் ஞானம். இந்த ஞானத்தைத்தான் மேற் கண்டபாட்டின் மூலமாக உபதேசிக்கிருர் ஔவையார்.

அஞ்சலி செய்வோரின் நேயக்காரனுயிருக்கும் தெய்வம் பேத அபேத உலகாய் வளர்ந்திருக்கிறது. எங்கும் நிறைந்த அந்த தெய்வ, தத்துவத்திற்கு ஒரு நடுவிடம் (பொதுவான இடம்) ஒன்றிருக்கிறது. அவ்விடத்தில் ஒரு பருக்கை போட்டுவிட்டாலும், அது உலகத்திலுள்ள ஜீவராசிகளையெல்லாம் திருப்தி படுத்துகிறது. திரௌபதி காட்டில் வசித்து வந்த போது ஒரு நாள் நடுப்பகலில் துரியோதனனுல் ஏவிய துர்வாசர் பசியென்று வந்து உணவளிக்கும் படி கேட்டார். திரௌபதியோ உணவுப் பாத்திர மாகிய அக்ஷய பாத்திரத்தைத் தேய்த்துக் கவிழ்த்தி ருந்தாள். ஆதலால் அவருக்கு உணவளிக்க ஒன்று மில்லை. செய்வதறியாமல் கிருஷ்ணனை நினைத்தாள். சப்த சுவரூபமாகிய கிருஷ்ணன் உள்ளே வந்ததும். அனுக்ரகம் செய்வதற்காக ரூபத்துடனும் வெளியே வந்து விட்டான். விஷயத்தைக் கண்ணனிடம் தெரிவித்தாள் திரௌபதி, கண்ணன் அக்ஷய பாத்திரத்தை எடுத்துவரச் சொன்னுன், தேய்த்துக் கவிழ்த்திருந்த அக்ஷய பாத்திரத்தைக் கொண்டு வந்து கொடுத்தாள் திரௌபதி. கண்ணன் நகத்தால் சுரண்டியவுடன் ஒரு பருக்கைத்துண்டு அதிலிருந்து கிடைத்தது. அதை உண்டான் கண்ணன். அவன் வயிறு நிறைந்தது. நதியில் ஸ்நானம் செய்து கொண்டிருந்த துர்வாசர் வயிறும் நிறைந்தது. கண்ணனுக்குக் கொடுத்த பருக்கை உலகுக்கெல்லாம் பசியடக்கும், நடுவில் (ஸெண்டரில்) போய் விட்டது. நாம் பகவானை நினைத்துச் சாப்பிடுங் காலத்தில் உண்ணும் உணவெல்லாம் தெய்வத்தினுடைய சுவரூபமாய் விடுகிறது. ஆண்டவனுடைய நினைவு

விஷத்தையும் அமிருத மாக்கிவிடுகிறது. உள்ளேயிருக்கும் ஆண்டவனை நினைத்து அவனுகிய உணவைச் சாப்பிட்டால், அவ்வுணவு அமிருத மயமாகிவிடுகிறது. ஆணவத்தை நினைத்து என் உணவு நான் சாப்பிடுகிறேன், என்று சாப்பிட்டால் விஷமாய் விடுகிறது. பதினுலுகத்தையும் தன்னிடத்திலடக்கக்கூடிய அன்பே சிவம். அன்பே பக்தி, ஜீவனே சிவஸ்வரூபம். அதாவது சிவனின் ஒரு பகுதி. எல்லா ஜீவனையும் சிவனெனக் கருதி அன்பு செலுத்தினுல் சிவத்தினுடைய அன்பு நமக்குக் கிடைக்கிறது. சிவத்தினுடைய சுவரூபம் ஒன்ருயும் அன்பாயுமிருக்கிறது. ஆதலால் நாம் யாரைப் பார்த்தாலும் அன்பாய்ப் பேசவேண்டும்.

விநாயக உருவத்தைப் பார்க்கும் பொழுது முதலில் காணப்படுவது துதிக்கைதான். விநாயகர் என்பது சௌலப்யமான தத்துவம்,எல்லாம் ஒன்ருன ஓங்கார தத்துவத்தையே விநாயகரூபம் உணர்த்துகிறது. களிமண்ணினுல் செய்யப்பட்ட விநாயக உருவங்கள் பலவாயினும், அவ்வுருவங்களெல்லாவற்றிலும் ஒரே விநாயக தத்துவம் தான் நிறைந்திருக்கிறது. வஞ்சருளத்தில் மட்டும் விநாயகர் காணப்படமாட்டார். உள்ளே அன்பு சுவரூபமாகிய பரமசிவனை வைத்து வெளியே வஞ்சத்தினுல் மூடி வைத்திருப்பவருக்குப் பிரகாசிக்கமாட்டான். உள்ளும் வெளியும் ஒன்ருயிருக்கப்பட்ட அபேதமாகிய ஒற்றுமையை வளர்ப்பவர் உறவை நாம் வளர்க்க வேண்டும். உள்ளே ஒன்ருன அன்புமயமான தெய்வத்தை வைத்து வெளியே பிறர் என்று பேதப்படுத்துவது

தான் வஞ்சனை. அத்தகைய வஞ்சகருள்ளத்தில் கணபதி ஒன்றியிருக்க மாட்டான்.

பரமசிவன் திரிபுரதகன காலத்தில் தன்னுடைய மூலாதாரமாகிய கணபதியை நினைக்கவில்லையாம். அதனால் தேர்ச்சக்கரத்தின் அச்சிற்று விட்டது என்பது புராணம். மனிதனுக்குண்டாகும் சக்தி யெல்லாம் ஆண்டவனால் தான் வருகிறது. உருவ மான ஆண்டவன் ஒரு வேலை செய்ய வேண்டுமானால் தன்னை நினைத்துதான் செய்ய வேண்டும். தன் மூலாதாரத்திலுள்ள சக்தியை நினைத்துச் செய்ய வேண்டும். மூலாதார சக்தி விநாயகர். சக்திக்கு ஆதாரம் மூலாதாரமே, என்பதை இக்கதை குறிக் கிறது. வஞ்சகருச்கு சக்தி ஊறாது. நாளுக்கு நாள் குறைந்து விடும், ஆண்டவனை நினைக்கும் அன்பர் களுக்கு நாளுக்கு நாள் சக்தி ஊறும்.

பகவானுடைய மூச்சே வேதம். நம்முள் பகவான்விடும் மூச்சே ஹம்ஸ காயத்ரி (ஹம்ஸஸோ ஹம்) முருகனுடைய சரணத்தில் நினைவை வைத்து மூச்சை விடுபவர், அந்த ஆண்டவனுடைய மூச்சி லேயே அடங்கி அவனே தானாய்க்கலந்திருப்பர். 'ஹரோ ஹரா, என்று மேல் ஸ்தாயியில் கத்தி பஜனை செய்யும் பொழுது பகவானையே நம்மிடத்தில் பற்றியிழுக்கிறோம். மூச்சைப் பிடித்திழுத்து ஆண்ட வனுடைய பெயரைச் சொல்லி வாழ்த்தினால் நமக்குச் சக்தி பெருகுகிறது. ஆண்டவனுடைய நினைவிலிருக் கும் தொண்டரைத் தேடி தவம் தானே ஓடிவரும். ஆண்டவனை வாழ்த்தினால் உலகெல்லாம் வாழும். நான்கு வேதமும் கணபதியின் வாயிலிருந்துபொழிந்

துக்கொண்டிருக்கின்றனவாம். துஞ்சும் அவுணருக் கஞ்சாதவனும், தொண்டர்கள் ஆண்டவனைநேசித்து அவன் பெருமையை நிலைநாட்டுகின்றனர். அவுணர் கள் ஆண்டவனை துவேஷித்து அவன் பெருமையை நாட்டுகின்றனர். அவர்களுடைய செய்கையும் ஆண்டவனுடைய பிரேரேபணையே. ஆதலால் அத் தகைய அவுணர்களுக்கு அவன் அஞ்சமாட்டான், 'சென்னி ஆறுடை' என்ற தொடர் சிவமும் கணபதி யும் ஒன்றே என்பதை விளக்குகிறது. அவன் தொன்னூல் மறைக்கும் எட்டாதவன் அதாவது வேதங்களால் எட்டி அளக்க முடியாதவனும். ஆண் டவன் பதினாலுலகங்களையும் தன் சக்தியால் அளப்ப தால் அவனை வேதங்களால் அளக்க முடியாது. அப் படிப்பட்ட விநாயகர் எல்லாமாவர், அவரை வாழ்த்தி னால் உலகம் முழுவதும் வாழும். நாம் அனைவரிடமும் ஆசி வார்த்தை கூறவேண்டுமே தவிர ஆசை வார்த்தைகூறக்கூடாது. சத்தியம் வேறல்ல, ஆண்ட வன் வேறல்ல, ஆண்டவனைத் துதிக்கின்ற நாவினால் ஆசி கூறினால், அது சத்தியவாக்காகும். ஆண்டவனு டையநாமமாகிய வாக்கை நாக்கினால் பூட்டி விட்டால், எங்கும் செல்லக்கூடிய வாக்குண்டாம். அதுவே செல்வாக்கு. அன்பினால் எல்லாவற்றையும் நினைக் கும் நல்ல மனமும் உண்டாகிறது. மாமலராள் நோக்காகிய மன நிறைவு (அல்லது) திருப்தியாகிய லக்ஷ்மி கடாக்ஷமும் உண்டாகும். கணேசர் ஓங்கார ஸ்வரூபம். உலகெல்லாம் ஒன்றாய் நிறைந்ததே ஓங்காரம்.

கோக்களாகிய ஜீவர்களுக்கு தனது லீலைகளி னால் ஆச்சரியம் (அல்லது) விந்தையைக் கொடுப்

பவனே கோவிந்தன். பசுக்களாகிய ஜீவர்களின் தலைவனாகிய பசுபதியும் அவனே. அன்பே சிவம். சிவம் என்றால் மங்களம்.

திருபூர்த்திகளின் சுவரூபமே ஷண்முகன் ஓங்காரமாகிய மயிலின் நடுவிருக்கப்பட்ட முருகன். மலைப்பாகிய கிரௌஞ்சமலையைப் பொடித்த வேலைக் கையில் தாங்கியிருக்கிறான். மலைப்பு (அல்லது) திகைப்புண்டான பொழுது முருகா வென்றால் அது நீங்கிவிடும். கோழி கூவினால் சூரியோதய முண்டாவதைப் போல, முருகா வென்ற ஒலியைக் கேட்டால் உள்ளே ஞான ஒளி பரவும் சப்தப்ரம்மமே சேவலின் உருவம்.

கணபதி (அல்லது) எந்தக் கடவுள் சந்நிதானத்திலும் தேங்காய் உடைப்பதின் காரண மென்ன? தேங்காய் ஓட்டைப்போல் ஆணவமாகிய ஓடு பூரணமாகிய நம்மை மூடிக்கொண்டிருக்கிறது. ஆண்டவனை நினைத்து ஆணவமாகிய ஓட்டை உடைத்து உள்ளேயிருக்கும் பரிபூரணஞான் ஆனந்த ஸ்வரூபத்தைப் பெறவேண்டும் என்பதே இதன் கருத்து. ஞானம் தூய்மையானது அதைபோல் தேங்காயின் உள்ளேயிருக்கும் பூவும் வெண்மையானது. தேங்காயினுள்ளேயுள்ள ஞானானந்தஸ்வருபமே முருகன். தன்னை நினைத்துத் தேங்காயை உடைப்பவருக்கு முருகனாகிய பூரணத்தைத் தருகிறாராம் கணேசர். இதைக் குறிப்பதற்கே, கணேசர் பூரணத்தைக் கையில் வைத்துக்கொண்டிருக்கிறார்.

இந்த விநாயகர் பாரதத்தைத் தன் கோட்டை ஒடித்துக்கொண்டு தொண்டர்களின் தலையோடாகிய மேருவில் எழுதினாராம். இதை,

"பாரதத்தை மேருவெளி வெளியீனில், கோடொ
டொடித்த நாளில் வரை வரைபவர் பானிறக்
கணேசர் குவா குவாகனர்—இனையோனே"

என்ற பாடலின் மூலம் அருணகிரியார் குறிப்பிடு கிறார். விநாயகரைப் பூஜை செய்தால் முருகனுடைய அருள் வரும். பாடல் மூக்கிய மாது தமிழ்த்தாய் அதற்கு இறை முருகன் ஆதி சங்கரர் திருச்செந்தூர் முருகன் சன்னிதானத்தில் சென்றாராம். ஷண்முக னைக் கண்டதும் தன்னை மறந்தார். மெய் மறந்து எல்லாம் மறந்து நிற்கும் பொழுது கணபதியை,

"சதா பால ரூபாயி விக்னார்த்தி ஹந்த்ரீ,"

என்று துதித்தார். உள்ளத்திலிருந்து வெள்ளம் போலெழுந்தது வாக்கு. அவர் பாடிய சுப்ரமணிய புஜங்கமே இதற்கு ஆதாரம். கணபதியைத் துதித் தால் வரும்பயனை வாக்குண்டாம் என்ற பாட்டு உணர்த்துகிறது.

கணபதி ஓங்கார ஸ்வரூபமாகையால் அவரைச் செய்யும் ஸ்தோத்திரம் பிரம்மத்தையே சேருகிறது. விநாயகரின் வணக்கம் எல்லா மூர்த்திகளையும் சேரும். அரூபமா யிருக்கப்பட்ட ப்ரம்மம் ஒரு ரூபத்தை யெடுத்துக் கொண்டு நான்தான் உன் னைக் காக்க வந்தேனென்று உள்ளத்தில் வந்து

விட்டால் வேறு வேண்டுவதென்ன? இந்த நிலையை யனுபவித்த அருணகிரியார்?

" திருவடியும் தண்டையும் சிலம்பும்
சிலம் பூடுருவப் பொருவடி வேலும்
கடம்பும் தடமபுயம் ஆறிரண்டும்
மருவடிவான வதனங்களாறும்
மலர்கண்களும் குருவடிவாய் வந்தென்
உள்ளம் குளிர ஆதி கொண்டனவே"

என்ற கந்தலங்காத்தில் விளக்குகிறார்.

உள்ளத்தைச் சுத்தமாக்கி அலங்கரித்து அங்கு ஆண்டவன் குடிகொள்ள வேண்டுமேயென்று தேடிக் கொண்டு வருகையில் "கும்பிடப் போன தெய்வம் எதிரேவந்து அவருள்ளத்தில் குடிகொண்டதாம். என்ன பாக்கியம். திருவடி யென்பது நாதப் பிரம்மம், சப்த ப்ரம்மத்தினல் உலகெங்கும் கட்டி அதைத் தன்னுள்ளத்தில் வைத்துக்கொண்டால், அதுவே திருவடியாகும். அத்திருவடி உள்ளத்திலிருந்து பேசும். எப்படி? பிரம்மஞானத்தைப் பேசும்.

" பேசுவானுமீசனே பிரம்ம ஞானமும்முளே "

என்றார் சித்தர்.

பன்னிப் பாடுவதென்பது தமிழின் சிறந்த பண்பு. பாடலைப் பண்ணுபவன் ஒருவன். பன்னுபவன் ஒருவன். பன்னிப் பாடுவோர்க்கு தெய்வ தரிசனம் வெளிப்படையாய்க் காணப்படுகிறது. உயிருக்குயிரா யிருக்கும் ஒன்ருன பரம்பொருளைக் காணுவிடில் ஊளூராய்ச் சுற்றிப் பயனென்ன? முருகனுடைய சுவரூபமே அன்பிலானது. தன்

அன்பு தங்குவதற்குப் பதினுலுலகத்திலும் இடம் இருக்கிறதா என்று சுற்றிப் பார்த்தானும். அவ்வாறு சுற்றிவரும் காலத்தில் அவனுடைய அழகிய நிறத்தைக் கண்டு தேவர்கள் மயங்கினுராம். உலகெலாம் நிறைந்த அன்பின் ஸெண்டரே (அல்லது சேமிக்க வைக்கப்பட்டதோர் குறிப்பிடம்) முருகன். டெலிபோனின் மூலமாக ஒருவர்க்கொருவர் பேசிக் கொள்வதுபோல, தொண்டர்கள் இதயமாகிய டெலிபோனின் மூலமாக முருகனிடம் பேசிக் கொள்கின்றனர். உலகத்தில் எல்லாவிடங்களிலும் தன் உணர்ச்சி நரம்பை வைத்திருக்கிருன் முருகன். ஒவ்வொரு தொண்டர்கள் உள்ளத்திலும் டெலிபோன் வைத்திருக்கிருன், ஒருமையுடன் முருகாவென்று கூப்பிட்டால் ஏனென்று கேட்பான். ஸெண்டர் ஆபீஸே முருகன். உலகத்திலுள்ள தெய்வங்களெல்லாம் பலவிதமான ஸெண்டர்கள். அந்த ஸெண்டருக்கெல்லாம் முதன்மையான செண்டரா யிருப்பவன் முருகன்தான். உலகத்திலுள்ள தெய்வ உருவங்களெல்லாம் உலகம் நிறைந்த பொருளாகிய ப்ரம்மமாகிய முருகனிடம் பேசுவதற்காக ஏற்பட்ட செண்டரே. முருகனே விரும்பும் பக்தர்கள் வேறு தெய்வத்தை நாங்கள் தொழுவதில்லே யென்பது பேதத்திஞலல்ல. முருகனிடம் எல்லா தெய்வங்களும் அடங்கிவிட்டபடியால் அவனேத் தொழுதால் எல்லா தெய்வத்தையும் சேரும் என்பதே.

ஒரு மனிதன்வரை கடந்த அன்பும அறிவுமுடைய வள்ளலாகிய முருகனுடைய ஸ்வரூபத்தை அனுபூதி முகமாக உணர்ந்து அதைப் பாட்டின் மூலமாகத் தெரிவிப்பது தமிழ் நாட்டில்தானுண்டு.

நான் என்ற உணர்ச்சியை ஆண்டவனுடைய நாளுக மாற்றிவிட்டால் அது உலகம் முழுவதும் பரந்த தானுகி விடுகிறது. எந்த ஜந்துவையும் இழிவாக நினைக்கக் கூடாது. அதற்கு உயிருக்குயிரா யிருப்பவன் முருகன். வேறென்று பிரிப்பது ஆணவ ஸ்வரூபம். எல்லாம் ஒன்றென்று மார் தட்டுபவன் முருகன். இல்லை என்ற சொல்லிலும் இருப்பவன் முருகன்.

நல்ல பாவத்தை மனத்திலேற்றி உலகெல்லாம் ஒன்றென்ற பாவத்தை யுணர்த்துபவன் முருகனே. உள்ளத்திலுள்ள முருகனைத் தெரிந்து கொண்டால் உலகம் முழுவதும் ஒன்ருக நம்மவரென்று பார்க்கத் தெரியும். ஒரு பூதருமறியாத் தனி வீட்டிலிருப்பது இதுவே. உலகம் முழுவதும் பகவானுகப் பார்த்தால் இருட்டற்ற இராப் பகலற்ற இடத்தை அடையலாம். முருகா வென்ற ஞான விளக்கை உள்ளத்திலேற்றி வைத்தால், அந்த விளக்கு பிரகாசிப்பதால், எப்பொழுதும் இராப் பகலற்ற ஒளி மயமாய்விடும்.

ஆவேசம் வந்தவன் கண்ணை மூடிக்கொண்டு எதிர்ப்படும் எந்தப் பொருளையும் கவனிக்காமல், சென்று கோவிலில் கொண்டு காவடியை வைப்பது உள்ளத்திலுள்ள முருகா வெனும் விளக்கொளியால் தான். ஆவேசத்தை வெளிவிடாமல் உள்ளேயே அடக்கி வைத்து விட்டால், எப்பொழுதும் அகத்தில் பார்வையுடன் இருக்கலாம். கண்ணை மூடினுல் உலகத்தில் நடப்பவையனைத்தையும் உணரலாம். ஆவேசத்தை வெளியில் விடாமல் எப்பொழுதும் ஆவேசமா யிருக்கவேண்டும்.

ஒரு நிமிஷம் கண்ணை மூடி முருகனை நினைத்து அகக்கண் திறக்கப் பெற்றால் உலகமெங்கும் பார்க்க லாம். அகக்கண்ணைத் திறந்து பார்க்க முயற்சிக்க வேண்டும்.

"சரண கமலாலயத்தை அரை நிமிஷ நேரமட்டில்
தவமுவற தியானம் வைக்க அறியாத சடன்"

என்பது திருப்புகழடி,

அகக்கண்ணைத் திறந்து முருகனைப் பார்க்க முயற்சிக்காதவரையே குறிப்பிடுகிறது. மனமும் அறிவும் பாடுகின்ற தமிழின் பொருளில் கலக்க வேண்டும். எங்கு விஷமிருக்கிறதோ அதை யெல் லாம் உண்டுவிடுகிறான் சிவன். பரமசிவனைக் கூப் பிட்டால் நமது சில் விஷத்தையெல்லாம் அவன் உண்டுவிடுவான். ஆண்டவனிடம் மனச் சிறுமை யைப் பாராட்டி அவனைத் துதித்தால் நம் சிறுமையை நீக்கிப் பெரு வாழ்வு தந்துவிடுவான். எங்குமிருக்கும் பரமசிவன் நமது உள்ளத்திலு மிருக்கிறான். நீ உள்ளத்திலிருப்பது தெரியும் உன்னை வணங்கு கிறேன் என்று ஒரு முறை சொன்னால் போதும். உள்ளே யிருக்கப்பட்ட ஆண்டவனைக் கூப்பிடாம லிருந்தால் அவன் சில் விஷத்தைப் போக்குவ தெப்படி?

உண்மையான ஒன்றாக முருகனை நம்முள்ளே யுற்று நோக்கி வண்மையான வாசியோடு வாழ்த்தி யேத்தினால், இருந்த இடத்திலேயே தண்மை பெற லாம். தவமும் வந்து கூடும். தவத்தைத் தேடிக் கொண்டு நாம் போக வேண்டாம்.

"வேடர் மங்கைதனை நாடி புனமீதுவந்த சரணாரவிந்த
மதுபாட வண்டமிழ் விநோத மருள்வாயே"

என்றார் அருணகிரியார். வந்த சரணாரவிந்தமென்று கூறியதால், அன்பர்களிருக்குமிடம் தேடித்தானே வந்துக் கொண்டிருக்கிறான் ஆண்டவன் என்றறியலாம்.

உலகமெல்லாம் சரணாக, அடைவதற்குத் தக்க பெருமையும் காருணியமும், அன்பும் கொண்ட சரணாரவிந்தத்தைப் பாட வரம் கேட்கிறார் அருணகிரியார். தமிழென்பது மனதில் தோன்றும் ஒளி. நெருப்பு அசுத்தமான இடத்திலிருந்தாலும் அதன் சுத்தம் கெடாது. அசுத்தத்தையும் எரித்துச் சுத்தமாக்கித்தான் இருந்தபடியே இருக்கிறது. அது போல் தமிழாகிய ஒளியும் எத்தகைய இடத்தில் தோன்றினாலும் தன் தூய்மை கெடாது இருந்தபடியே இருக்கும்:

சிந்தை என்பது திரி. அத்திரியில், "ஆலமுண்டவராகிய ஜோதியங்கணரைப் பாடி, அவருடைய ஒளியை ஏற்றவேண்டும். அவ்வொளி அணையாமலிருக்க ஆர்வமெனும் நெய் வேண்டும்.

"அன்பே தகளியாக ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை இடுதிரியா—என்புருகு
ஞான விளக்கேற்றினேன் நாரணற்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்"

என்றார் ஆழ்வார். தமிழ் ஞான சுவரூபம், அதில் உலகனைத்திற்கும் ஜீவதாரமான ஜோதியிருக்கிறது. அந்த ஜோதியாகிய முருகனை நம் உள்ளத்தில் ஏற்றிக் கொள்ளவேண்டும்.

தேகத்தைச் சுத்தமாகச் செய்து விட்டால், அதிலுள்ள ஆவியைத் தன் நன்குடியாக்கிக் கொண்டு வாழ்வான் முருகன். அதுவே ஆவினன் குடி. உலகத்திற்கெல்லாம் பரமகுரு தக்ஷணமூர்த்தி. தக்ஷணமூர்த்தியே முருகன். உள்ளத்திலுள்ள டெலிபோனில், ஆண்டவனை மனத்தினுல் கூப்பிட்டாலும், ஓடிவந்து மனதுடன் பேசுவான். அவனுக்கு எங்கும் காது. ஆண்டவன் எப்பொழுதும் நம்முள்ளே பிரம்ம ஞானம் பேசிக் கொண்டிருக்கிருன். ஆசையான ஐவரும் அவன் பேச்சைக் கேட்க விடாமல் தான் பேசிக்கொண்டே யிருக்கின்றனராம். 'முருகா, வெனும் ஓரெழுத்தில், அவ்வைவரையும் அடக்கிவிட வேண்டும்.

ராதை யென்ற மனத்தை கிருஷ்ண னென்ற பரமாத்துமாவுடன் சேர்த்துக் காலையிலெழுந்த உடன் 'கிருஷ்ணு', 'முருகா', வென்று சொல்லிக் கொண்டிருந்தால், நாம் எந்த வேலை செய்துக் கொண்டிருந்தாலும் அவனே பேசுவான்.

———

PAGE NO- 14,15 MISSING IN ORIGINAL

# சங்கையும் தெளிவும்

1. கேள்வி :—அத்வைதம் என்றால் என்ன ?

உத்தரம் :—தன்னையே உலகாய் சிருஷ்டித்துக் கொண்டு, அவ்வுலகில் தானே உட்புகுந்து உலகை யெல்லாம் தானே ஆட்டிவைத்து உலகுக்கு உள்ளும் வெளியும் எங்கும் வியாபித்து நிற்கும் பொருள் தெய் வம் என்றும், அப்பொருள் ஒன்றே ஒன்று என்றும் அதைத் தவிர மற்றொரு பொருள் இல்லையென்றும் உபதேசிக்கும் கொள்கை அத்துவிதமாம். கடவுள் ஒன்றே என்று உரைப்பது அத்துவிதம்தான். ஏனெனில் மற்றையவெல்லாம் அக்கடவுளின் படைப் பாகும். எல்லாம் கடவுள் வியாபகத்துக்கு உட்பட் டிருப்பதால், பட்டினத்தார், 'கடவுள் உண்டென் றிரு' கடவுள் ஒன்றென்றிரு என்று பாடினார். இந்த அத்துவிதப் பொருளைத்தான் உபநிஷத் அக்ஷரம் என்று கூறும்.

2. தவம் என்றால் என்ன ?

திருமூலர் உபதேசிப்பது மனம் விரிந்து குவிந் தது மாதவம். மனமானது அன்பினால் எல்லா ஜீவ ராசிகளிடத்திலும் விரிந்து ஆண்டவனுடைய பாதார விந்தந்தில் குவிந்து பணிந்து நிற்பது தவம் என்றார். பக்தி செய்வதே தவம். "ஈசனெனக் கருதி எல்லா உயிர்களையும் நேசத்தால் நீ நினைந்து கொள்" என்று ஔவையார் போதிக்கின்றார். தெய்வத்தின் கண் மாறாத நேசங் கொள்வது பக்தியாகும். ஆனால், அந்த தெய்வத்தை எப்படி பாவனைக்குக் கொண்டு

வருவது எல்லா உயிர்களிலும் உறைவதாகத்தான் கொண்டு நேசம் பாராட்டவேண்டும். இது கண்ணன் உபதேசம். "ஸர்வ பூதஸ்திதம் யோமாம் பஜதி" என்றார். அனுபூதியில் அருணகிரியார் "காலைக் குமரேசனெனக் கருதித் தாளைப் பணியத் தவ மெய்தியவா" முருகன் சரணத்தைப் பணிவதே தவம் என்றார். சிவவாக்கியர், உலகத்திற்கு உண்மைக்கு உண்மையாகவும், சத்தியத்திற்குச் சத்திய மாயும், இருக்கப்பட்ட ஒன்றும் தெய்வத்தையே வாழ்த்தி ஏத்துவது தவம் என்றார்.—"உண்மையான தொன்ற தொன்று—உற்று நோக்கியும்முளே—வண்மையான வாசியோடு வாழ்த்தியேத்தவல்லிரேல்—தண்மை பெற்றிருக்கலாம்—தவமும்வந்து நேரிடும்—கர்மதர்மமான ஈசர் காக்ஷிதானும் காணுமே. பொய்மையாம் உலகு மெய்யை மறைக்கின்றது. அந்த தோற்றத்தைக் களைந்து எரித்து நபிந்து நித்திய மாய் நிற்கும் மெய்யை உணர முயற்சிப்பதும் தவமே யாகும். பொய்ம்மையைப் பெருக்கித் துன்பத்தை வளர்த்து ஸாதுக்களை ஹிம்சிப்பதில் இஷ்டங் கொண்ட அரக்கர்களைத் தொலைத்து சாதுக்களாகிய ரிஷி வர்க்கங்களைக் காக்க வேண்டும் என்ற விரதங் கொண்ட ராமனைக் கம்பர் "அந்தமில் தவத் தொழிலர்" என்று வகுத்தார். உலகங்களுக்கெல் லாம் நன்மையைப் பெருக்கிட தீவிர விரதங்கொண்ட மனப்பான்மை தவமேயாகும். தவம் உற்ற மனம் இருக்க அத்தவத் தொழிலை பூர்த்தி செய்யும் காரி யங்கள் எவையாயினும் அவையெல்லாம் தவமே என்று கருதப்படும். தவம் அற்றது அவமேயாகும். அவத்தை ஒழிப்பதே தவமாகும்.

**3. சகுண ரூபமாக தெய்வத்தை வழிபடுதல் பயன்படுமா? அல்லது நிர்க்குண ஸ்வரூபமாக வழிபடுதல் அவசியம் வேண்டுவதா?—**

தெய்வத்தை எந்த வகையிலும் வழிபடுதல் அவசியம் வேண்டுவது. இந்தத் தன்மையை ஆதாரமாகக் கொண்டு இருக்கின்றது இந்தக் கேள்வி. தெய்வத்தை நிர்குண ரூபமாக வழிபடுவதா? அல்லது சகுண ரூபமாக வழிபடுவதா? இவ்விரண்டு வழிகளில் எது சிறந்தது என்பதே இக்கேள்வி.

ஆத்மா அரூபம், தேகம் ரூபம், குணங்கள் அரூபம், குணங்கள் வசிக்கின்ற பொருள்கள் ரூபம். ரூபமே, அரூபம்தான். ரூபம் போன்று ஜடத்திலோ, அதாவது மண்ணினுலோ, கல்லினுலோ தசையினுலோ ஒரு ஆக்கம் ஏற்பட்டால் அதை ரூபம் என்கின்றோம். மலையிடிந்து வெறும் தரையாய் ஆய்விட்டாலும் மலையினுடைய ரூபத்தை நாம் மனதில் கொண்டுவந்து மனோ தர்மத்தால் பார்க்கலாம், பிரியமான மேன் மக்கள் இறந்துபோனுல் அவர்களுடைய ரூபத்தைப் படத்தில் பிடித்துவைத்துக் கொள்கின்றோம். அவர்களுடைய ரூபம் ஜடத்தில் காண்பதில்லை. மனிதனிடத்தில் ஒரு ஜட ரூபத்தைப் பார்க்கின்றோம். ஆனுல் அந்த ரூபத்தில் தோன்றப்பட்ட உயிரைக் காண முடிவதில்லை. சந்தோஷம், மலர்ச்சி, துக்கம், கோபம் இவைகளைத் தனித்துக் காண முடிவதில்லை. அன்பையும் அப்படியே. ஆகவே, ஒரு மனிதன் வெறும் ரூபமன்று அரூபமுமன்று. அவன் ரூபா ரூபம்.

அவனுடைய ரூபம் ஒன்றுயிருக்க அந்த ரூபத்தில் ஏறி அனேக தத்துவங்கள் விளையாடுகின்றன.

உயிர் விளையாடுகின்றது பிணமல்ல என்கின்றோம். அன்பு, மகிழ்ச்சி, கோபம் எல்லாம் ஏறி விளையாடு கின்றன. அதனால் அவனது ஜடரூபம் அனேக முகமாய் மாறுகின்றது. இராவணனுக்குப் பத்து முகம் என்பார்கள். மனிதனுக்கோ கணக்கிட முடியாத ரூபங்கள் முகத்திலும், சரீரத்திலும் காணப் படுகின்றன. ஆகையினால் ஒரு மனிதன் ரூபா ரூப மென்றுதான் சொல்லவேண்டும். அரூபமாயிருக்கும் ஆத்மாவும் உயிரும் ரூபமா யிருக்கும் ஜடப் பிண்டத் துடன்கூடி இசைவதே மானுடமாகும். ஆகையால் ஒரு மனிதனைக் கொண்டாடுவது, முன் தோன்றும் ரூபாரூபமாய் நிற்கும் மனிதனைத்தான்.

மனிதன் ரூபத்திலும் காணப்படுகின்றான். அவன் குணங்களாகிய அரூபத்திலும் காணப்படு கின்றான். இதுபோலவே ஏகமாயிருக்கும் தெய்வம் விச்வமாயிருக்கும் சிருஷ்டியைத் தன் உடலாகக் கொண்டுள்ளது. அந்த உடலுக்குத் தெய்வமே ஆத்மாவாக இருக்கிறது. தெய்வம் பூர்ணமாகையால் பூரணத்தின் இயல்பை அறியவேண்டும்.

> " பூர்ணமதம் பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ண முதஸ்யதே
> பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவா அவசிஷ்யதே "

என்பது உபநிஷத். தெய்வத்தைப் பங்கு கூறாகப் பிரிக்க முடியாது. அது தொட்ட இடமெல்லாம் பூர்ணமாக இருக்கும். ருசிபோலும் வாசனைபோலும் எங்கும் நிறைந்திருக்கும். ஆகையால் எல்லாவற்றிலும் பிரம்மமாகிய தெய்வம் உறைவதால், எல்லாருமே பூர்ண சுவரூபம். தெய்வ சுவரூபம். பட்டினத்தார்.

"கடல் நீரும ஆறும்போல் கலந்து கரைகாணேன்டி
உடலும் உயிரும்போல் உட்கலந்து நின்றேடி"

என்று பாடினர். உடலும் உயிரும் கலந்து நிற்கையில் உடலில் தொட்ட இடமெல்லாம் உயிரைத் தொட்ட இடமல்லவா!! அதுபோல் பிரகிருதி என்று சொல்லப்பட்ட பதினாலு உலகங்களிலும் பிரும்மம் உட்புகுந்து அந்த விசுவத்தின் ஆத்மாவாக இருப்பதால் உலகத்தில் எப்பொருளையும் எவ்விடத்திலும் உள்ளே பிரிவின்றிக் கிடக்கும் தெய்வ சுவரூபமாக நினைத்து வழிபடுகின்றவர்களுக்கு தெய்வத்தையே வழிபட்டதாகும். ஆண்டவன் நினைவு ஒன்று இருந்து விட்டால் வழிபடும் காலத்தில் உருவமாயினும் சரி அரூபமாயினும் சரி. இவ்விரண்டினும் உள்ளடங்கி நிற்கின்ற ஒரே கடவுள் ஏற்றுக் கொள்வார். ஆகையால், சகுண ரூபத்தை நினைந்து உலகெங்கும் ஒன்றாய் விளங்கும் தெய்வத்தை வழிபட்டால் அந்த வழிபாட்டை அந்த தெய்வமே ஏற்றுக் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை. எல்லாக் கோயில்களிலும் இருக்கும் மூர்த்தி சுவரூபங்களில் மிளிர்வது அந்தப் பூரணமான தெய்வம் ஒன்றே. ரூபபேதம் பலவா யிருக்கலாம் எல்லா ரூபங்களிலும் ஆடும் பரமாத்மா ஒன்றே. ஆகையால் சகுண உபாசனையில் வழிபடுவார்க்கு தெய்வம் குறைவின்றி அனுக்ரகிக்கிறது. நிர்க்குண சுவரூபமோ மானிடன் நினைப்பதற்கும் வழிபடுவதற்கும் கடினமானது. எந்த இடத்தில் மனிதன் வழிபடுகின்றானே, அந்த இடங்களிலெல்லாம் ரூபாரூப சுவரூபங்களாகத்தான் சாதாரணமாகக் காணப்படும். ஆகையால் மானிட

அறிவுக்கு ஏற்றபடி சகுண உபாசனையும், ரூப உபாசனையும் கலந்த வழிபாடே மிகவும் சிறந்தது. சுலபமானது. இந்த உபாசனையே அந்தப் பூரண பிம்பத்தில் பக்தனைக் கொண்டுபோய் விட்டுவிடும். நிர்க்குண உபாசனை மிகவும் கடினமானதால் அதில் நேரே முயற்சிக்காமல், சகுணத்தின் மூலமாக நிர்குணத்தை நாடுவதே உசிதம். ஆகவே இரண்டு வழிபாடும் ஒரே கடவுளைப் பற்றியதுதான். சகுண உபாசனை சுலபம். நிர்க்குண உபாசனை கடினம். இதற்கு மாறுபாடாகச் சொல்வதற்கு முடியாது. ஏனென்றால் ஆண்டவன் பூரணன். பூரணம் என்றால் எவ்விடத்தில் நின்றாலும் ஆண்டவனுடைய தத்துவம் எங்கே கலந்திருப்பினும் அந்த தத்துவ சம்பந்தத்தால் ஆங்கே தோன்றும் ஆண்டவன், பூரணனாக இருக்கிறான். கேட்ட பிரச்னத்திற்கு இதுவே உத்தரமாகும். காரணங்களும் பூர்ணமாகக் காட்டப்பட்டது. பகவான் பிரேம சுவரூபன். எல்லாப் பொருள்களிலும் நிறைந்து நிற்கும் அன்பின் தத்துவம். அவன் நாம பஜனையினால் அன்பின் வெள்ளத்தை சுலபமாய் பெருக்கிவிடலாம்.

———

# அன்பு வெள்ளமும்
# ஆனந்தக் கூத்தும்

அனுபவித்த விஷயங்களைப் பற்றி பேசவேண்டும். பேசியதை அனுபவிக்கவேண்டும். காதால் கேட்டு கண்ணால் கண்டவற்றை மனதால் நினைத்து அனுபவிக்க வேண்டும். பக்தனுக்கு ஆண்டவன் பிரதிநிதி. ஆண்டவனுக்கு பக்தன் பிரதிநிதி. அன்புக்கு பிரதிநிதி அன்பே. ஆண்டவனுக்கு நாம் கொடுக்கும் அன்பு சிறிதாயினும் அது அவனுடைய உள்ளத்தை ஊடுருவி வெளிவரும்பொழுது இமயமலையிலிருந்து வெளிவரும் கங்கா பிரவாகம் போலாய்விடும். பகவானுடைய ஒரு பாகம் கருணை மயமாகவும், மற்றொரு பாகம் ஜோதி மயமாயும் இருக்கிறது.

கருணை வடிவை 'ஹரி' யென்றும், ஞான ஜோதியைச் 'சிவ' மென்றும் சொல்லுகின்றனர். "கருது செம்பொன்னம்பலத்திலோர் கடவுள் நின்று நடிக்குமே. காவிரித்திரு நதியிலே யொரு கருணைமாமுகில் துயிலுமே" என்று பகவானுடைய சங்கர நாராயண ரூபத்தைப் பாடியுள்ளார் ஒரு பக்தர். பகவானுடைய இந்த ரூபத்தையே "அருள் பெருஞ்சோதி" "தனிப்பெருங் கருணை" என்றார் வள்ளலார். தனிப் பெருங்கருணை யென்பது நாராயணனையும், "அருள்பெருஞ் சோதி" பரமசிவனையும் குறிக்கும். "ஜோதியுணர்கின்ற வாழ்வு சிவம்" என்றார் அருணகிரியார். சிவம் என்றால் ஜோதி. சிவம் என்றால் மங்களம்.

"சிவம் சிவகரம் சாந்தம் சிவாத்மானம் சிவோத்தமம்
சிவமார்க்க ப்ரணேதாரம் ப்ரணதோஸ்மி சதாசிவம்"

என்றார் ஓர் பெரியார்.

மனிதனை உத்தமனாக்குவது சிவதத்துவமாகிய அருள் தத்துவந்தான். 'சிவம்' அருள் தத்துமாயும் மங்களமாயும் உலகெங்கும் நிறைந்திருக்கிறது. பூஜையின் முடிவிலே கற்பூர ஹாரதி செய்யும் போது,

"ஈசான சர்வவித்யானாம் ஈசுவர சர்வபூதானாம்
ப்ரம்மாதிபதிர் ப்ரம்மணோதிபதிர் பரம்மா சிவோமே
அஸ்து சதாசிவோம்"

என்ற மந்திரத்தைக் கூறுகிறோம்.

எல்லாக் கலைகளாகவும் எல்லா ஜீவராசிகளாகவும் இருப்பவன் ஈசுவரனே ஆதலால்; 'ஈசா' என்று பூஜித்து உலகத்திலுள்ள ரூபங்களெல்லாம் அவனுடைய கருணை யுருவங்களென்று நினைக்க வேண்டும்.

மஹா நாராயணத்தில் உலகத்தில் தெய்வம் எப்படி யிருக்கிறதென்று விளக்கியிருக்கிறது.

"சஹஸ்ர சீர்ஷம் தேவம் விஸ்வாக்ஷம் விஸ்வசம்புவம்"

என்பதே அவ்வாக்கியம்.

"உலகத்திலுள்ள தலைகள் எண்ணற்றவையாயிருந்தாலும் அத்தலைக்குள்ளிருக்கும் தலைவன் ஒருவனே. பார்க்கும் கண்களெல்லாம் அவனுடைய கண்களே. உலகமே நாராயணனுடைய ஸ்வரூபம்" என்பதே இதன் கருத்து. [பிரம்மா தலையிலெழுதிய

எழுத்தை அழிப்பதற்காகத் தலையிலேயே உட்கார்ந்திருக்கிறானும் பகவான். விதியழிந்துபோய் விட்டால், கதிவந்து விடுகிறதாம். விதியற்றவன் பரமசிவன்போல் ஆடிக் கொண்டிருப்பானும்.

"ஒடும் எடுத்து அதளாடையும் சுற்றி உலவி
வீடுகள்தோறும் பலி வாங்கியே விதியற்றவர்போல்
ஆட அருள்கொண்டு அம்பலத்தேநிற்கும் ஆண்டிதனைத்
தேடும் கணக்கென்னகாண் சிவகாம சுந்தரியே"

என்றார் பட்டினத்தார்.

குழந்தைகள் எப்பொழுதும் ஆடிக்கொண்டும் கூத்தாடிக் கொண்டும் இருக்கின்றன. காரணம் கேட்டால் குழந்தைக்குத் தெரியாது. அதனியல்பு கூத்தாடுவது. ஏனெனில் அதற்குக் கவலையில்லை. விதியற்று விட்டால் கவலையற்று ஆனந்தமாய்க் கூத்தாடிக் கொண்டிருக்கலாம். விதியற்றவனாகி சிவன் ஆடிக்கொண்டே யிருக்கிறானும்.

விதியற்றுக் கவலை யொழிந்தால் குழந்தை போல் நாமும் ஆடமுடியும். ஆனால், குழந்தை தன்னைப்பற்றி நினைப்பதில்லை: ஆனால், நாமோ நம்மைப்பற்றி பெரிதாய் நினைத்துக் கொண்டிருக்கிறோம். அதனால், மண்டைக் கொழுப்பேறிவிடுகிறது. மற்றவரைச் சிறியவரென்று நினைக்கும்பொழுது மண்டைக் கொழுப்பு வலுத்துவிட்டதென்று அறிய வேண்டும். அந்த எண்ணம் வரும்பொழுது சிறியவ ராயினும் அவர் காலில் விழுந்து வணங்கவேண்டும். இவ்வாறு நான்கு முறை செய்தால் மண்டை கொழுப்பு போய்விடும். கவலையற்றவன் எப்போ-

தும் ஆனந்தமாய் குதித்துக் கொண்டிருப்பான். நடராஜா ஆடும்பொழுது அவரோடு பதினுலுலகங் களும் ஆடுகின்றனவாம்.

பிரம்மனும் விஷ்ணுவும் முப்பத்து முக்கோடி தேவர்களும் பூத வேதாளங்களும் நாதகீதங்களும் அஷ்ட லக்ஷ்மிகளும் ஆடுகின்றனவாம். விதியற்றவர் ஒருவர் ஆடினுல் உலக முழுவதும் ஆடும். அருண கிரியார் முருகனுடைய நடனத்தைப் பார்க்க விரும் பினர். "மயிலுமாடி நீயாடி வரவேணும்" என்ருர். முருகன் நடனக் கோலத்துடன் காக்ஷி தந்தான் கூடவே முப்பத்து முக்கோடி தேவர்களும் ஆடினர் களாம். அருணகிரியார், "ஏனப்பா உன் அப்பா ஆடினுல்தான் எல்லாம் ஆடுகின்றன, நீ ஆடும் போதும் அதேபோல் ஆடுகின்றனவே" என்று கேட்டார். அதற்கு முருகன் "உனக்கிது தெரி யாதா? நான் வேறு அப்பா வேரு? நாங்களிரு வரும் ஒருவரேயன்ரே? நான் ஆடினுல் அவர் ஆடு வார், அவர் ஆடினுல் நான் ஆடுவேன்" என்ருன் முருகன். பதினுன்கு உலகிற்கும் சிருஷ்டிக்கும் அடிப்படையான தத்துவம் ஆதிசேஷன். அது தாய் தத்துவம். தாய்தான் தாங்க முடியும். ஆதிசேஷன் பாற்கடலில் மகாவிஷ்ணுவைத் தாங்கு கிருன். பால் எது? பகவானை நினைத்து நினைத்து அதனுல், அன்பர்கள் இதயத்தில் பொங்கும் அன்பு தான் பால் அன்பு வெள்ளமே பால். அன்ப ருடைய தூய்மையான இதயத்திலிருந்துவரும் பாலே வெள்ளப் பால். காம குரோதங்களற்ற அன்பர் களின் இதயத்திலூறும் அன்பு வெள்ளத்தில்

ஆனந்தமாய்த் தூங்கிக் கொண்டிருக்கிறான் நாராயணன். எங்கும் ப்ரசூதியாகப் புகுந்து ஊடுருவி நிற்கும் தத்துவமே விஷ்ணு.

"விநாயகரை "சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்ப்புஜம் ப்ரஸன்னவதனம் த்யாயேத் சர்வ விக்னோப சாந்தயே'' என்று தியானிக்கிறோம். எங்கும் வியாபித்திருக்கும் பொருளுக்கே விஷ்ணு என்று பெயர். வெள்ளை வெளேரென்றிருக்கும் பாற்கடலில் துயில்பவன் விஷ்ணு. வெள்ளை எருதின் மேலேறி ஊர்பவன் பரமசிவன். நம் உள்ளத்தை வெள்ளை எருதாகவோ, வெள்ளக் கடலாகவோ செய்துவிட்டால் விஷ்ணுவும் சிவனும் வந்து விளையாடுவார்கள். இப்போது எருமை மாடாக இருக்கிறது எருமை மாட்டின் மேல் யமன்தான் வருவான். ஆனால், பக்தர்களுக்கு யமன் கிடையாது. ஆதலால், எருமைபோல் கடினமாயிராமல் அன்புக் கசிவுடனிருக்க வேண்டும். பசுமையாயுள்ள பொருள்களுக்குத்தான் கசிவுண்டு பசுமையாயுள்ள மரத்தில் பாலூறுவதுபோல மனத்திலே அன்புப்பாலூற வேண்டும். அதுதான் பசுமை. பச்சை மஞ்சளைப் பசு மஞ்சளென்பர். அதுபோல் பால் தரும் மாட்டைப் பசு வென்கின்றனர். 'பசுமை, என்ற சொல்லுக்கு நீர்மை (அல்லது) ஈரம் என்று பொருள். இரக்கமுள்ள மனதை ஈர நெஞ்சென்பர். தாய்மார்கள் முகத்திலே மஞ்சள் பூசுவது வழக்கம். அது அவர்களுள்ளத்திலுள்ள பசுமையைக் காட்டுகிறது. மஞ்சள் பூசிய முகம் தாயின் அடையாளம். மஞ்சள் பூசா விட்டால் அன்பு வறண்டுவிடும்

வைக்கோல் போலாகிவிடும். அப்பொழுது வழியில் போகும் எருமை மாடு மேய்ந்துவிடும். (அதாவது மஞ்சள் பூசிய முகத்தைப் பார்ப்பவருக்குத் தாய் என்ற எண்ணந்தான் தோன்றும். பௌடர் பூசி வறண்டுள்ள முகமோ மனப் பண்பாடற்ற மனிதர் களின் ஆசைக்கிடமா யிருக்கும்) அதனுல்தான் பெரியோர்கள் மஞ்சள் பூசும் வழக்கத்தை ஏற்படுத்தி யுள்ளார்.

ஒரு விதத்தில் வைக்கோல் போலிருக்கவேண்டும். மற்றெருவிதத்தில் வைக்கோல் போலிருக்கக் கூடாது. ஆசாபாசங்களற்ற மனம் வைக்கோல் போலாய்விடும். தாய்க்குச் செல்வமிருந்தாலும் இல்லாவிட்டாலும் அன்புக்குக் குறைவில்லை. அது போல் வைக்கோல் காய்ந்தாலும், பசுமையாயிருந் தாலும் பயன்படும். ஆதலால், ஆசாபாசங்களற்று வைக்கோல்போ லிருக்கவேண்டும். அன்பு வறண்டு வைக்கோல்போ லிருக்கக்கூடாது. ஆசாபாசங்கள் உலர்ந்த மனத்தில்தான் அன்பூற்ற மெடுக்கும். ஆவி பிரிந்த அன்பர்களின் மண்டையோட்டையே மாலையாக அணிந்துக் கொண்டிருக்கிறுனும் பரமசிவன். ஆவி பிரிந்த உடலை நெருப்பிலிட்டு எரிக்கின்றனரே, அதன் கருத்தென்ன? எரித்த உடல் தீயுருவினனுகிய பரமசிவனுக்கல்லவோ அர்ப் பணமாய் விடுகிறது. பிரிந்த ஆவி வேறு உடலில் புகுமேயன்றி விட்ட உடலில் மறுபடியும் புகாது. சரீரத்தை நெருப்பிலிடலாகாது, பெட்டியில் வைத்து மூடிவைக்கவேண்டும், பிறகு ஒரு நாள் ஆண்டவன் வந்து எழுப்பிவிடுவான் என்பர் சிலர். இவர்

களுக்குப் பிறப்பதும், இறப்பதும் என்னவென்று தெரியாது. சித்தரொருவர் இதைத் தெரிவித்திருக்கிறார்.

கறந்தபால் முலைப்புகா கடைந்த வெண்ணெய் மோர்புகா
உடைந்துபோன சங்கினோசை உயிர்களும் உடற்புகா
விரிந்த பூ உதிர்ந்த காயும் மீண்டும்போய் மரம்புகா
இறந்தவர் பிறப்பதில்லை இல்லை இல்லை இல்லையே.

இதில் இறந்தவர் என்பது 'நான்', 'எனது' என்ற எண்ணம் இறந்து உள்ளத்துறவு பெற்றவரையே குறிக்கும். 'துறவு' என்பதைப்பற்றி பட்டினத்தார் கீழ்க்கண்ட பாட்டில் கூறியுள்ளார்.

"அறந்தானியற்றும் அவனிலும் கோடி இல்லம்
துறந்தான் அவனில் சதகோடி உள்ளத்
துறவுடையோன் மறந்தான் அறக்கற்று அறிவோடிருந்து
இறந்தான் பெருமையை என் சொல்லுவேன்
[கச்சியேகம்ப நாதனே.

தருமம் செய்பவன் சிறந்தவன். அவனைவிட இல்லத்தைத் துறந்தவன் சிறந்தவன். அவனைவிட ஆயிரம் மடங்கு சிறந்தவன் இல்லத்திலிருந்துக் கொண்டே உள்ளத்தில் பற்றற்றிருப்பவன். நல்வினை தீவினை இரண்டையும் சமமாய் மதித்து 'நான்' 'எனது' என்னும் எண்ணம் இறந்தவன் இவர்களனைவரிலும் மிகப் பெரியவனும் எப்படியென்றால், குழந்தைகள் ஈசுவரனுடையவை; மனைவி இறைவனுக்குரியவள் இவர்களைக் காப்பாற்றி ஆண்டவனுக் கர்ப்பணம் செய்யவேண்டியதுதான் என் கடமை; ஆண்டவனுடைய பணியைச் செய்வதற்காக ஏற்பட்டதே இல்வாழ்க்கை;

தன்னலத்திற்காக ஏற்பட்டதல்ல. ஸ்திரீ ஜாதி என்பது லக்ஷ்மியினுடைய அமிசம். உலகத்திலுள்ள எல்லாக் குழந்தைகளிடமும் சமத்துவமான அன்பு காட்டக் கூடியவள் எவளோ; அவளே தாய் ஜாதி. அவள் கன்னியா யிருந்தாலும், விதவையாயிருந்தா லும், பிள்ளை பெறு விட்டாலும் தாய்தான். பெண் ணாய்ப் பிறந்தவர்களுக்குக் குழந்தை யில்லாவிட் டால் முருகனை அணைப்பதெப்படி? அன்பைப் பெருக்குவதெப்படி? ஆனந்தத்தை யடைவதெப் படி? ஆனால், வயிற்றில் பிறந்த குழந்தையைத் தானெடுக்கவேண்டு மென்பதில்லை. உலகத்திலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும்தான் தாய் என்று நினைக்க வேண்டும். அவ்வாறு நினைத்திருப்பவள் ஜெகன் மாதாவின் ஸ்வரூபத்தை அடைந்து விடுவாள். எல்லாக் குழந்தைகளையும் தன் குழந்தை யாக நினைப்பவளுக்கு முருகனே குழந்தையாய் வருவான். உலகத்திலுள்ள எல்லாக் குழந்தை களையும் ஒரே குழந்தையான கந்தனுகவோ, கண்ண னுகவோ, நினைத்தெடுத்தால் அக்குழந்தையிடம் அன்புண்டாகும். கந்தனைத் தன் குழந்தை என் றெடுத்த கார்த்திகைப் பெண்களுக்குப் பால் சுரந் தது. உள்ளத்தில் அன்பிருந்ததால் உடலில் பால் சுரந்தது. கந்தனைச் சிந்தையில் கொண்டவர் களுக்குப் பால் உள்ளத்தில் சுரந்தாலென்ன? உடலில் சுரந்தாலென்ன? மனம் எண்ணுவது போல்தான், செயலும் நிகழ்கிறது. பகவானிடம் ஊறும் அன்புக்கு அருள் என்று பெயர். பக்த னிடம் ஊறும் அன்புக்குப் பக்தி என்று பெயர்.

உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளும் ஸ்திரீகள் தான். புருஷன் பகவான் ஒருவனே. 'புருஷன்' என்ற சப்தத்திற்குப் பூரணன் என்று பொருள். எல்லா உலகங்களிலும் நிறைந்திருக்கும் தத்துவமே பூரணம். உலகெங்கும் நிறைந்து பூரணனு யிருக்கும் பகவானைத் தன் மனத்தில் கொண்டவர் ஆணுயிருந் தாலும் பெண்ணு யிருந்தாலும் சுமங்கலிகள் தான். அவர்களே, கற்புடையவாகள் பகவானை நினைக்காம விருப்பவர் யாராயிருந்தாலும் அவர்கள் விதவைகள் தான். ஆதலால், மக்களாய்ப் பிறந்தவரனைவருக் கும் உள்ளத்தில் அன்புப்பால் சுரக்க வேண்டும். பால் சுரப்பவர்களே பசு. ஜீவராசிகளாகிய பசுக் களுக்குத் தலைவன் பரம புருஷன். பசுமை நிறைந்த கார்த்திகேயர்கள் முருகனை மடியிலெடுத்தனர். பசுமையைச் சம்பாதித்துக் கொள்வதெப்படி? முருகனைக் குழந்தையாக நினைத்து மடியிலெடுத்தால் பசுமை வந்துவிடும்.

ஆசாபாசங்கள் மடிந்ததே மடி. அன்புள்ள மனம் பட்டுப்போல் மெதுவாயிருக்கும். அந்தப் பட்டினுல் முருகனுகிய குழந்தையை உள்ளத்தில் மூடி வைத்திருக்க வேண்டும். மனம் முருகனிடம் ஈடுபடுவதற்குப் பஜனை செய்யவேண்டும். உலக மெங்கும் நிறைந்த கடவுளை இதோ கடவுள் என்று காட்டும் வேலைக்காரர்கள்தான் பக்தர்கள். பக்தர் கள் 'நான்' 'எனது' என்ற ஆணவமற்ற ஏழைகள் அத்தகைய ஏழைகளின் பங்காளனே முருகன்.

---

# பக்தி ஊறும் இடம்

அருணகிரியாருக்கு முருகனை 'குஹா' என்று அழைப்பதில் மிகவும் விருப்பம். ஏனெனில் மயில் 'குஹா' என்று கத்துகிறது! 'குஹா' என்பது ஓங்கார பீஜத்தின் ஒலி. அகர, உகர, மகரங்களுடன் சேர்ந்தது ஓம்காரம். அக்னி பீஜத்துடன் ரகரம் சேர்ந்து முருகா வென்ற சப்தமுண்டாயிற்று.

ஆசையிற் கைகலந்து சுமா சுமாபவ
சாகரத்திலழுந்தி எழா எழாதுளம்
ஆறெழுத்தை நினைந்து குஹா குஹாவென
வகைவராதோ

என்று கதறியுள்ளார் அருணகிரியார்.

உலகத்தில் பலவித சுவைகளுண்டு. அவற்றில் எந்தச் சுவையை அதிகமாய் விரும்பினாலும் அவற்றாலுண்டாவது துன்பமே. சிறு குழந்தைகளிடம் பணத்தைக் கொடுத்தால் அவை அது வேண்டும் இது வேண்டுமென்று மிட்டாய்க் கடையில் வைத்திருக்கும் தின்பண்டங்களைத் தின்று வியாதியை வரவழைத்துக் கொள்ளும். அதுபோல் விவரம் தெரியாத மனிதன் உலகத்தில் அது வேண்டும். இது வேண்டும் என்று ஆசைப்பட்டுத் துன்பத்தை விலைக்கு வாங்கிக்கொள்கிறான். ஆசையினால் வருவது துன்பமே; சிற்சிலருக்கு இன்பம் வருவதும் பின்வரும் துன்பத்தை நன்றாய் அனுபவிப்பதற்காகத்தான். இன்பத்தை நன்றாய் அனுபவிக்கலாம், அனுபவம் கெடுதலல்ல. ஆனால், அனுபவித்த

பிறகு சென்ற அனுபவம் வேண்டுமென்று ஆசைப் படக்கூடாது. இன்பமோ, துன்பமோ, எது வேண்டுமானாலும் வரட்டும். இவை இரண்டிற்கும் மேலான முருகனிருக்க இவை என்னைப் பாதிக்காது என்றிருக்கவேண்டும். மகாசக்தியைக் கையில் பிடித்தவனாகிய வேல்முருகனை நினைத்து வினையை ஏமாற்றிவிடலாம். ஆனால், இன்ப துன்பத்திற்குக் காரணமாகிய பிறவிக்கடலில் அழுந்தலாகாது.

காதல் என்பது உயிரைப் பொருத்ததேயன்றி உடலைப்பொருத்ததல்ல.

"காத லொருவர் கருத் தொருமித்து
ஆதரவு பட்டதே யின்பம்"

என்றார், ஔவையார். கணவன் மனைவியாகிய இருவர் கருத்தும் முருகனிடத்திலுள்ள காதலால் ஒருமித்திருக்க வேண்டும். உலக வாழ்க்கையில் செய்யவேண்டிய கடமைகளை ஒழுங்காகச் செய்ய வேண்டும், இதுவே இல்லறமாகும்.

ஞான சம்பந்தரும், குலசேகராழ்வாரும் செய்த பக்தியையே, காதல், என்றனர்.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை மெய்ந்நெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாத னாமம் நமசி வாயவே"

என்றார், ஞானசம்பந்தர்.

"தூராத மனக்காதல் தொண்டர் தங்கள்
குழாம் குழுமித்திருப் புகழ்கள் பலவும்பாடி
ஆராத மனக்களிப் போடழுத கண்ணீர்
மழை சோரநினைந் துருகியேத்தி நாளும்

சீரார்ந்த முழவோசை பரவைகாட்டும்
 திருவரங்கத் தரவணையில் பள்ளிக்கொள்ளும்
போராழி யம்மானைக்கண்டு துள்ளிப
 பூதலத்திலென்று கொலோ புரளுநாளே''

என்று கூறியுள்ளார் குலசேகராழ்வார்.

பகவத் பாவம் (பகவானுடைய நினைவு) உள்ளிருந்தால், எதைக்காதலித்தாலும் கிடைக்கும். கணவன் மனைவியாகிய இருவர் மனமும் ஒத்திருப்பது இன்பந்தான். ஆனால், அதைவிடச் சிறந்த பேரின்பம் தருவது. ஆண்டவனுடைய அனுபவமே.

பகவான் எல்லா ஜீவராசிகளின், இதயத்திலுமிருந்தாலும், உணர்ச்சியில் அவனிருப்பது தெரிவதில்லை. "அவனை உணர்ச்சியில் பிடித்து நிறுத்திவிடுகிறேன், என்றால் முடியாது. உணர்ச்சிக்கும் மேற்பட்டவன் ஆண்டவன். அவன் கருணைகூர்ந்து அனுக்கிரஹித்தால்தான் உணர்ச்சியில் வருவான். பஜனை செய்தால் அவன் கருணையுண்டாகும். என் பக்தர்கள் எங்கு என் புகழைக்கூறிப் பாடுகிறார்களோ அங்கு நானிருக்கிறேன் என்றார் கிருஷ்ணன் நாரதரிடம். ஆகையால். 'நான் எனது, என்ற அகங்காரத்தை அடியோடொழிக்க வேண்டும். அங்ஙனமின்றி, "முருகா! நான் ஒருவனிருக்கிறேன் என்பது உனக்குத் தெரியவில்லையா? இவையெல்லாம் என்னுடையவை, ஏற்றுக்கொள், எனறால்,'' "நீ அகங்காரப் பிண்டம். உனக்கே இடமில்லையே'' என்னையேன் கூப்பிடுகிறாய்?'' என்று போய் விடுவான். ஆணவமின்றி, எல்லாம் இறைவனுடை

யதே என்று அன்புடன் கொடுக்கும் எதையும் ஏற்றுக் கொண்டருள்புரிவான் இறைவன்.

மனத்திலுள்ள 'நான், எனது, என்ற அகங் கார மமகாரங்களாகிய குப்பைகளைப் போக்கி நன்ருகச் சுத்தமாக வைத்து பகவானைக் கூப்பிட் டால், அவன் உடனே வந்துவிடுவான். முருகா! நீ வரவேண்டுமென்ற ஆசையால் மமகாரத்தைப் போக்கிவிட்டேன்; இனி இங்கு மமகாரத்திற்கிட மில்லை. நமஸ்காரந்தான் இருக்கிறது, என்கிருன் பக்தன்.

நமஸ்காரத்தின் கருத்தென்னவென்று பார்ப் போம். உடம்பைக் கீழே தள்ளுவதின் மூலமாக 'நான்' எனது, என்ற எண்ணத்தைக் கீழே தள்ளி விடுவதே நமஸ்காரத்தின் கருத்து. இதைத்தெரிந்து நமஸ்காரம் செய்யவேண்டும். இப்பொழுது நமஸ்கா ரத்தின் கருத்து விளங்கிவிட்டது. இனி முருகனிடம் போவோம். ஆறெழுத்தாகிய "சரவணபவா" வென்ற நாமத்தை நினைத்து குஹா, குஹா வென்று சொல்லுவோம். இந்தக் குஹநாமத்தில் அருணகிரியாருக்கு மட்டும் விருப்பமென்பதில்லை. ஆதிசங்கரருக்கும் அளவற்ற பிரேமையுண்டு. அவர் தாம் பாடிய புஜங்கத்தில் அடிக்கடி குஹநா மத்தை பிரயோகித்திருக்கிருர். முருகன் மயில் மேலேறி விளையாடுகிருனும். மயில் என்பது ஓம் காரம். அதற்குள்ளிருந்து விளையாடும் பொருளே முருகன். மயில் சின்முத்திரையைப் போலிருக் கிறது. ஓங்காரத் துள்ளொளிக்குள்ளே முருக னிருக்கிருனும். பெருவிரலுடன் ஆள்காட்டி விரலைச் சேர்த்து மற்ற மூன்று விரல்களையும் தனியாக

நிறுத்தி வைத்திருப்பதே சின்முத்திரை. தக்ஷிண மூர்த்தி சின் முத்திரையைக் காட்டித்தான் சனகாதி யருக்கு உபதேசித்தார். அந்த முத்திரையின் ரூப மாகயிருக்கும் மயிலாகிய ஓம்காரம் பதினுலுலகங் களுக்கும் அரசனுகிய முருகனை அறிவிக்கும் முத் திரை அல்லது மயில். உலகெலாம் நிறைந்த பிரம் மத்தின் சுவரூபமாகிய எல்லா தெய்வங்களும் இருக்குமிடம் ஓம்காரந்தான். அதுவே எல்லா தெய்வ சுவரூபங்களையும் குறிக்கும் முத்திரையு மாகும்.

"பணியுமடியார் சிந்தைமெய்ப் பொருளதாக நவில்
சரவண பவாவென்று—வற்கரமுமாகிவளர்
பழநிமலைமேல் நின்ற சுப்பிரமணியா

என்றழைத்துள்ளார் அருணகிரியார். உலகம் நிறைந்த பொருள் எங்கும் நிறைந்திருக்கும் காலத் தில் எல்லாரூபங்களும் அதன் ரூபமாகையால் அந்த பிரம்மம் பக்தர்களின் மூலமாகவும் கோயிலில் பிரதிஷ்டை செய்திருக்கும் சிலா விக்கிரகங்களின் மூலமாகவும், அருள் செய்கிறது. எங்கும் நிறைந் திருக்கும் பிரம்மத்தை உங்களால் பார்க்கமுடியாது.

பணியுமடியார் சிந்தையில் பார்க்கலாம். அப் படிப் பார்க்க முடியாவிட்டால், கோவிலில் ப்ரதிஷ்டை செய்த விக்கிரகங்களிடம் பார்க்கலாம் என்றும் இந்தப் பாட்டின் மூலமாக உணர்த்துகிறுர் அருணகிரியார். ப்ரதிஷ்டை என்பது அடிவாரம். ஆகாசம் என்பதை ஒருவராலும் காணமுடியாது. நாம் பிறப்பதற்கு முன் ஆகாசத்தைத்தான்

ஆதாரமாகக் கொண்டிருந்தோம். பிரம்மம் ஆகா சத்தையே தனக்கு அஸ்திவாரமாகப் போட்டுக் கொண்டது. மூச்சைப் படைத்து மூச்சின் மூலமாக ஜீவராசிகளின் இதயத்தைத் தனக்கு இருப்பிட மாகக் கொண்டது பிரும்மத்தினுடைய மூச்சு தான் சக்தி அந்த மூச்சே வேதம். பகவானைப் பற்றி பக்தர்கள் பாடியுள்ள பாட்டுக்களெல்லாம் பகவானுடைய மூச்சேயன்றி வெறும் பேச்சல்ல. காற்றை உண்டாக்கிய பிரம்மம் அந்தக் காற்றி லிருந்து அக்கினியைப் படைத்தது அக்னியில்லா விட்டால் உயிர் வாழமுடியாது. அக்னியிலிருந்து வருவதுதான் பேச்சு. பகவானைப் பற்றி பேசும் பேச்சுக்களெல்லாம் காயத்திரி மகா மந்திரமாய் விடுகிறது. பகவான் எல்லா ஜீவராசிகளின் உடலி லும் வாழும் தீயாக இருப்பதால், அப்பர் "எரிய லால் உருவமில்லை" என்றார். அக்கினிதான் உலகத்தையுண்டாக்குகிறது. கலியாண காலத்தில் ஹோமத்தீயை வளர்த்து எனக்குக் குழந்தை பிறக்கவேண்டுமென்று பிரார்த்திக்கிறான் மண மகன். தசரதர் செய்த புத்திரகாமேஷ்டி யாகத் தின் மூலமாகத்தான் இராமன் பிறந்தான். தாய்க்கும் தகப்பனுக்கும் அக்னியிருந்தால்தான் குழந்தையை உண்டுபண்ணமுடியும். ஆனால், அந்த அக்னி வாழும் தீயாக இருக்க வேண்டுமேயன்றிப் பாழும் தீயாக இருக்கலாகாது. சினம் என்பது பாழும் தீ. பெண்கள் கருப்பமாயிருக்கும் காலத்தில் தெய்வ ரூபங்களுடைய படத்தைப் பார்த்துக்கொண் டிருந்தால், அந்தத் தெய்வ ரூபங்களே கருவிலிருக் கும் குழந்தைக்கும் உண்டாகும். ஆதலால்,

கருப்பமாயிருக்கும் பெண்கள் ஆண்டவனிடம் அன்பை வளர்த்தால், தெய்வீக லக்ஷணங்கள் பொருந்திய பிள்ளைகள் பிறக்கும். சினத்தை வளர்த்தால் இராவணுசுரன் போன்ற பிள்ளைகள் பிறப்பர். இதுபோல் நல்ல முறையில் கண்ணனும், கந்தனும் போன்ற தெய்வீகக் குழந்தைகளைப் பெற்று தெய்வீக பரம்பரையை வளர்ப்பதற்காகத் தான் இல்லறத்தை ஏற்படுத்தியுள்ளார் பகவான். நல்ல குழந்தைகளைப் பெற்று உலகத்திற்குக் கொடுக்கவேண்டும் என்ற முறையில்தான் இல்லறம் நடக்கவேண்டும். அழியும் சரீரத்தில் அழியாப் பொருளாகிய முருகனிருக்கிருன். அழியாப் பொருளைத் தெரிந்துகொண்டால் மரணமில்லை. அதுவே மெய்ப்பொருள்.

'கூகாவென வென்கிளை கூடியழப்
போகாவகை மெய்ப்பொருள் பேசிவா''

என்ருர், அருணகிரியார். இந்த உடல் நீயல்ல. உடலிலிருக்கும் தெய்வமே நீ என்றுபேசி உணர்த்திஞனும் முருகன். மெய்ப்பொருளை 'அக்ஷரம்' என்று சொல்லுவர். அக்ஷரம் என்ருல் அழிவில்லாதது என்று பொருள். "சரவண பவாவென்ற அக்கரமுமாகி வளர் பழநிமலை மேல் நின்ற சுப்பிரமண்யா" என்ருர் அருணகிரியார். அக்ஷரம் என்ற சொல்லே தமிழில் அக்கரம் என்று மாறியது. பகவானுடைய நாமங்களாகிய அக்ஷரங்கள் அழியாப் பொருளாகி உலகத்தில் வளருகின்றன. பிரம்ம ஞானிகளுக்கு ஆயிரம் பசுக்களைத் தானமாகக் கொடுப்பதாகச் சொல்லியிருந்தார் ஜனகர். அதன்படி அப்பசுக்

களைப் பெற்றுக் கொள்வதற்காக வந்த யக்ஞவல்கி யரை நோக்கி கார்க்கி என்பவள் உலகத்தைப் படைத்து அதன் குறுக்கும், நெடுக்கும் மேலும் கீழுமாகப் பிணைத்திருப்பது என்ன என்று கேட்டாள். "அக்ஷரம்" என்று பதிலளித்தார் யக்ஞவல்கியர். முற்காலத்தில் பெண்கள் அனைவரும் படித்தவராயிருந்தனர். ஆனால், அவர்கள் படித்த படிப்பு தற்காலத்துப் படிப்பைப்போல் வயிறு வளர்க்க மட்டும் பயன்படுவதல்ல. பிரம்ம ஞானத்தை உண்டாக்கும்படியான உபநிஷத்தையே அவர்கள் கற்றார்கள். பெண்கள் அவசியம் படிக்கத்தான் வேண்டும். ஏனெனில் அவர்களுக்கு ஆண்களைவிட அனுபவ அறிவு அதிகம் இந்த தத்துவத்தைத் தான் அருணகிரியார் திருப்புகழின் மூலமாக உபதேசித்தார். மகான்களுடைய வாக்கியத்தில் வருவதெல்லாம் பொய்யல்ல. அவர்கள் பாட ஆரம்பித்த உடனே உள்ளிருக்கும் மெய்ப்பொருளாகிய சத்ய தேவதை உண்மையைக் கூறிவிடுகிறது. பகவானை நினைக்காமல் வீண் பேச்சு பேசும்போது பொய் தேவதையாகிய "பிசாசு' பேசுகிறது.

"மெய்விடா நாவுள்ள மெய்யரு ளிருந்துநீ
மெய்யான மெய்யை எல்லாம்
மெய்யென உணர்த்தியது மெய்யிதற் கையமில்லை

என்றார் தாயுமானவர்.

சாதுக்கள் முருகனைப் பூஜித்து "ஸத்யம் என்ற தேவதைக்கு நாக்கைக் கொடுத்துவிடுகின்றனர். அவர்கள் வாயில் வருவதெல்லாம் சக்தியவாக்கே,

லக்ஷ்மணன் சூர்ப்பனகையின் மூக்கையறுத்தான். ரத்தத்தில் இராம நாமம் கலந்துவிட்டது இராமனிடம் கோபத்துடன் அவனைப்பற்றி இராவணனிடம் கூறினாள். ஆனால், மனதில் விரோதமிருந்தபோதிலும் சத்ய தேவதை இராமனுடைய உண்மை நிலையையே கூறிவிட்டது. "அந்தமில் தவத் தொழிலர் வணங்குதலையுடையார்" என்றாள்.

அதேபோல் வாலியின் இதயத்தில் இராம நாமம் பாய்ந்தவுடன் அவனுடைய இரத்தத்தில் இராம நாமம் கலந்துவிட்டது. உடனே இராமனுடைய உண்மை சுவரூபத்தை உணர்ந்து விட்டான்.

*"ஏவுகூர் வாளியால் எய்துநீ நாயினேன்
ஆவிபோம் வேளையில் அறிவுதந் துதவினாய்
மூவர்நீ, முதல்வநீ, முற்றும்நீ, மற்றும்நீ
பாவம்நீ தருமம்நீ பகைவன்நீ உறவுநீ

பகவானுடைய நாமங்களை வாயினால் மட்டும் சொன்னால் போதாது. அந்த நாமங்களை இரத்தாசயத்துடன் சேர்க்கவேண்டும். இரத்தத்தில் "இராமா" என்ற நாமம் கலந்தால்தான் சித்தம் தெளியும் என்பதையே இந்த வரலாறு உணர்த்துகிறது. அடியார்கள் கூடி பகவானுடைய நாமங்களைச் சொல்லிக் கொண்டிருக்கும் காலத்தில், அத்தெய்விக நாம சப்தங்கள் அவர்களைச் சுற்றியுள்ள ஆகாசத்தில் நிறைந்துவிடுகிறது. ஆகாசத்தை மூடியிருப்பது காற்று. வைக்கோலைப் போட்டு கொளுத்தும்போது அதனருகிலிருந்தால்

மூச்சுக் காற்றுடன் வைக்கோல் புகையும் கலந்து உள்ளே செல்வதுபோல, அடியார் கூட்டத்தின் அருகிலிருப்பவர் மூச்சை உள்ளேயிழுக்கும்போது அக்காற்றுடன் கலந்த நாம சப்தமும் உள்ளே சென்று இரத்தத்தில் நிறைந்து விடுகிறது. அதாவது எஞ்சிக்ஷன் (ஊசியின் மூலமாக ஏற்றும் மருந்து) செய்த மருந்து இரத்தத்தில் கலந்துள்ள வியாதிக்குக் காரணமாகிய விஷக்கிருமிகளை அழித்து இரத்தத்தைச் சுத்தம் செய்வதுபோல, மூச்சுக் காற்றுடன் உள்ளே சென்ற பகவானுடைய நாம சப்தங்களும் இரத்தத்தில் ஊறியிருந்த கெட்ட சுவபாவங்களையும், கெட்ட எண்ணங்களையும், அழித்துச் சுத்த இரத்தமாக்கி, நல்ல எண்ணங் களையும் பக்தியையும் உண்டாக்கிவிடுகிறது. ஆத லால், பக்தர்களின் சூழ் நிலையிலிருப்பவன் முதலில், பக்தியில்லாதவனுக இருந்தாலும். நாளடைவில் பக்திமானுய் விடுகிருன். பக்தர்கள் எப்பொழுதும் பகவானுடைய நாமங்களைச் சொல்லிக்கொண்டிருப் பதால், அந்த நாம சப்தங்கள் அவர்களைச் சுற்றி ஒரு தெய்வீகச் சூழ்நிலையை ஏற்படுத்திவிடுகின்றன. அதனுல்தான், தொண்டரோடு கூட்டு கண்டாய் என்று தாயுமானவரும், "சூரில்கிரியில் கதிர்வேலெ றிந்தவன் தொண்டர் குழாம் சாரில் கதியன்றிவே றிலைகாண்" என்று அருணகிரியாரும் கூறியுள்ளனர்.

பக்தி நமக்குச் சீக்கிரம் பயன தர வேண்டு மானுல், உலகெலாம் நிறைந்து எல்லா ஜீவராசி களுக்குள்ளும் இருப்பவனுகிய முருகன் நம் இதயத்தி லிருக்கும் நம் முருகனே, என்ற நம்பிக்கையுடன்

இருக்கவேண்டும். அதாவது "உலகெங்கும் நிறைந் திருக்கும் பிரம்மமே நம் இதயத்திலுமிருப்பவன்" என்று நினைத்து பக்தி செய்தால் சீக்கிறத்தில் பயன் கிடைக்கும்.

விதியானது மறைந்துதான் துன்பத்தைத் தரும். விதியின் பயனுன காலன் மறைந்துதான் உயிரைக் கொண்டுபோகின்ருன். இராமன் காலஸ்வரூபியான பிரம்ம மாகையால் மறைந்திருந்து வாலியையடித் தான். விதியின் பயனுகிய மரணம் வியாதி முதலிய துன்பங்கள் சரீரத்திற்கேயன்றி ஆத்மாவுக்கல்ல. ஆதலால், விதியின் பயன்படி வாலியின் சரீரத்தை யடித்தான்; அவன் ஆத்மாவுக்குக் கதியளித்துக் காத்தான்.

## சிவகாமமும் அவகாமமும்

ரஸத்துவமும் சமத்துவமும் கலந்ததே சமரஸம் உலகெங்கும் நிறைந்திருக்கும் ரஸமே சமரஸமாகும். சமரஸமென்பது ஐம்புலன்களால் அனுபவிக்கப் படும் ரஸங்கள் போன்றதல்ல. ஏனெனில் ஐம் புலன்களால் அனுபவிக்கப்படும் ரஸங்கள் சில காலம் மாத்திரம்தான் இனிக்கும். எல்லாக் காலங் களிலும் கிடைக்காது. ஒருவருக்கு இனிப்பது மற் ருெருவருக்குக் கசப்பாகயிருக்கும். சமரஸம் அத்தகையதல்ல. எல்லாக் காலங்களிலும் எல் லாருக்கும் ஒரேவிதமான தெவிட்டாத இன்பத் தைத் தரும். பகவான் உலகெங்கும் நிறைந்த சமரஸமாயிருக்கிருன். இது தெரிந்துவிட்டால்

வேதாந்தமும் சித்தாந்தமும் தெரிந்துகொள்ள வேண்டாம். சமரசத்தில் இருந்துவிட்டால் போதும். இதையே தாயுமானவர்

> "சந்ததமும் எனதுசெயல் நினதுசெயல்
> யானெனும தன்மை நினையன்றியில்லாத்"
> தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த சமரச
> சுவபாவ மிதுவே.

என்று உணர்த்தியிருக்கிறார். அதாவது எனது செயலனைத்தும் நினது செயலே. நானெனும் தன்மையும் உனையன்றி வேறில்லை என்றார். நான் எனது என்பதை இழந்தவர்களுக்கு சமரஸ சுவ பாவம் தோன்றுமாம். ஆனல் பக்தர்களுக்கும் 'நான் நான் என்ற ஒன்று தோன்றுகிறதே அந்த நான் ஆணவத்தினுடைய நானும் கோபத்தி னுடைய நானும், அல்ல அந்த நான் ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது. அவன் பணீ செய்ய வும் அவனை அனுபவிக்கவுமே அந்த நானிக்கிறது. ஆகையால் அதனல் துன்பமுண்டாகாது. தன்னை ஆண்டவனுக்கு அர்ப்பணம் செய்து நான் உன்னடிமை நான் உன்னைப் பாடுவேன் உனக்குப் பணி செய்வேன் என்று சொல்வது ஆணவமல்ல. ஆண்டவனை விட்டுப்பிரித்து நான் வேறு அவன் வேறு உலகம் வேறு என்று பேதிக் கும் நானே ஆணவம். உனக்கு அடிமையென்கிற நான் வந்துவிட்டால் அங்கு ஆணவத்துக்கிடமில்லை. நான் என்ற வாசனையிருக்கிறதே அது எதற்கென் ருல் பகவானை சேவை செய்வதற்கு.

"பித்தாபிறைச்சூடி பெருமானே அருளாளா
எத்தான் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணை தென்பால் வெண்ணை நல்லூர்
[அருள துறையுள்
அத்தா உனக்காளாயினி அல்லேனெனலாமே"

என்றார் சுந்தரர்.

ஆண்டவனை மறந்த நாள் இறந்த நாள். நினைத்த நாளே பிறந்த நாளாகும். "சிவனார் மனம்குளிர உபதேச மந்திரமிரு செவிமீதிலும் பகர் செய் குருநாதா!" இதுவரை ஊனை வளர்த்தேன், வீணில்வளர்த்தேன், அவத்தில் வளர்ந்த இந்த தேகத்தை உன் அருளால் மாற்றி தவத்தில் வளர்க்கவேண்டும்.

சிவகாம சுந்தரிதன் வரபாலா! கந்தா! உலகில் நடப்பவையெல்லாம் நின்செயலே என்று நினையாமல் விருதாவில் அலைந்துழன்றேன். நீ அஞ்சேல், அஞ்சேல் என்று அபயம் தந்து என் அறிவாகிய அகத்தை வளர்த்து இடர்களைத் தொலைக்க வேண்டும் என்று வேண்டியுள்ளார். ஒரு காமமுமில்லாத அம்பாளுக்கு சிவகாமம் மட்டும் உண்டாம். சிவனோடு அர்த்த நாரியாக இருக்கும் அம்பாளுககு சிவகாமசுந்தரி என்று பெயர். காமம் அல்லது ஆசையை அழிக்க வேண்டுமென்பர். உலகப் பொருள்களில் ஆசையை வளர்ப்பது அவகாமம். அந்த ஆசை துன்பத்தை உண்டாக்கும். அந்த ஆசையைச் சிவத்தின்மேல் திருப்பி அதை வளர்க்க வேண்டும். அவகாமத்தை ஒழித்து சிவகாமத்தை வளர்ப்பதே தவம்.

உலகப்பொருள்களின் மேலுள்ள ஆசையால் பகவானை வேண்டுவது தவமாகாது. இராவணன் சூரபதுமன் முதலியவர்கள் எல்லா உலகங்களையும் ஆளவேண்டுமென்ற ஆசையினுல் பகவானைக் குறித்துத் தவம் செய்தனர். அவர்களுடைய தவம் அவமாய் முடிந்தது. ஆனுல் பகவானிடம் ஆசையை வளர்க்கவேண்டும். அதற்காகவே ஆண்டவன் ஆசை என்ற பெரும் செல்வத்தைத் தந்தான். அது அவனுக்கே உரியது. ஆகையால் ஆசையை பகவானுக்கே அர்ப்பணம் செய்ய வேண்டும். சிவத்தை நினைத்துத் தவத்தை வளர்க்காமல் ஆசையைப் பற்றி நினைத்துக்கொண்டிருப்பதுதான் அவம்.

ஞான சம்பந்தமூர்த்தி முருகனுடைய அவதாரம். சிவனும் சக்தியும் கலந்த தத்துவமே ஞான சம்பந்தன். ஆறுசுடர்கள் சிவத்தினிடமிருந்து வெளிவந்து ஷண்முகனுய் அவதாரம் செய்தன. உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளும் சிவத்தினிடமிருந்து வெளிப்பட்ட சுடர்களே தீயெறியும் பொழுது அதனிடமிருந்து வெளிப்பட்ட சுடர் தீயிலேயே விழுந்துவிடும். அதுபோல், சிவத்தினின்று வெளப்பட்ட ஜோதிச் சுடர்களே ஜீவன்கள் கடல் நீர் ஆதித்தன் வெம்மையால் உருப்பெற்று உப்பாயிற்று. நீருடன் கலந்தால் நீர்வேறு உப்பு வேறு என்று பிரிக்கமுடியாது இரண்டும் ஒன்ருய் விடுகிறது. அதுபோல் 'சிவசிவ' என்று சொல்லிக்கொண்டிருந்தால் சிவத்துடன் கலக்கலாம். ஞானத்தோடு சம்மந்தமுடையவர் ஞான

சம்பந்தர். ஞானம் என்பது சிவம். நம்மைச் சுற்றி எல்லா திசைகளிலும் சிவன் இருக்கிறான். அவனை நினைந்து அந்த ஜோதியை உள்ளத்தில் ஏற்காமலிருக்கலாமா? எங்குமுள்ள ஜோதி நம் உள்ளத்தில்மட்டும் பிரகாசிக்காமலிருக்கும் காரணமென்ன? அடுத்த வீட்டில் விளக்கு நன்றாயெரிகிறது. நம் வீட்டு விளக்கு மாத்திரம் ஏற்றிவைத்தாலும் அணைந்து விடுகிறதே; ஏனென்றான் ஒருவன், அதற்கு மற்றொருவன், அடபைத்தியக்காரா! உன் விளக்கின் திரி ஈரமாயிருக்கிறதே அதனால்தான் எரியவில்லை என்றானும். அத்திரியை உலர்த்திப் போட்ட பிறகு விளக்கு நன்றாய் எரிந்ததாம். சிந்தையெனும் திரியில் ஆசாபாசமாகிய ஈரமிருந்தால் சிவமாகிய ஜோதி சுடர்விட்டு எரியாது. ஆகையால் சிந்தையிலே ஆசாபாசமான ஈரத்தை உலர்த்திவிட்டால் சிவமாகிய ஜோதி சுடர்விட்டெரியும். சிந்தையில் சலனத்தின் ஈரமிருக்கலாகாது. ஆனால் மனதில் மட்டும் அன்பெனும் எண்ணெயின் தாரை வற்றலாகாது. உலகத்திலுள்ள ஜீவராசிகள் கஷ்டப்படும்போது அவர்களிடத்தில் இரக்கமாகிய ஈரம் இருக்கவேண்டும். அந்த ஈரம் இல்லாவிட்டாலும் வளர்க்கவேண்டும் நெஞ்சில் ஈரமாகிய இரக்கமில்லாதவரே அரக்கரெனப்படுவர் சிந்தையில் உலகப்பற்றாகிய ஈர்த்தை உலர்த்தி சிவமாகிய (அன்பு) ஈரத்தைப்பெருக்கிக் கடல்போல வற்றாது வளர்த்துவிட்டால். சிவஒளி தானே வந்து பற்றிக்கொள்ளும். "பற்றற்றார் பற்றாகப்பற்றியிருந்தாண்டி குற்றமறுத்தாண்டி கூடியிருந்தாண்டி" என்றார் பட்டினத்தார். வாழும் தியாகிய

சிவஒளியை ஏற்றினால், சிந்தையைக் கெடுக்கும் (அழிக்கும்) ஆசாபாசங்களாகிய பாழும் தீ தணிந்து விடும். உலக ஆசையானது பாழும் தீ இதை ஏற்றினால் சிந்தை, ஆகுலம் என்ற தீக்கிரையாகும். அதனால் உலகப் பொருள்களைப்பற்றும் ஆவலான நெருப்புக்குச்சியால் ஏற்றக்கூடாது.

குளிர்ந்த தன்மை நிறைந்து பகவான் திரு நாமங்களாக விளங்கும் "ஓம் ஹரீம் நமசிவாய, ஓம் நமோ நாராயணாய, ஓம் ஹரீம் நமோர் குஹாய, ஓம் நம ஷடாக்ஷராய என்னும் அற்புத நாமங்களை ஓதி ஓதி உள்ளத்தில் உரு வேற்றினால் உலகெங்கும் வாழும் தீ நன்றாயெரியும். இது சாதாரண தீ அன்று சொக்கப்பனை சொக்கனாகிய ஜோதியை யேற்றும் பனை சொக்கப்பனை ஒவ்வொரு சிந்தையும் ஒரு திரி. அதில் உள்ள உலக ஆசையான ஈரத்தை உலர்த்திய வர்கள் தொண்டர்கள். அக்கூட்டத்துடன் சேர்ந்து சிவ நாமத்தை சிந்தையில் ஏற்றிய, தொண்டர்க ளெல்லோருடைய சிந்தையும் ஒன்றாகி விடுவதால் சிவஜோதி மயமாகி சொக்கப்பனையாய் விடும். நாவிலே, குருநாதா ஷண்முகநாதா என்று ஏத்தி னால் அச்சொல்லின் ஜோதி சிந்தையிலே பற்றிக் கொள்ளும். "சிவகாம சுந்தரிதன் வரபாலகந்தா" என்று ஏத்தி, நடப்பதெல்லாம் நின்செயெலென நினைத்து நினைத்து அவத்தை மறந்து சிவத்தை நினைந்து விளக்கேற்றி விடு. பிச்சை வாங்கித்திரி யும் சிவனுக்கு ஆடுவதில் மிக்க விருப்பமாம். "ஓடும் எடுத்து அதளாடையும் சுற்றி உலாவிமெல்ல வீடுக டோறும் பலிவாங்கியே விதியற்றவர்போல் ஆடும்

அருட் கொண்டிங்கம்பலத்தே நிற்கும் ஆண்டிதன்னை
தேடும் கணக்கென்ன காண் சிவகாம சவுந்தரியே,"
சிவகாம சவுந்தரியே! பைத்தியக்காரனைப் போல்
வீடுகள் தோறும் பிச்சையெடுத்து அலையும் இவனை
ஏனம்மா தேடுகிறாய்? என்று கேட்கிறார் பட்டினத்
தார். அம்பாள் சிவனையே தேடினாள். தவம் செய்
தாள். சிவன் உருமாறி வந்தான். அவளுக்குத்
தன்னிடமுள்ள ஆழ்ந்த அன்பை அறிந்து மகிழ்ந்து
ஆடினான் விளையாடினான் என்றால் மூவுலங்களும்
வாழ்வதற்காகத்தான். அம்பாளுடைய பக்தியைச்
சோதிப்பதற்காக சிவன் உருமாறி வந்தான்
என்பது தவறு. அம்பாளை அவனுக்குத் தெரியாதா?
அவளுக்குத்தான் சிவனைத் தெரியாதா? அன்பர்
களிடத்திலிருந்து ஆண்டவன் ஒருகணமும் பிரிவ
தில்லை. அம்பாள் அவனை நினைத்து தவம் செய்யும்
பொழுது அவள் உள்ளத்திலேயே இருப்பவனை
அவன் வெளியில் வந்துவிட்டான். பகவான் பக்தர்
களுடைய ஆழ்ந்த அன்பை அனுபவிப்பதற்காகத்
தான் உருமாறி வருவது.

தெய்வ குற்றம் அதனால் துன்பம் நேரிடுகிறது
என்பர் சிலர். தெய்வம் கருணைவடிவானது. குற்றம்
குறைகளற்றது. தெய்வத்தின் கருணை ரூபத்தை
அறியாதவர்கள் தெய்வம் கண்ணைக்குத்தும் என்று
பலபல சொல்வார். உலகத்தில் துன்பங்கள் நேரிடு
கின்றனவே எனலாம்; ஆனால் ஆண்டவன் காட்டும்
வழி ஒன்றிருக்கிறது. அவன் நம்பிக்கையெனும் கை
கொடுத்து நம்மை அழைத்துப் போகிறான். அவன்
கைப்பிடியில் நில்லாமல் "நான் நான்" என்று

துன்பக் குழியில் போய் விழுவதால் கஷ்டம் உண்டாகிறது. அவன் வள்ளி தெய்வயானையாகிய இருதாயுடன் வந்து நல்வழிகாட்டி அஞ்சாமல் என்னிடம் வாருங்கள் என்று அழைக்கிருன். நாம்தான் அவன் உள்ளிருந்து கூறுவதை அலக்ஷியம் செய்து ஆசை காட்டும் வழியில் சென்று அவதிப்படுகிறோம். இது ஆண்டவன் குற்றமா? எல்லாம் அவன் செயல் என்று கடமையைச் செய்தால் கஷ்டங்கள் வராது. வந்தாலும் அவற்றின் துன்பம் மனதைப்பற்ருது. அவனிடம் நினைவில்லாமல் எத்தனை விருதமிருந்தாலும் பயனில்லை. நினைவினுல்தான் ஆண்டவனைப் பற்றவேண்டும். அவத்தில் விழுந்த எனக்கு தவத்தை அளிக்கவேண்டும் என்று கதறினுல் முருகன் வந்து நம் நினைவில் தங்கிவிடுவான். நமது மனம் அவனுக்கே சொந்தமானது. நம்மிடத்தில் அதை அதிகாரத்துடனே கேட்கிருனு? இல்லை. யாசகமாகவே கேட்கிருன் அதை அவனுக்குக் கொடுக்காமல் அவதியுறுகிறோம். அவனுக்கு அளித்துவிட்டால் தன்னிடத்தினின்றும் வேறுபடாத ஏகபோக வாழ்வைத்தந்து விடுவான். "நீ வேறெனுதிருக்க நான் வேறெனுதிருக்க நேராக வாழ்வதற்குன் அருள் கூருய்" என்று வேண்டியிருக்கிருர் அருணகிரியார் முருகனை நினைத்து அறுபத்து நான்கு கலைகளையும் அவனுக்கு அர்ப்பணம் செய்து நீ வேறு நான் வேறு என்று இருக்காமல் ஒன்ருக வாழ்வதற்கு அருள்தாராய், என்று வேண்டினுர்.

உலகத்தில் எங்கும் பகவான் இருக்கிருன் என்ருலும், அவனை உணருவதற்குச் சில சூழ்நிலைவேண்டும். அதுவே தொண்டர் சூழ்நிலை. கோவிலுக்குச் சென்ருல் அங்கிருக்கும் தெய்வீகச் சூழ்நிலை பகவானை உள்ளபடி உணர்த்தி விடுகிறது.

"நீடார் ஷடாதரத்தின் மீதே பரா பரத்தை நீ காண் என அனைச்சொல்—அருள்வாயே, என்ருர் அருணகிரியார் உடம்பில் மூலாதாரம் முதலிய ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ஆதாரமும் ஒவ்வொருமலை ஒவ்வொரு மலையைக் கடந்ததும், அங்கு முருகன் இருந்து "அப்பா! வந்தாயா" என்று நம்மை அணைத்து, மேலே ஏற்றிவிடுகிருன். ஒவ்வொரு மலையிலும் ஒவ்வொரு முகமாயிருக்கிருன். இதை

"ஏறுமயிலேறி விளையாடும் முகமொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்த்தமுகமொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே,

என்று ஐந்து ஆதாரங்களிலும் உள்ள முருகனின் குணங்களை (முகங்களை)ப் பற்றிக் கூறிக்கொண்டே வந்த அருணகிரிநாதர், ஆருவது ஆதாரத்தில் வந்ததும்—வள்ளியை மணம் புரிய வந்தமுக மொன்றே என்ருர் ஆருவது ஆதாரத்தில் வள்ளியாகிய ஜீவனுடன் கலந்து, என்னைக்காண வேண்டுமென்று ஆசைப்பட்டாயே; இதோ காண்!! என்று தன்னுடன் சேர்த்து ஆட்கொள்கிருன்.

"பல மலைப் பெருமாள்" என்றும் குன்றுதோ றாடுபவன் என்றும் முருகனைக் கொண்டாடுகிறார். மலைகளிலெங்கும் விளையாடும் ஒருவனாகிய முருகன் ஆறுவது ஆதாரத்தில் ஜீவனையாட்கொண்டு அதற் கும் அப்பாலுள்ள தனது சுயஞ்ஜோதி உருவைக் காட்டி அருள் செய்கிறான். ஒவ்வொரு ஜீவர்களின் மனமும் ஒவ்வொருமலையாகும். அந்தப் பல மலை களிலும் உள்ள பெருமான் முருகன். அவனை வேண்டி அப்பா!! குறத்தி கணவா! மகா கருணைவடி வாகிய தாயின் மடிமீது விளையாடுபவனே! காமனை எரித்தவனது கண்மணியே! என்னையும் உன்னு டன் சேர்த்து ஆளலாகாதா? என்று அழைத்தால் அப்பா உனக்காகவே காத்திருக்கிறேன். என்று ஆறாதாரத்தையும் கடத்தி அதற்கு மேலான தணிகைக்கும் அழைத்துச் சென்று தனது திவ்ய ஜோதியுடன் சேர்த்துக்கொள்வான். அந்த முருக னுடைய. சரணாரவிந்தத்தில் வீடு கட்டிக்கொள்ள வேண்டுமென்று நினைக்கிறார் அருணகிரிநாதர் ஐந்து பூதங்களும், நான்கு கரணங்களும். அந்தியும் பகலும் அறியாது அந்த ஒரு வீடு பெறவேண்டும். அதற்காக உன் சரணாரவிந்தத்தைப் பாடச் செந் தமிழை தருவாய் என்று வேண்டுகிறார். அந்தச் சரணம் நம் மனத்தில் நிற்க, கந்தன் அருளை நாட வேண்டும்.

———

# தனி வீடு

அறிவும் அறியாமையும் கடந்த அறிவு முருகன் திருமேனி, அதுவே சிவஞானத் திருமேனி. சிவ ஞான சுவரூபமாயிருக்கப்பட்ட பகவானுடைய திவ்ய ரூபத்தை அருணகிரியார்.

"அறிவும், அறியாமையும் கடந்தஅறிவு நின்திருமேனி
யென்றுன் அருண சரணாரவிந்தமென்று அடைவேனோ"

என்ற திருப்புகழடியால் குறிப்பிடுகிறார். யாரோ ஒருவர் நம்மைப் பெற்றார். நாம் பிறந்தோம்.

"பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாத தன்மை வந்தெய்திலேன்" என்றார் சுந்திரமூர்த்தி நாயனார். பிறப்பற்றாலல்லவோ பிறந்த பயனுண்டு. பிறக்கவும் இறக்கவும் நம்மால் முடியாது. இரண்டும் இறைவன் கையிலிருக்கிறது. பிறந்ததினால் பெறவேண்டியதொன்றுண்டு. அது பிறப்பறுவதே, பிறக்கும் வரையில் தாயுடன் ஒன்றாயிருந்த மனிதன் பிறந்த உடன் தாய்வேறு, தந்தைவேறு, நீ வேறு நான் வேறு என்ற வேற்றுமை பெறுகிறான். நீ பிறன், என்று ஒதுக்குவதனாலேயே பிறப்பு ஏற்படுகிறது. உள்ளக்கதவு திறந்துவிட்டால் வேற்றுமை மயக்கம் நீங்கிவிடும். அந்தக்கதவு திறக்க முருகன் வரவேண்டும். மெய்ப்பொருளைக் கண்டால் பிறப்பற்றிருக்கலாம். பிறப்பறுவதெப்படி? உலகனைத்தும் ஒன்றென்றிருப்பதே பிறப்பறும் வழி, உலகெங்கும் ஒரே வாழ்வாயிருப்பவன் முருகன். உலகெலாம் ஒன்று என்ற அத்வைக

ஞானத்தால் தான் அவனை அடையலாம். அவன் அத்வைத ஞானப்பரச் சுடரொளி. அவன் சுவரூபத்தை அருணகிரியார்.

" சுருதிமுடி மோனஞ்சொல் சிற்பரமஞானசிவ
சமயவடிவாய்வந்த அத்துவிதமான
பரசுடரொளியதாய் நின்றநிட்கள சொரூபமுத
லொருவாழ்வே'

என்று திருப்புகழில் குறிப்பிடுகிறார். கார்த்திகேயன் யார்? அவன் எங்கிருக்கிறான்? என்ற கேள்விக்கு, அவன் இந்த உலகம் முழுவதும் உள்ள சகல வாழ்வையும் ஒரு வாழ்வாக நடத்துபவன் என்று பதிலளிக்கிறது இந்த திருப்புகழ்.

முருகன் அருணகிரியாருக்குபதேசித்தானும். என்ன உபதேசித்தான் "ஒரு பூதருமறியாத தனி வீட்டில் உரையுணர்வற்றிரு" என்றானும். ஒரு பூதருமறியாத தனி வீடு நம் உள்ளமே பிறருடன் பேசினல் பிறப்புவரும். உள்ளமாகிய தனி வீட்டில் நம்மவனுகிய முருகனைக் கண்டு அவனுடன் பேசினல், பிறப்பறும். நான் எனது என்ற உணர்ச்சியற்று எல்லாம் முருகன், எப்பொருளும் அவனுடையவை, என்ற உணர்ச்சியிருக்கவேண்டும்.

ஆசார்யார் செந்தூர் சென்றார். ஷண்முகன் சந்நதியில் நின்றார். தன்னை மறந்தார். எல்லாவற்றையும், தான் கற்ற கலைகளையும் இழந்து ஒன்றுமறியாமல் நின்றார். இதுவே அறியாமை. உலகத்திலுள்ள ஒன்றும் புரியாமலிருப்பது ஜடத்தன்மை

பள்ளிக்கூடம் போய் கல்வி கற்பது இந்த ஜடத் தன்மை நீங்குவதற்காகத்தான். ஆண்டவன் சந்நிதானத்தில் நிற்கும்பொழுது, கற்ற கல்வியும் நான் என்ற எண்ணமும் போய்விடும். நான் என்ற இடத்தில் துல்லியமான சிவ சுவரூபம்தான் நிற்கும். சங்கரருக்கு நானற்றவுடன் சிவஞான சுவரூபம் வந்துவிட்டது. நானென்பதோர் மறைவு. (திரை) அது எங்கும் நிறைந்த சிவஞான சுவரூபத்தையறிய விடாமல் அறிவை மறைத்திருக்கிறது. முருகனிடம் சென்றவுடன் அத்திரையற்றுவிட்டது. எல்லாமான சிவஞான சுவரூபமாய் நின்றூர்.

"தன்னைமறந்தாள் தன்னுமம் கெட்டாள்
தலைப்பட்டாள் தலைவன் தாளே,
அன்னையும் அப்பனையும் அன்றேநீத்தாள்"

என்றூரோர் பெரியார். ஆண்டவனைக் கண்டவுடன் தன்னையும் தன்னுமத்தையும் மறந்து தலைவனுடைய தாளில் ஒன்றிவிட்டாளாம் அன்னையும் அப்பனையும் நீத்தாளாம். ஆனல் வேறு தாய் தந்தையரைத் தேடவில்லை. பிறப்பற்றூளாம்.

மேலேயுள்ள தெய்வத்தினியல்பு கீழேயுள்ள தொண்டரை நாடிச் செல்லும். நானற்றுத் தாழ்ந்த உடன் அவன் அருள் வெள்ளம் பாய்கிறது. அவ்வாறு, அருள்வெள்ளம் பாயப்பெற்ற ஆசார்யர் "என்னையறியாமல் என் உள்ளத்திலிருந்து சொற்கள் பொழிகின்றன வென்றூர். ஆண்டவனை நினைத்து அந்த அனுபூதியினுல் உள்ளத்திலிருந்து பொழிவதே சொற்பொழிவு.

ஓங்கார மயில் மேலிருக்கும் ஜோதி புருஷன் முருகன். பரிமேழலகன் என்பது முருகன் பெயரே. வேதங்கள் மஹாவாக்கியங்களினல் தெய்வம் எது வென்று சொல்லுகிறதோ. அது என் முன்னல் வந்து நிற்கிறதென்ருர் ஆசார்யர்.

'நான் ரூபத்திலும் அரூபத்திலுமிருக்கிறேன்" என்ற பொருளுள்ள மகா வாக்கியத்தில் மறைந்திருக்கும் பகவான். நான் உனக்கு ரூபமாய் தரிசனம் தருகிறேன் என்ருனும் சங்கரர்க்கு அவன் மனத்தைக் கவரத்தக்க அழகுவாய்ச்தவனும். மஹாத்துக்களின் சித்தங்களேயே தனக்கு வீடாகவுடையவன் இந்தக் கருத்தையே, மஹாவாக்கிய கூடம், மனேஹாரி தேகம், மஹாத்சித்தகேஹம் என்ற தொடரால் குறிப்பிடுகிருர். ஆசாரியர் தன்னே மறந்த நிலேயில் முருகனே பஜியுங்கள் என்ருர்.

"தன்னேமறந்து, தலேவாசல்தாள்போட்டு,
உன்னேநினேந்து உறங்குவதுஎக்காலம்,

என்ருர் பட்டினத்தார்.

சமமாயிருக்கப்பட்ட தவமாகிய மனேநிலேயில், ஆசாபாசங்களாகிய கள்வர் உள்ளே புகாமலிருக்க ஐம்புலன்களாகிய தலேவாசல்களேத் தாள்போட வேண்டும். 'முருகா' வென்று நினேத்தால் அவன் தானே வந்து தாள்போட்டு விடுவான். தன்னே மறந்தால் இருதயத்தின் தாள் திறக்கும். அங்கே முருகனேக் காணலாம். பிறகு அவனுடன் கலந்து றங்கலாம். ஓங்காரத்துள்ளொளியில் முருகனுருவம் கண்டு தூங்கலாம். உன்னே நினேத்தால்

இதயமாகிய அவனிருப்பிடத்தின் தாளே முருகன் போட்டுக் கொண்டுவிடுவான். வருகின்ற யமனை நோக்கி முருகா வென்ருல் யமன் முருகனுகமாறி விடுவான். முருகனை நினைக்காமல் தன்னை நினைத்துச் செறுக்கடைந்த சூரபத்மனுக்கு முருகன் முதலில் யமனுகமாறி அவன் ஆணவத்தைக் கொன்று, பிறகு முருகனுக மாறி ஆட்கொண்டாணும். பகவானை நினைத்திருக்கும் நிலையே பிறப்பும் இறப்பும் அற்ற நிலை. அந்த நிலையிருப்பவருக்கு மரணமில்லை. விரோதிகளையும் முருகனுக நினைக்க வேண்டும். தன்னைவிடாமல் பஜனை செய்யும் தொண்டர்களுடன் கூடவேயிருக்கிருன் பகவான்.

புவனங்களின் மடப்பாவையாகிய, உண்ணுமுலைத் தாயின் ஞானப்பாலுண்டு பால்மணம் மாருதவாயுடன் திருஞான சம்பந்தருருவில் உலகத்தைக் காக்க வந்த முருகன், சிவஞானப் பாலையே தன் தாயாகிய உமையிடம் சாப்பிட்டான். ஒருவரும் உண்ணுத முலையுடையவளாம் உமை ஒருவரும் உண்ணுத முலை பக்தி (அல்லது) அன்புதான். அதை இறைவன் தவிர வேறு எவருக்கும் கொடுக்கமுடியாது. கொடுத்தால் அனர்த்தமாக முடியும். அதையே உலகத்துக்குக் கொடுத்து துன்பமடைபவர் அரக்கர் பகவானுக்குக் கொடுத்து இன்பமடைபவர் பக்தர். இந்த பக்தி (அல்லது) அன்பெனும் முலையையே சுந்தரேசுவரருக்குக் கொடுத்தாளாம் மீனுக்ஷி. அவரைக் கண்டவுடன் மூன்ரும் முலை மறைந்ததென்பதின் கருத்திதுவே.

வெட்டப்படாமல் தானே வளருகின்ற சக்கிர மாகிய மேருவென்பது மனிதசரீரமே. அந்தச் சரீரத் தில் அகண்டமெங்குமான லிங்கத்தை வேறொன்றை யும் கருதாத நெஞ்சினுல் இறையாத தீர்த்தமாகிய மனே ஆகாசத்திலிருந்து பெருகும் அன்பு தீர்த் தத்தைவிட்டு அபிஷேகம்செய்து சதாகால பூஜை செய்யவேண்டும்.

மனமாகிய ஆட்டை சிவமாகிய தெய்வத்திற்குப் பலி, கொடுத்து விட்டாராம் தாயுமானவர். ஆவியை நைவேத்தியமாக அளித்து விட்டார். பிறகு உணர்ச்சி மட்டும் நின்றதாம். அதைத் தூப தீபமாகக் கொடுத்து விட்டார்.

"இதைத்துள்ளுமறியாம் மனது பலிகொடுத்தேன்
கர்ம துஷ்டதேவதைகளில்லை—துரிய நிறை சாந்த தேவதையாம் உனக்கு தொழும்பன் அன்பு அபிஷேக நீர்.
உள்ளுரையில் என்னுவி நைவேத்தியம் பிராணன்
ஒங்குமதி தூப தீபம் ஒரு கால மன்றிது சதா கால
பூஜையாய் ஒப்புவித்தேன் கருணைகூர்"

என்ற பாட்டால் குறிப்பிடுகிருர்.

ஐம்பொறிகளிலும் முருகனுகிய ஞான விளக் கேற்றி பஞ்ச தீப ஆரத்தி எடுக்க வேண்டும்.

பார்வதியின் ஞானப் பாலுண்ட முருகன் அழு தானும் எதற்கென்று பார்வதி கேட்டதற்கு "நான் உன்னிடம் ஞானப் பால் தானே யுண்டேன். என் பக்தர்களின் அன்புப் பாலையும் பருகவேண்டுமே, என்ருனும். பிறகு அன்புப் பாலை கார்த்திகைப் பெண்களிடம் உண்டான். கார்த்திகையர் அறுவர்.

அறு பகையை வென்றவர் அறுவர். அவர் தொண்டரே. முருகன் விரும்புவது தொண்டர்களின் அன்பையே.

"மூலமாம் குளத்திலே முளைத்தெழுந்த கோரையைக்
காலையில் எழுந்திருந்து நாலு கட்டறுப்பிரேல்
பாலனாகி வாழலாம், பரப்பிரம மாகலாம்
ஆலமுண்ட ஐயன் பாதம் அம்மை பாத
முண்மையே"

என்றார் சித்தர். மனமெனும் குளத்தில் ஆசாபாசங்களாகிய கோரைகள் முளைத்திருக்கின்றன. காலையில் எழுந்தவுடன் அவைகளை அறுத்தெரிய வேண்டும்.

பரப்பிரமம் பாலனாய் வந்தது. அந்த பாலன் முருகன். குழந்தை மனதாயிருப்பதே தெய்வ நிலை.

ஐம்பொறிகளில் செல்லும் அவாவையும் ஆணவத்தையும் அறுத்து நிற்பவரே அறுவர். அடங்காத காலத்தை அடக்கியாள்பவன் முருகன்.

அதனால் அவனை நினைக்கும் பக்தர்களுக்கு, இராகம், தாளம் எல்லாம் வந்து விடுகிறது. முருகனுடைய உருவத்தை நினைத்துப் பாடி அழும் தொண்டர்களை யனுபவித்த முருகனும் விம்மி யழுகிறான். அதைக கண்டு சம்சாரக் கடலும், ஆணவச்சூரனும், மாயக்ரௌஞ்சமும் அழுதனவாம். ஏன் இந்த முருகன் அன்புப் பாலை நினைத்தழுகிறானே. இனி நமக்கிருப்பிடமேது என்று அழுது கொண்டே வேறிடம், முருகனை நினைக்காத அன்பற்ற இடத்தைத் தேடிக்கொண்டோடிப் போய் விடுமாம்.

நான் என்பதே தரித்திராத தரித்திரம். அது வெளிப்பட்டுச் சென்றால் எல்லா ஐசுவரியமும் வந்து விடும். உலகெலாம் ஒன்று என்ற உணர்ச்சியைப் பெறுவதே பிறந்த பயன்.

மரணம் என்ற வியாதிக்கு அமிருதம்தான் மருந்து. தேவர்களும், அசுரர்களும் அன்புப் பாலைக் கடைந்தார்கள். நான் என்ற விஷம் வந்தது. அதை யுண்டவன் சிவன். தேவர்கள் அமிருதத்தை யுண்டார்கள். அமிருதம் என்பதெது? அது எங்கிருந்து வருகிறது. என்ற தத்துவத்தை அறிய வேண்டும். அன்பே அமிருதம். சரீரம் ஒரு பெரிய சமூத்திரம். அதில் அன்பு என்பது கடல் போலிருக்கிறது. ஒரு புறம் அசுர குணமும் ஒரு புறம் தேவ குணமும் இருக்கின்றன. உலகத்தில் எதை எடுத்தாலும் அன்பினால் கொடுத்து எல்லார் முகத்தையும் சிரிக்க வைத்து மகிழ்பவர் தேவர்கள், அன்பு என்ற சமூத்திரம் தேவாசுரர் இருவர்க்கும் உரித்தானது.

அந்த அன்புவைத்த இடத்திற்குத் தக்க பலனளிக்கும். அன்புக் கடலில் நல்ல பொருள் தீய பொருள் இரண்டும் இருக்கின்றன. அதை நாராயணன் கடைகிறான். நன்மையும் தீமையும் கலந்த கடலைக் கடைந்து, தீமையாகிய விஷத்தைத் தானேற்று நன்மையாகிய அமிருதத்தை மட்டும் தொண்டர்களுக்குக் கொடுக்கிறான். மரணத்தைக் கடந்தவர் தேவர். அன்பு நிறைந்தால் மரணம் நீங்கிவிடும். ஓங்காரக் கடலிலுள்ள பாலைக் கடைந்ததும் நன்மை வந்தது. தீவினை செய்தால்

துன்பம் வரும். அதுவே விஷம். ஆண்டவனைச் சரண மடைந்தால் தீவினையாகிய விஷம் நீங்கி விடும். மோகினியிடம் தனக்காக ஆசை கொண்டார். அசுரர். எனக்குச் சரியாக நடனம் செய்ய வேண்டு மென்றார் பஸ்மாசுரனை விஷ்ணு. அதன்படியே பஸ்மாசுரன் நடனம் செய்தான். விஷ்ணு தலை மேல் கையை வைத்து நடனம் செய்தார். அதை யும் நடனத்தின் ஒரு பாவமாக நினைத்த பஸ்மா சுரன் தானும் தலைமேல் கையை வைத்தான். பிறர் தலையில் கை வைத்தால் சாம்பலாக வேண்டு மென்ற வரம் பெற்ற அசுரனும் தானே சாம்பலாய் விட்டான். பிறருக்கு தீவினையை எண்ணுபவர் அந்தத் தீவினையால்தானே அழிவர் என்பதையே மோகினி பஸ்மாசுரன் நடனம் உபதேசிக்கிறது.

"சிவசிவ என்றால் தீவினை மாளும்" என்றார் சித்தர். தீவினையாலுண்டாகிய விஷத்தைத்தொலைப் பதற்குச் சிவனைக் கூப்பிட்டாராம் தேவர்கள். அவர் வந்தார். அன்பே சிவ மாகையால், அன்புஸ்வரூ பத்தால், தீய எண்ணங்களாகிய விஷத்தை யுண் டார். அன்புதான் விஷத்தைத் தொலைக்கும். கெட்ட நல்ல எண்ணங்களுடன் கலந்த அன்பைக் கடைந்து, தீயவற்றை நீக்கி அதிலிருந்துவரும் அமிருதத்தைக் கடைந்தெடுக்க வேண்டு மென்பதே இக்கதையின் கருத்து. அன்பு மயமாகிய சூரிய சந் திரர்கள் தேவ குணங்களுடன் வந்தது. விஷமாகிய துவேஷம் அசுர குணத்தினிடமிருந்து வந்தது. அந்த நடுவில் நெஞ்சிலடக்கி விட்டார் பரமசிவன். கோபத்தையும் பாவ எண்ணங்களையும் நெஞ்சி

லேயே அடக்கி விடவேண்டு மென்பதற்கு இது ஆதாரம். தருமத்தின் பயனுகிய இன்பத்தையடைவதற்குத் தடையாய்க் குறுக்கே நிற்பது பாவம். அந்த பாவமே கெட்ட குணங்களாகிய அசுரர்களின் மூலமாக வந்தது. அன்பு என்கிற பாலே மனம் என்ற பாத்திரத்தில் கறந்து சிவ ஞானத்தைக் குழைத்து ஞானசம்பந்தருக் களித்தாளாம் உமை அந்த அமிருதம் தேவாரத்திலிருக்கிறது. அம்ருதம் சாப்பிட வேண்டு மென்ருல் தேவாரப் பாட்டை வாயில் போட்டு உரைக்க வேண்டும். அதாவது பன்னிப் பன்னிப் பாடவேண்டும். மனத்தைச் செலுத்திப் பன்னிப் பன்னிப் பாடினுல், உள்ளே சிவன் தித்திப்பதை உணரலாம். அந்த தித்திப்பாகிய அமிருதத்தை யுண்டவர்களுக்கு மரணமில்லே. அடியார்கள் சிந்தையே செந்தில். சிந்தையைச் செந்திலாக்குவதற்குச் செய்ய வேண்டிய தென்ன? மனதில் கணபதியைப் பதிய வைத்தால் அவர் செந்திலாக்கிவிடுவார்.

பகவான்னுமத்திலிருந்து வெளிப்படுவது அமிருதம். 'நமச்சிவாய, வென்று சொல்வதற்கு வகையறிந்தால் உள்ளத்தில் நடனமாடும், நடராஜனெனும் தத்துவத்தைப் பார்க்கலாம். ரூபத்தில் ஜெக ஜோதி மயமான ஆண்டவனேப் பார்க்க வேண்டும் என்பதற்கே கற்பூரம் ஏற்றுவது. எங்கும் நிறைந்த ஜோதியில் நாம் கலக்க வேண்டு மென்ருல், மூர்த்தியினிடம் கற்பூரம் காட்டும் பொழுது அதன் மூலமாக ஆண்டவனிடம் வீசும் ஜோதியைக் காண வேண்டும்.

அந்த ஜோதியைப் பார்க்க முடியாமல் சரீரம் என்ற மூடியைப் போட்டு மூடிவிட்டனர் அசுரர் கள். முகத்தில் கண் கொண்டு பார்க்காமல் அகத் தில் கண் கொண்டு பார்த்தால் மூடியாகிய உடம்பி லுறையும் மூலமாகிய ஜோதியைக் காணலாம்.

அன்பினுல் பார்ப்பதே அகக் கண்ணுல் பார்ப் பது. அப்படிப் பார்க்கத் தெரிந்து விட்டால் வேற் றுமை மறைந்து விடும். "அகத்தை மறைப்பது அந்தக் கரணம் அகத்தில் மறைந்தது அந்தக் கார ணம்" ஜபம் செய்யும் காலத்தில் விழியைச் சற்று திறந்து மேல் நோக்கி யிருக்க வேண்டும். அப் பொழுது உலகம் மறைந்து அதற்குள்ளிருக்கும் சிவஸ்வரூபத்தைக் காணலாம். திறக்காத வாசலா கிய மேல வாசல் அங்கேதானிருக்கிறது. மேலே விழி வைத்து அதைத் திறக்க வேண்டும்.

"விண் பரந்து நின்ற ஜோதி மேலவாசலைத் திறநது
கண் களித்த உள்ளுளே கலந்து புக்கிருந்த பின்பு
மண் பிறந்த மாயமும்—மயக்கமும் மறைந்துபோய்
எண் கலந்த ஈசனேடு இசைந்து வாழ்வ
துண்மையே"

என்ருர் சித்தர். இப்படிக் கலக்க வேண்டும் ஜோதியுடன். உலகத்தை யொழித்துவிட வேண் டும் என்ற ஆவேசம் கொண்ட பாரதியார்க்கு அகஸ்தியர் ஞானேபதேசம் செய்தார். பின் எல்லாமாகிக் கலந்து நிறைந்தபின் ஏழ்மை யுண்டோடா—பொல்லாப்புழுவைக் கொல்ல நினைத்த பின்புத்தி மயக்கமுண்டோ? உள்ளு தெல்லாம் ஒருயிர் என்ற பின் உள்ளம் குலைவ

துண்டோ? ஆன்ம வெளியில் தேக்கித் திளைப்பவர்க்கு அச்சமுமுண்டோ என்று பாடுகிறார்.

ஆண்டவன் நாமத்தை வாயினால் சொல்லி, உள்ளத்தில் வைத்து நினைவெனும் மத்து கொண்டு இடை விடாமல் கடைவதினால், நாமம் நினைவிலூற, அதிலிருந்து ஒரு சுவை பிறக்கும். அந்த இனபச்சுவையே அமிருதம். ஆண்டவனுடைய நாமமே அமிருதஸ்வரூபம்.

எந்த இயந்திரமும் ஒட்டக் கூடாத அளவு இந்த மாமிச பிண்டத்தை ஒட்ட வைப்பவன் முருகனைத் தவிர வேறுயாராயிருக்க முடியும். அவன் பெயரைச் சொல்லி உள்ளே ஜோதியை நிரப்ப வேண்டும். தொழிலை ஆண்டவனுடைய கடமையாக நினைத்துச் செய்தால் அதுவே தவமாகும்.

## சிந்தாரத்தினம்

ஆறுமுகனுடைய சரணாரவிந்தத்தின் பெருமையைச் சீர்பாத வகுப்பில் காணலாம். கார்த்திகை நக்ஷத்திரம் பகவான் தனது ப்ரபாவத்தை வெளிப்படுத்திய நன்னாள். கண்ணனைத் தோழனாகப் பெற்றதால் அர்ஜுனன் ஜயம் பெற்றான். அர்ஜுனன் பராக்கிரமத்தை அம்பாள் பார்க்கவேண்டு மென்பதற்காக, பரமசிவன் வேடரூபம் கொண்டு அவனுடன் சண்டையிட்டார். பரமசிவனை வில்லின் நாணினால் தலையிலடித்தான் அர்ஜுனன். நிராயுதபாணியான அர்ஜுனன் சிவனை நினைத்துப் பூஜை செய்தவுடனே வேடனுக்கு பதிலாய் சிவனைக்

கண்டான். அர்ஜுனன் பாசுபதாஸ்திரம் பெறு வதற்கு காரணமா யிருந்தவன் அவன் தோழனுகிய கண்ணனே.

சிவனைச் சரண மடைந்தவர்க்கு வளர்ச்சியே தவிர தளர்ச்சி கிடையாது. இதைக் குறிக்கவே வளரும் தன்மையுடைய பிறைச் சந்திரனைத் தலையி லணிந்தார். சிவகருணையெனும் சமுத்திரத்திலிருந்து அதை அனுபவிக்க முடியாத தொண்டர்களுக்குத் தான் மேகமா யிருந்து மழைபோல் பொழிகிறுனும் கண்ணன். சலியாத மனமுடையவனே பர்வதம். அத்தகைய மனமுடையவனின் மேல்தான் ஈசுவர கருணையும் பொழியும். அதையே வில்லிபுத்தூரார்,

“ சிவமெனும் மகோததியின் அம்பெலாம் முகந்து
பறகுனப் பொருப்பிலே பொழியும் ...
கரிய திண் புயலைக் கைதொழுபவரே
கருவிலே திருவுடையவரே.”

என்ற பாட்டால் குறிப்பிட்டார்.

கருணை மழை பொழியத் தொண்டரைக் கூவும் முகிலே ’ என்றார் தாயுமானவர். சிவகருணை யெனும் சமுத்திரத்திலுள்ள நீரெல்லாம் தொண்டர் களுடைய பக்தியினுலுண்டாகும் உஷ்ணம் தாங் காமல் மேலே போய் மேகமாகிக் கருணை மழையை உலகிற்குப் பொழிகிறது. அந்தச் சிவகருணையை வடிகட்டித் தொண்டர்களுக்குப் பொழிகிறுன் கண்ணன்.

ராதையென்பதும், வள்ளி யென்பதும் தொண் டர்களுடைய உள்ளமே. இவர்கள் நாதனைத்

தேடும்போது கருணை யுருவமாகத் தொண்டர்களை யாட்கொள்ளுகிருன். சமுசார சமுத்திரம் உப்புக் கடல். கருணு சமுத்திரம் பகவான். இரண்டி லொன்றில் வீழ்ந்துதாளுக வேண்டும். ஆணவ மலையிலேருமல் ஞான மலையிலேற வேண்டும். சமுசார சமுத்திரத்தில் நிலையாயிருக்க முடியாது. கருணு ச ட த்திரத்தில் மூழ்கினுல் முத்துப்போல் ஒளி பெற்று பிரகாசிக்கலாம்.

பொய்யைப் பொய் யென்றறிவதற்கும் மெய்யை மெய் யென்றறிவதற்கும் அறிவு வேண்டும் பன் னிரண்டு கண்களையுடைய முருகனுடைய நாமத்தை நினைத்தால், அவன் கருணையால் கல்மஷங்களை யெல்லாம் நீக்கிவிடுவான். ஆண்டவனைத் துதித்தால் தான் நல்ல காலம் உண்டாகும். நினைவால் அடியை நினைக்கவேண்டும். துதித்தால் கவலையால் நிறைந்த தலைபாரம் நீங்கிவிடும். முருகனை நினைத்த சரீரக்கு முருகனைத் தெரியும். அச்சரீரியை யமனிடம் காட்டிக் கொடுக்காமல் முருகன் தானே கூப்பிட்டுக் கொள்வான். முருகனை நினைக்காதவருக்கு முருகனே யமனுய் விடுவான்.

பகவானுக்குப் பழத்தினு லபிஷேகம் செய்வ தேன்? ஞானக்கனியா யிருப்பவன் அவனே, என்பதை அறிவதற்காகவேதான். 'பழம் நீ,' என் பதே பழனியாயிற்று ஞானம் கனிந்த பழம் முருகன்.

மந்திரம் சுந்திரம் எல்லாம் திருநீரே. விபூதியை நெற்றியி லிடுவதால் தேஜஸ் உண்டாகிறது. யௌவனமளிக்கிறது. சோர்வை நீக்கி சக்தியளிக்கிறது

அனைவருக்கும் அதுவே நமது பொருள். அதை நமது பொருளென்று நினைக்காமல் தள்ளிவிட்டு ஒருவருக்கும் சொந்தமல்லாத உலகப் பொருளை நினைப்பது அறியாமை. நித்தியானந்த சுவரூபத்தை உலகப் பொருளினால் அடையமுடியாது. தனியாகத் திருப்புகழ் பாடுவதைவிடத் தொண்டர்களுடன் கூடி பஜனை செய்வதில் ஆனந்தம் அதிகம். பஜனையைத் தனக்கென்று மாத்திரம் வைத்துக்கொள்ளாமல் பிறருக்கும் கொடுப்பதினால் இன்னும் அதிக ஆனந்தமுண்டாகும். இதுவே உலகத்துக்குப் பயன் தரும் பஜனை. அந்த ஆனந்தம் நமக்குள்ளே யிருக்கிறது. கணக்கற்று முருகனுடைய நாமத்தைச் சாப்பிட வேண்டும். முதலில் நாமத்தை எண்ணிக் கொண்டிருந்தால், பிறகு நாமத்தில் மனம் லயித்து எண்ணற்ற இடத்தில் லயிக்கச் செய்துவிடுவார் பகவான். உலகமெல்லாம் தன்னை யிகழ்ந்தாலும் பொருட்படுத்தாமலிருப்பது தொண்டருடைய சிறந்த குணத்திலொன்று. உள்ளதெல்லாம் ஓருயிர் என்ற உணர்ச்சி வேண்டும். எல்லாம் முருகனுடைய சுவரூபம். செயலெல்லாம் முருகன் செயல், என்று நினைப்பவர்க்குக் கவலையேது. வரப்பற்று நாதனை வாயார வாழ்த்துவதே பரமானந்தம். மற்ற மனிதன் சந்தோஷமா யிருப்பதைப் பார்த்து சந்தோஷமடைவது தொண்டருடைய மனம். அது எப்பொழுதும் இன்புற்றிருக்கும். நமதல்லாததாகிய ஆணவமாகிய உப்பை வைத்திருப்பதால், உடல் உப்புப் பாண்டமா யிருக்கிறது, அவ்வுடம்பில் முருகனென்னும் அன்பாகிய அமிருதத்தை நிரப்பவேண்டும். பிறகு அது நம்முடையதான அமிருத பாண்டமாகிய

அழிவற்றதாகிவிடும். முருகா வென்று சொல்லிக் கொண்டிருந்தால் நம்முடைய சொந்தப் பொருளை நாமடையலாம். அதுவே நினைத்ததைக் கொடுக்கும் சிந்தாரத்தினம். முருகா வென்பதைச் சிந்தையில் பதித்துக் கொள்ளவேண்டும்.

"காதலொருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதேயின்பம்" என்றார் ஔவையார். கணவன் மனைவி இருவருடைய மனமும் முருகனுடைய நினைவில் ஒன்றுபட வேண்டும். அதுவே கருத் தொருமிப்பது. உடலழகைப் பிரதானமாக வைத் துக் கலியாணம் செய்வதினால் துன்ப மேற்படுகிறது. ஆதரவு மனம் வேண்டும். இருவரும் ஆண்டவ னுடைய பக்தியில் ஒன்றுபடவேண்டும். நகையில் சிறந்த நகை புன்னகை. தம்பதிகளின் மனக் கருத் தொருமிப்பதால் உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் ஒருமைப்பட்டுவிடும். ஆதரவுபட்ட இல்வாழ்க்கையே உலகமெல்லாம் ஓருயிர் என்ற உணர்ச்சிக்கு ஆதாரம். அன்பு ஒருமையிலிருந்து உண்டாகிறது. ஆசை வேற்றுமையிலிருந்து உண்டாகிறது. தொழில் களில் சிறந்தது அடித்தொழில். அதாவது திருவடி யைப் பற்றும் தொழிலே மற்றவை யெல்லாம் நுனித்தொழில்.

"நினைவால் நின் அடித்தொழில்
பேணித்துதியாமல்,

என்றார் அருணகிரியார்.

ஆண்டவனுடைய நாமத்தைச் சொல்லிக் கொண்டிருந்தால், நமது வியாதியாகிய சில்விஷம் நீங்கிவிடும். பெரிய ஆபத்திலும் ஆண்டவன் கை கொடுத்து அதைக் குறைத்துவிடுவான். ஆமை

கரையிலே முட்டையிட்டு ஜலத்துக்குள்ளிருக்கும் பொழுதெல்லாம் அம்முட்டையை நினைத்துக்கொண்டிருக்கும். அதன் நினைவினாலேயே குஞ்சு வெளிப்படும். அதுபோல் தொண்டர்கள் எங்கிருந்தாலும் முருகனுடைய அன்பு அவர்களைக் காக்கும். அனுபவமே அகப்பொருள். முருகன் அன்பிலிருக்க யார் என்ன சொன்னாலென்ன எனறிருப்பதே பேரின்பம்.

உலகத்திலுள்ள பக்தர்களையெல்லாம் வைத்துக் காப்பாற்றும் அருளே திருவிளையாடல். ஜீவராசிகளையெல்லாம் தன்னுடைய குழந்தையாக நினைக்கும் பண்பே ஜெகன் மாதாவினுடைய பண்பு. முருகன் வள்ளியுடன் கலந்தான். வள்ளி யார்? அருளே வள்ளி. அருளின்றி முருகனில்லை. முருகனின்றி அருளில்லை. அருளுடையவன் முருகன். தெய்வசேனையுடனும் வள்ளியுடனும் முருகன் கலந்தான் என்பதெல்லாம் ஜீவராசிகளுக் கருள்புரிவதற்காகவே. முருகன் அருள்புரியத் தயாராயிருக்கிறான். அதைவாங்கிக்கொள்ளத் தெரியாமலிருக்கிறான் மனிதன். வாங்கிக்கொள்வதெப்படி? மனதினால்தான் வாங்கிக் கொள்ளவேண்டும் அருளை யேற்கும் பாத்திரம் மனமே. அப்பாத்திரத்தில் ஆசாபாசங்களையும் ஆணவமாகிய தூசுகளையும்போட்டு நிரப்பாமல், காலியாய் வைக்கவேண்டும். காலியான மனதினால் முருகாவென்றால், அதில் ஒட்டிக்கொண்டிருக்கும் அழுக்குகள் நீங்கி சுத்தமாய்விடும். தூய்மையாகிய மனமெனும் பாத்திரத்தில் "பள்ளத்தைத் தேடி வரும் புனல்போல், முருகனுடைய அருள் பாயும்.

அருணகிரியார், திருநீற்றின் பெருமையைத் திருப் புகழில் பலவிடங்களில் குறிப்பிடுகிறார்.

"நீறதிட்டு நினைப்பவர் புத்தியில்நேச
மெத்த அளித்தருள்
சற்குரு, நீலமுற்றதிருத்தணி
வெற்புறைபெருமாளே"

என்று திருத்தணித் திருப்புகழின் கடைசியிலும்,

"ஆறுமுகம், ஆறுமுகம், ஆறுமுகம் என்று
பூதிஆக மணி மாதவர்கள் பாதமலர்
சூடுமடியார்கள் பதமேதுணை யதென்று
நாளும்"

என்று பழநித்திருப்புகழின் முதலிலும் குறிப்பிடு கிறார். ஞானசம்மந்தர்,

"மந்திரமாவது நீறு"

என்ற பாட்டு முழுவதிலும் திருநீற்றின் பெருமையை அளந்துவிட்டார்.

'நீறு, என்பது மந்திரம். மனதை எந்த சப்தம் ஸ்திரப் படுத்துகிறதோ அதுவே மந்திரம்.

"மனமது செம்மையானால் மந்திரம்
ஜெபிக்க வேண்டாம்"

என்றார் சித்தர். விபூதியை, ஆறுமுகம், என்று ஆறுமுறை கூறி நெற்றியிலிட்டுக்கொண்டால் மனம் செம்மையாய்விடும். சிவனல்லால் ஷண்முக னில்லை ஷண்முகனல்லால் சிவனில்லை. ஐந்துமுக மும் ஆறுமுகமும் ஒன்றே.

திருத்தணியிலிருக்கும் முருகன் சத்குரு. குரு ஸ்வரூபம் ஆனந்தமே வடிவானது. எப்பொழுதும்

பரமசுகத்தைக் கொடுப்பது. 'சத்வம், ரஜஸ்' தமஸ், என்ற முக்குணங்களும் ஒரு கூட்டம். இந்த மூன்று குணங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டே எல்லா உலகத்தையும் சிருஷ்டிக்கிறது பிரம்மம். இவற்றைக் கடந்து இவற்றிற் காதாரமாயிருக்கும் பிரம்ம ஜோதியே சத்குரு. 'ஆறுமுகம், என்று ஆறுமுறை கூறி விபூதியை இட்டுக்கொள்பவர் மகாதபஸ்விகள். ஜல மலம் நிறைந்த சரீர மென்னும் அவக் குடிலைத் தவக் குடிலாக்குவது ஷண்முக நாமமும், வீபூதியுமே. சங்கீதம் என்பது சத்ஜன வசனம். ஆண்டவனை யனுபவித்து அந்த அனுபூதியி லிருந்து வருவதே சங்கீதம். சங்கீதம் ஆண்டவனுடைய நாமத்தைப் பூரணமா யனுபவிக்க முடியாமல் அவனுடன் லயித்து விடுகிறது. கல்மனத்தைக் கரைத்து மண்ணை விண்ணாக்குவது சங்கீதமே. ஆனால், அதிலுள்ள வாக்கியங்கள் அனுபூதி வாக்கியங்களாயிருக்க வேண்டும். பெறுவதற்குரியது மானிடப் பிறவி. அந்தப் பிறவியில் பகவானுடைய அடியைக் குறுகிப் பணியக் கற்கவேண்டும். உலகத்தில் அடியார்களுக்கு யாரிடத்திலும் விரோதம் கிடையாது. அன்பையே தனது இயல்பாக உடையவர்கள் அடியாரகளே. அன்பால் உலகத்தை ஜெயிக்கலாம். அன்பே சிவம். அந்த அன்பால் கூன் பாண்டியனை நிமிர்த்திநேராக்கினர்- ஞானசம்மந்தர் முருகனே . ஞானம். முருக சம்மந்தமிருந்தால் ஞான சம்மந்தம் தானே வரும். அதற்கு ஆறுமுகம் என்று கூறி வீபூதியிட வேண்டும். அந்தமே ஆதி. ஆதியே அந்தம். ஏகமா யிருக்கும் தத்துவமாகிய முருகனையே, அந்தாதியாகப்பாடி வில்லிபுத்தூராரை

வென்றார் அருணகிரியார். வாயைக் கொடுத்தது மௌனமா யிருப்பதற்கல்ல. ஆண்டவனை வாயாரப் பாடி அனுபவிப்பதற்காகத்தான். மனம், தான் எண்ணமற்று மௌனமாக வேண்டும். மனம் எனும் வீட்டில் ஆசாபாசங்களெனும் பிசாசுகள் வந்து குடி கொண்டிருக்கின்றனவாம். அப்பிசாசை ஓட்ட முருகனைநினைத்து வீபூதியைப் போடவேண்டும். உண்மை கியான முணர்ந்தவர் நன்மங்கையரைத் தாய்போல் நினைப்பராம். அவர்கள் மங்கையரை வெறுத்து காட்டுக் கோடமாட்டார்கள்.

நான் என்ற உணர்ச்சி தன்னிடத்தில்தான் உண்டாகிறது. மற்றவரிடத்தில் நீ என்ற உணர்ச்சியேதவிர நான் என்ற உணர்ச்சி உண்டாவதில்லை. நானற்றுப்போன இடமே நாதன் இருக்குமிடம். ஆதலால் எல்லா உயிர்களையும் ஈசனெனக் கருதி நேசத்தால் நினைத்துக் கொள்ளவேண்டும். அவம் ஒழிந்தது தவம். வீபூதியிட்டால் அவம் ஒழிந்து விடும். மனம் அன்பால் எல்லா ஜீவராசிகளிடத்தி லும் விரிந்து, ஆண்டவனிடத்தில் குவிவதே தவம். அழுக்குள்ள மனம் விரியாது. எந்த ஜீவராசிகளைப் பார்த்தாலும் அன்புண்டாகும் மனமே அழுக்கற்றது. நாம் மோக்ஷத்தை யடைவது நினைவினு லன்றி செயலினலல்ல. அழுக்கறுத்தால் உள்ளது அன்புதான். அன்பாய் விரியவேண்டியது உலகத்தி லுள்ள ஜீவராசிகளிடம். குவியவேண்டியது ஆண்டவனுடைய சரணாரவிந்தத்தில். சக்தி சிவன் சேர்க்கையே உலகம். உயிர்க்கு ஆதாரமா யிருக்கப்பட்ட சக்தியே வைடமின். அதுவே சக்தியின் சேர்க்கை. அச்சக்தி ஒவ்வொரு உடலிலும் கூடுகிறது. உடல்

கீழே விழுந்து அழிகிறதேயன்றி நாம் என்றும் அழிவதில்லை. திரிமூர்த்திகளுக்கு உபதேசம் செய்த குருநாதன் தொண்டர்களுக் கெல்லாம் ஆனந்த மூர்த்தியாய் திருத்தணியில் வந்து குடிகொண்டிருக்கிறன்.

“நீற திட்டு நினைப்பவர் புத்தியில் நேசமெத்த அளித்தருள் சத்குரு” முருகனும். புனம் என்பது தொண்டர்களின் ஹ்ருதயம். இந்த ஹ்ருதயத்தில் குமரனை முருகா வென்று, நினைக்க நினைக்க அங்கு ஆனந்தத்தேன் ஊறுகிறதாம். முருகனுகிய இன்பத் தேனை புனத்திலுள்ள வள்ளியாகிய ஜீவன் எப்பொழுதும் பருகிக் கொண்டிருக்கிறதாம். உலகப் பற்றைவிட்டு, பகவானை நினைத்து ஆசாபாசங்களாகிய பட்சியை, ஆலோலம் என்று ஆயாளோட்டும் வள்ளி போன்ற உள்ளத்துடன் ஆண்டவன் சேருகிறுனும்.

“தேனெழு புனத்தில் மான்விழி குறத்தி சேர
மறுவுற்ற திரள் தோளா”

என்றூர் அருணகிரியார்.

சரணுரவிந்தத்தைப் பெறும் வழியென்ன? விடாமல் நாமத்தைச் சொல்லிக் கொண்டிருப்பது தான்.

———

# தொண்டரின் தொலையாச்செல்வம்

ரூபமும், அரூபமும் கலந்தது மானிட ஜீவன். மானிட வாழ்க்கை எடுப்பதற்கு முன்னால், ஜீவன் அரூப நிலையில் நிற்கிறது. அரூபமானது உடல் மூல மாகப் பேசும் காலத்தில் ஏனைய ஜீவன்கள் கேட்டு மகிழ்கின்றன. தெய்வத்தன்மையை அனுபவவிப் பதற்கு மானிட சரீரம் வேண்டும். தெய்வ கருணையை மனித சரீரத்தில் உணர்ந்தவர்கள் மகான்கள். உலகத்திலுள்ள பேத சுவரூபங்களிலெல்லாம், ஒன்றான பகவான் தானிருக்கிறார். ஏகமாயிருக்கப் பட்ட தெய்வத்தைப் பல உருவங்களில் காண்பவனே ஞானி. இந்தப் பெருத்த உணர்ச்சியை அடைவதே மனிதப் பிறவியின் பயன். மானிட வாழ்க்கையின் ஓட்டம் கால வெள்ளத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. பிராரப்தகர்மத்தில் அகப்பட்ட ஜீவர்களுக்கெல் லாம் காலச் சக்கிரம் சுழன்றுக் கொண்டிருக்கிறது.

உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளும், சிவஸ்வரூபம்.
ஈசனென்க் கருதி எல்லா உயிர்களையும் நேசத்தால் நீ
நினைந்துக் கொள்,

என்றார் ஔவையார்.

தேனுந்துமுக் கனிகள் பால்செங் கருப்பிளநீர்
சீரும் பழித்த சிவம் அருளூறத்
தீதும் பிடித்தவினை யேதும் பொடித்துவிழ
சீவன் சிவச்சொரூப மெனதேறி

என்றார் அருணகிரியார்.

தேன் என்பது பழத்தினுடைய சாரம். பழங் களினுடைய சாரமாயிருப்பது பகவானே என்பதை அறிவிக்கத்தான் பழங்களினாலும், பஞ்சாமிருதத் தினாலும் அபிஷேகம் செய்வது. பழனியாண்டவர் மேலுள்ள வீபூதியை எடுத்துப் பிழிந்து பார்த்தால் உள்ளே ஊறுவது தேன்.

"குமரனை மெல்ல மெல்ல உள்ள தனிப் பரமானந்தம் உள்ளத்தில் அரும்பும்" என்றார் அருணகிரியார். அதுவே பரமானந்தத்தேன். ஒன்றேயான பகவான் உலகத்திலுள்ள இத்தனை ஜீவராசிகளையும் சிருஷ்டித்தான் என்பது எப்படி? பழத்தினுள் தேனிருப்பது போல ஜீவராசிகளை சிருஷ்டித்து அவற்றினுள் சாரமான உயிராகத்தான் புகுந்துக் கொண்டான், அவனுட்டமே உலகத்தின் அசைவு. அறிவினாலடையும் அனுபூதி நிலையே முக்தி. உலக நிலையிலே, அஞ்ஞானமாகிய மாயையிலகப்பட்டு பேதத்தையுண்டாக்கிக் கொண்டிருப்பதே பேதமை, உலகெல்லாம் ஒன்றான ஒரே தத்துவத்தினாலானது என்று அறிபவனே கலியாண புருஷன் உலகமெல்லாம் ஒன்று எல்லாம் நன்றாகத் தழைத்து வாழ வேண்டும்; என்ற கருணையால் பராசக்திக்குத் தாலி கட்டினாராம் பரமசிவன். பார்வதிப்ரகிருதி சுவரூபம் அதிலுள்ள சைதன்னியம் பரமசிவன். மூன்று உலகங்களையும் சிருஷ்டித்த சக்தியாகிய பராசக்தியின் கழுத்தில் மூன்றுஉலகமும் க்ஷேமமாயிருப்பதற்காக மங்கல சூத்திரத்தைக் கட்டினாராம். கணக்கற்றவனாகிய பகவானைக் கணக்கினால் அடையமுடியாது. அனுபவத்திற்குக் கணக்கில்லை. கணக்கற்று பகவானுடைய நாமத்தைச் சொல்லவேண்டும். பிறப்பு என்றால் என்ன? பிறப் பறுவதென்பதென்ன? எப்பொழுது பிறப்பறும்? அதற்கு வழியென்ன? பிறப்பென்பது பாம்பு. அது நம்மைச் சுற்றிக் கொண்டிருக்கிறது. காளிங்கனெனும் பாம்பு அக்ஞியானமாகிய விஷத்தினால் நம்மைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறது. இந்த விஷத்தின் மயக்கத்தில்

ஆழ்ந்து நான் வேறு, நீ வேறு, ஊன் வேறு, உடல் வேறு என்று நினைப்பதினால்தான் பிறப்புண்டாகிறது. எந்த இடத்தில் பேதம் உதிக்கிறதோ அந்த இடத்திலுண்டாவதே பிறப்பு. ஆணவம் தகப்பனர். தாய் ஆசை. கூடப்பிறந்தவர் நாம் பிறந்த பொழுதே கூடத்தோன்றி, உலகத்தை அனுபவிப்பவராகிய பஞ்சேந்திரியங்கள். மண், பெண், பொன் என்ற மூவாசைதான் பெருத்த சமுசார சமுத்திரம். இந்த சமுசாரக் கடலில்தான் நம் வாழ்க்கைப் படகு போடப் பட்டிருக்கிறது. ஆணவத்திற்கும் ஆசைக்கும் பிறந்து ஐம்பொறிகளாகிய வெறி பிடித்து மண்ணில் பேதங்களைக்கொண்டு அலையும் மானிடனுக்கும் என்றும் கவலை. இந்த வேற்றுமைக் குணங்களையே புராணங்களில் அசுரராய் சிருஷ்டித்தனர். ஜீவர்கள் அசுரர்களல்ல. ஜீவனைப் பிடித்தாட்டும் ஆணவாதிகளே அசுரர்கள். முருகா வென்றிருந்தால் ஆசை விட்டுவிடும். உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளிடமும் அன்பாயிருக்க வேண்டுமென்றால், குழந்தைகளையும் மனைவியையும் விட்டோடும் அன்பற்ற சன்யாசம் சிறந்ததாகுமோ? எங்கும் அன்பாகப் பார்ப்பவன் மனைவிமக்களோடிருந்தாலும் அவன் சமுசாரத்தைக் கடந்து மேலே வருகிறான். ஆணவமாகிய அப்பனும். ஆசையாகிய தாயுமே அழுக்கு. இதுவே நம்மை ஐம்பொறிகளிடம் தள்ள, ஐம்பொறிகளாகிய அழுக்கு நம்மைப் பிடித்திழுத்து, சாக்கடையில் கொண்டு தள்ளுகிறது. அச்சாக்கடையே சாவுகடை. ஆண்டவனுடைய பாதாரவிந்தத்தைச் சேருவதே யோகம். ஞானிகளுக்கு தாய் பொறுமை. தைரியமே பிதா.

பொறுமையென்பதற்குப் பொருள் பொருமையற்றிருப்பது. பிறருக்கு நன்மை வரும்பொழுது பார்க்கப் பொருமலிருப்பது பொறுமை. உலகம் முழுவதும் க்ஷேமமாயிருந்து; நமக்கு ஒன்றுமில்லாமலிருந்தாலும், உலக க்ஷேமத்தை பார்த்து சான் மகிழ்ச்சியுடனிருப்பதே பொறுமை.

நான் என்ற தன்மையைச் சுட்டெரித்து வீபூதியாக்கி நெற்றியிலிட்டுக் கொண்டு பாடுகிருராம் அருணகிரியார். முருகா! நீ என்னுள்ளே அகப்பட்டுக் கொண்டிருக்கிருய். நான் வெட்ட வெளியிலிருக்கிறேன் என்கிருர், சம்பத் குமாரனென்ற ஒருவன் ஆணவம் பிடித்துத் திரிந்துகொண்டிருந்தான். அச்சமயம் பிரபுடதேவ மகாராஜன் என்ற தெலுங்கரசன் திருவண்ணுமலையில் அரசாண்டுகொண்டிருந்தான். சம்பத் குமாரன் அருணகிரியார் மேல் பொருமை கொண்டு, அவரைப் பற்றி அரசனிடம் அவதூருகக் கூறினர். அருணகிரியாரின் தெய்வீக சக்தியைச் சோதிக்க எண்ணிய அரசன் சம்பத் குமாரன் கூறியபடி அருணகிரியாரை முருகனைக் காட்டும்படி கேட்டான். அருணகிரியார் திருப்புகழைப் பாடினர். முருகன் ஜெகஜ்ஜோதியுருவுடன் காக்ஷி தந்தான். சம்பத்குமாரன் ஆணவ மடங்கி தலைமறைவாய் ஓடிவிட்டான் 'தலைவன்' என்ற எண்ணம் தலைக்கிறுக்கையுண்டாக்கி விடுகிறது. தலைமையைத் துறந்து காட்டுக்குச் சென்றன் இராமன். மனிதன் மனிதனைப்பார்க்கிருன். நீ வேறு நான் வேறு என்ற ஆணவத்தைப் பெரிதாக்கிக் கொண்டிருக்கிருன். ஆண்டவனிடத்தில் தலைவணங்க வேண்டுமாம். வணங்காத தலையை ஆணவம் சாய்த்து

விடும். சிவன் என்ருல் தாழ்மையாயிருக்கப்பட்ட சௌலப்யஸ்வரூபம். சிவஸ்வரூபம் ஏற்பட்ட மகான்கள் தாழ்மையாயிருப்பர். ஆண்டவனிடம் பக்தி செய்து அவனை வணங்கியவர்களுடைய தலையை மாலையாக அணிந்துக்கொண்டிருக்கிருராம் சங்கரன்

> "தலையே நீ வணங்காய், தலைமாலை தலைக் கணிந்து
> தலையாலே பலிதேறும்
> தலைவனை தலையே நீ வணங்காய்"

என்ருர் அப்பர்.

தலைவனை வணங்கினுல், வணங்குபவரின் தலையைக் கையில் தாங்கி அதில் பிச்சையேற்பானும் பரமசிவன். பக்தனுடைய வீடாகிய உடம்பில் பகவானுக்குள்ள அன்பு இதிலிருந்து வெளிப்படுகிறது. கோவில் ஓர் டெலிபோன் போன்றது. அங்குள்ள சிலையுருவில், பல பக்தர்களுடைய பாவத்திஞல் பகவானுடைய சக்தி அடங்கியிருப்பதால், அங்கிருந்து பேசினுல் எங்கும் நிறைந்துள்ள பகவானுக்குக் கேட்கும். கோயிலிடிந்தாலும் தொண்டருடைய உள்ளக் கோயில் அழியாது. தொண்டருடைய உள்ளக் கோயிலை அழியாச் செல்வமாக உடையவர் பகவான். பகவான் தொண்டர்களுள்ளத்தில் தொலையாத செல்வமாய் அமர்ந்திருக்கிருர்.

> "இலையால் அன்பால் ஏற்றும் அவர்க்கு
> நிலையா வாழ்வை நீத்தார்க் கிடமாம்
> தலையால் தாழும் தவத்தோர்க்கெல்லாம்
> தொலையாச் செல்வர் சோற்றுத் துறையே"

என்பது தேவாரம். பகவானைத் தன்னுள்ளத்தில் அழியாச் செல்வமாகக் கொண்ட "தொண்டரின்

பெருமையைச் சொல்லலும் அரிதே" என்ருர் ஔவையார். ஆண்டவனுடைய நாமத்தைச் சொல்லும் காலத்தில் நாம் ஸ்கந்தலோகத்திலும், கைலாயத்திலும், இருக்கிரேம். பகவானுடைய நாமங்களைச் சொல்லும்போது, பேதத்திலிருக்கப்பட்ட வாழ்வை நழுவவிட்டுத் தொலேயாத ஊராகிய சப்தப்ரம்மத்தை அடைந்து விடுகிருன் மனிதன். ஆண்டவனுடைய தொலேயாச் செல்வமாக இருப்பது அன்பருடைய உள்ளமே. நாமத்தைச் சொல்பவனுடைய உள்ளம் பேதமாகிய உடலிலிருந்து நழுவி, நாமத்தினுல் மனதில் கட்டப்பட்ட கோயிலில் வீற்றிருக்கும் பகவானே அடைத்துவிடுகிருன். இன் சொல்லே உண்மை. கடுஞ்சொல் பொய். என்றும் உண்மையாயிருக்கும் இன்சொல், ஆண்டவனுடைய நாமமே. ஆண்டவனுடைய நாமத்தைச் சொல்லி நாவில் ஊறும் இன்ப ரஸத்துடன், அவனே மனதில் நினைக்கும் தொண்டர்களுக்குத் தொலேயாச் செல்வமாகத் தன்னையே தருகிருர் பகவான்.

"கொண்டதெந் தனே தந்ததுந் தனே சங்கரா யார்
கொலோசதுரர்"

என்ருர் மாணிக்க வாசகர்.

கண்ணனைக் காணவந்த குசேலருக்குக் கண்ணன் தொலேயாச் செல்வத்தை அள்ளி அள்ளிக் கொடுத்தார். 'உன்னைக் கண்டகண்கள் வேருென்றையும் காணுமையும் உன் அருளைப் பெற்றமனம் வேருென்றையும் நாடாமையும் வேண்டும்!' என்ருர் குசேலர். உலகத்திலிருக்கும் ஜீவராசிகளெல்லாம் ஆண்டவன் வசிக்கும் கோயிலே, வேணும் என்ற பொருள் இல்லாதவனே தரித்திரன். வேண்டாமை

யைப் பெற்றவன் செல்வம் பெற்றவன். தன்னை நினைக்கும் தொண்டரிடம் தணியா அதிமோக தயா பரனை, முருகனை நினைப்பவர்க்குக் குறையேயில்லை. பிற என்ற பேதம் நீங்கி எல்லாம் ஒன்று என்ற ஒற்றுமை வந்தால் பேதம் நீங்கிவிடும் பேதத்துடன் நாமம் சொன்னால் பேதமறுவதற்குத் தீமை வரும். எல்லாம் ஒன்றென்று சொல்பவன் அடைவது இன்பமே.

---

## ஆத்ம பூஜை

உலகத்தில் பூஜை வைத்துக்கொண்டிருக்கும் பெருமக்களுக்கும் பூஜை செய்ய முடியாத சமயம் வந்துவிடும். இரயிலில் போய்க்கொண்டிருக்கிறோம். அங்கு பூஜை செய்வதெப்படி? மனதில் ஆயிரம் குழப்பங்களை வைத்துக்கொண்டு நாமத்தில்கூட மனம் இலயிக்காமல் பூஜை செய்வதால் பயன் என்ன? அதனால், ஆண்டவனருளைச் சீக்கிரம் பெற முடிவதில்லை. 'மனதிற்குள் மனமறியாமல் நானிருக்கிறேன், கவலையை விடு, நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று சொல்லிக்கொண்டிருக் கிறான்பகவான். அவனுடைய அருளைப் பெறவேண்டு மானால், அவனிடம் நாம் ஆழ்ந்த அன்பு செலுத்த வேண்டும்.

சுத்தமும். அசுத்தமும் மனதில்தான் தோன்று கிறது. 'மனம்போல் மாங்கல்யம்'; என்பது பழ மொழி. சிலர் மனம், நிறைந்த மனம். அத்தகைய மனம், கொஞ்சம் பெற்றாலும் திருப்தி யடையும்

அவர்கள், கால் ரூபாய் கிடைத்தாலும், ஆண்டவன் கொடுத்ததென்று திருப்தியுடன் ஏற்று அதற்குத் தக்கவாறு தமது வாழ்க்கையை அமைத்துக் கொண்டு சந்தோஷமா யிருப்பர். எவ்வளவு கிடைத் தாலும் திருப்தியில்லாதிருக்கும் மனம் நிறைவற்ற குறைவுடைய மனம். ஆசைக்கு அடிமையான மனம் எப்பொழுதும் குறையுடன் தானிருக்கும். மனத்தை வென்றால்தான் ஆனந்தத்தையடையலாம். மனதை வெல்லாமல் மற்ற எதைச் செய்தாலும் பயனில்லை. மனம் உள்ளே இருக்கிறது. உலக சம்பந்தம் இரத் தத்தினால் உண்டாகிறது. அவன் எனக்குத் தம்பி, அவனுக்கும் எனக்கும் வெகுநாளைய உறவு என் கிறோம். இரத்தத்தில் உலக உறவிருக்க மன தினால், ஆண்டவனுக்கும் நமக்கும் உறவேற்படு கிறது. பக்தியில், மேல்புல் மேய்வதில் பயனில்லை. ஆழ்ந்த பக்தி வேண்டும். தாளத்தில் மனம் வைத் துப் பஜனை செய்தால் மனோலயம் ஏற்படாது. ஆண்டவனிடம் மனம் வைத்துப் பஜனை செய்தால், தாளம் தானேவரும், மனத்தால் ஆண்டவனுடைய சம்பந்தத்தைப் பெறவேண்டும். 'சம்பந்தம்' என் றால் என்ன? ஞான சம்பந்தந்தான். நீயும் நானும் சமம் என்றிருப்பதே சம்பந்தம். ஞானத்துடன் மனம் சம்பந்தப்பட்ட மனமுடையவன், எல்லா ஜீவராசி களிலும் சமமாக ஆண்டவனைக் காண்கிறான். மன தைக் கொண்டு ஆண்டவனுடைய சம்பந்தத்தைப் பெறவேண்டும். மனம் பொல்லாதது. அது ஓரிடத் தில் நிலைக்காது. "கண்ணனைப் பொல்லாக்கரு மாணிக்கமே" என்றார் நம்மாழ்வார், மனதையும் பொல்லாக் கருமாணிக்கமாக்க வேண்டும். மனதில்

ஆண்டவனை ஏற்றினல் அது பொல்லாக் கரு மாணிக்கமாகிவிடும்.

முருகன் ஞான சுவரூபன். இச்சா, கிரியா, சக்தியையுடையவன். அவனை மனதில் ஏற்றவேண்டும். அவனுடைய சம்மந்தத்தைப் பெறவேண்டும். நீயும், நானும் ஒன்றென்ற சம்மந்தத்தை வாக்கால் ஏற்றவேண்டும். வாக்கென்பது நெருப்பு. சொல்லில் ஜோதி இருக்கிறது. சொல்லைச் சொல்லி ஒவ்வொரு உள்ளத்திலும் ஜோதியை ஏற்ற வேண்டும். சித்தர்கள் மனதைக் கற்பூரமாக்கி ஜோதியில் கரைத்துவிட்டார்கள். வாயினல் பகவானுடைய நாமங்களைச் சொல்லிச் சொல்லி மனதில் ஏற்றி அதைக் கற்பூரமாக்கினல் ஜோதிமயமாகி விடும். எல்லா உயிர்களிடமும் அன்பா யிருக்க வேண்டும். பணிந்து நடக்க வேண்டும். நன்னடத்தையா யிருப்பதற்குக் கட்டளை நமது இதயத்திலிருந்துதான் பிறக்கிறது. எல்லோர் இதயத்திலும் பகவான் இருக்கிருன். சிவன் வசிக்கிருன். அவனே எல்லோருடைய இதயத்திலும் நன்னடத்தைக்குக் கட்டளை இடுகிருன். ஆதலால், தள்ளக்கூடியது எதுவுமில்லை; எவருமில்லை. தள்ளக்கூடிய மதம் இந்து மதமல்ல. யாவரையும் நம்மவராகச் சேர்த்துக் கொள்ளுவதே இந்து மதத்தின் நோக்கம். சிந்து, என்பதன் திரிவே இந்து. இந்து என்பதைக் கொண்டு சிலரை நம்மவர், சிலரைப் பிறர் என்று பிரிக்கக் கூடாது. சிந்து, அதாவது கடல் உலகெங்குமிருப்பதால் உலகெங்கும் நமது மதமே. நமது மதம் உலகெங்கும் நிறைந்திருக்கிறது. பிரிக்கும் மதம் நமது மதமல்ல. அனைவரையும் ஒன்ருய்ச்

சேர்க்கும் மதமே இந்துவாகிய சிந்து மதம். இதற்கு மாதா யார்? பிதா யார்? மாதா, பார்வதி, பிதா, பரமேசுவரன். அவர்களிருவருக்கும் பிறந்த மகனே முருகன். முருகனிடத்தில் ஈடுபட்டவர்களுக்கு உலக முழுதும் தம்பி என்ற உறவைத்தவிர வேறுண்டோ? உறவற்றவர் தானுண்டோ? "எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ" என்ருர் அருணகிரியார். "எங்கெங்குமாய் நின்றவனே, என் இதயந்தனில் ஒளிர்பவனே" என்ருர் ஒரு பெரியார். எங்கும் நிறைந்திருக்கும் பொருளே, எல்லா ஜீவராசிகளிடமும் இருக்கிறது. "ஞானசம்பந்தம் எப்படி, எங்கு ஏற்படுகிறது' என்ருல், ஞானம் எங்குமிருக்கிறது. "பேசுவானுமீசனே பிரம்மஞானமும்முளே" என்ருர் சித்தர். பகவான் நம்முள்ளே ஞானத்தைப் பேசிக்கொண்டிருக்கிருர், அதனுல், ஞானமும் நாமும் சம்பந்தமாய் விடுகிரேம். ஞானமே நாமாய்விடுகிரேம். பின்னர் 'எப்படிப் பூஜை செய்வது' என்ருல், ஞான சம்பந்தம்பெற்ற பெரியார்கள் இதைக் கற்பிக்கிருர்கள்.

"நீ எல்லா பொருள்களிலும் இருப்பவனுயிற்றே. எதைக்கொண்டு உன்னைப் பூஜை செய்வது? பசுமையான செடியிலே செம்மையான பூவைப்பார்க்கையில், பச்சைப் பசுங்கொடியாகிய பார்வதியின் மடியிலே, செவ்வேளான நீ உட்கார்ந்திருப்பது போலல்லவோ இருக்கிறது, அதனுல், நீயாகிய மலரைக் கொய்வதற்கு மனம் எவ்வாறிசையும், எடுக்க மனம் இசையவில்லையே, ஆகையால், பனிமலரெடுக்க மனமும் நண்ணேன்" என்ருர் தாயுமானவர்.

பேதத்திலே ஒரு பூஜை, அபேதத்திலே ஒரு பூஜை, வேற்றுமையிலே யிருக்கப்பட்ட பகவானை, வேற்றுமையாயிருக்கும் அவனுருவாயிருக்கப்பட்ட் பொருளால் பூஜை செய்வது ஒரு முறை. இது வேற்றுமையிலிருக்கும் மனிதருக்கு வேற்றுமை யற்றவர் யாவற்றிலும் பகவான் சுவரூபத்தையே பார்ப்பதால் அதுவே அவருக்கு ஆத்மபூஜையாய் விடுகிறது

"ஆத்மாத்வம், கிரிஜாமதி; பரிஜனுப்ராணு, சரீரம் க்ருஹம் பூஜாதே விஷயோபபோகரசனு நித்ராசமாதிஸ்திதி: சஞ்சார: பதயோப்ரக்ஷிணவிதி: ஸ்தோத்ராணிசர்வாகிரோ யத்யத்கர் மகரோமிததத் அகிலம்சம் போதவராராதனம்

என்ருர் ஆதிசங்கராசாரியர்.

சிவன் ஆத்மாவாயிருக்கிருன். அம்பிகைமதி (புத்தி) பரிஜனங்கள் பஞ்சபூதங்களும் பிராணனும். பிராணனுய் உலகத்தில் விளையாடுவது சிவனும் சக்தியுமே, அவ்வாறு உள்ளே விளையாடுவதால் உடம்பு முருகன் கோயிலாகும். பஞ்சேந்திரியங் களின் வழியாக பகவான் விளையாடுகிருன். 'நான், எனது என்பதை விட்டு விட்டால் உள்ளே அவன் தானுய் விளையாடுவான்.

"நித்ராசமாதிஸ்திதி" என்பதன் பொருளென்ன வென்று பார்ப்போம். தூங்கும்பொழுது மனம் ஒடுங்கிவிடுகிறது. உலகை மறக்கிருன். மகாசாந்தத் தில் தூங்குகிருன். தூங்கும்பொழுது எப்படி காம குரோதங்களில்லையோ, உலகப் பொருள்களில் எங்ஙனம் கோபதாபமில்லையோ, உலகை எப்படி மறந்திருக்கிருனே, அப்படியே, விழித்துக்கொண்

டிருக்கையிலும் உலக நினைவற்றுச் சமாதியிலிருந்து விடவேண்டும். அதுவே, சந்தையில் கட்டும் சமாதி.

அருணகிரிநாதர், முருகனை நோக்கி, "அப்பா! முருகா! உன் சமாசாரம் தெரிந்துவிட்டது. குறிஞ்சி நாட்டிலுள்ள சித்தூருக்கு நீ போனகாரணத்தை யறிந்துவிட்டேன். அங்கு நீ வள்ளியுடன் விளையாடிக் கொண்டிருக்கிறாய்" என்றார். பாடிக்கொண்டே குறிஞ்சி நாட்டின் வழியாகச் சென்ற அருணகிரியார் அங்குள்ள பறவைகளையும் செடிகளையும் பார்த்தாராம். அவைகள், "இங்கு முருகன் வள்ளியுடன் இரகஸ்யமாய் விளையாடிக் கொண்டிருக்கிறானே, இங்கு எப்படி வந்தீர்" என்று கேட்டனவாம். ஆனால், அவையாவும் அருணகிரியாருக்கு முருகனும் வள்ளியுமாய்க் காட்சியளித்தனவாம். "வள்ளியும் முருகனும் விளையாடிய இரகஸ்யத்தைக் குறிஞ்சி நிலத்திற்குப் போய்ப் பார்த்தேன். அவைதாம் எனக்கு வெளிப்படுத்திவிட்டன, என்றார். "ஸர்வம் பிரம்மமயம்" உலகமெங்கும் வள்ளி முருகனுடைய விளையாட்டென்று அறிந்தேன், என்றார்.

"இன்னங் குறித்தடியேன் செவிநீயன்று கேட்கச்சொன்ன
குன்னங்குறிச்சி வெளியாக்கிவிட்டது"

என்ற கந்தரலங்கார அடியால் இதைக் குறிப்பிடுகிறார்.

ஞானி விழித்திருக்கும்பொழுது எல்லா ஜீவராசிகளிலும் பகவானையே பார்ப்பதால், விழித்திருக்கும் பொழுது ஜாலர் தட்டிப் பஜனை செய்கிறான். தூங்கும்போது அபேத பூஜை செய்கிறான். சரீரத்தை ஆண்டவனது கருவியாக்கி எல்லாம் அவன் செயலென்றிருப்பவனுக்குக் கவலையேது?

சமத்துவத்தினுல்தான் ஞானசம்மந்தம் ஏற்படுகிறது. ‘நான், எனது என்பதுதான் பந்தம். அதாவது, ‘நான்’ இந்தச் சரீரம் என்னுடையது என்று ஒரு சரீரத்தில் தன்னைக் கட்டிக் கொள்வதுதான் பந்தம். எல்லாம் சமமாகப் பார்ப்பவருக்குக் கவலை கிடையாது. கோபம் வரவேண்டிய விடத்தில் கோபத்தை யடக்கினுல், பொறுமை வந்துவிடும். ஒரு இடத்தின் இன்பமே, மற்ருேரிடத்தில் துன்பமாகிறது. மனம் சமத்வத்திலிருந்து விட்டால் கவலை கிடையாது. யாருக்குக் கவலையில்லாமலிருக்கும், கவலை நீங்குவது எப்படி, என்பதற்குச் சதாசிவ பிரம்மேந்திராள் கூறியுள்ளார். “சமதமகருணு சம்பூர்ணுனும் சாது சமாகம சங்கீர்ணுனும் சிந்தா நாஸ்திகிலா தேஷாம் சிந்தா நாஸ்திகிலா” என்று பாடியுள்ளார். அதாவது கருணை வேண்டுமாம், சமத்வம் வேண்டுமாம். சாது சங்கத்தில் சேர்ந்து பஜனை செய்துக் கொண்டிருக்க வேண்டுமாம். இப்படியிருப்பவர்களுக்குக் கவலை கிடையாதாம். பிறவி தீரவேண்டுமானுல் அதற்கென்ன செய்வது? அனைவரையும் அகப்பேய் (அகங்காரமாகிய பேய்) பிடித்தாட்டுகிறது. பேதமில்லாமலிருந்தால் அது நம்மைவிட்டு ஓடிவிடும். துறவியானவர்கள் கவலையைத் துறந்தவர்கள். அவர்கள் எது வந்தாலும் கவலையற்றுச் சும்மாயிருப்பார்கள். “பிறவி தீரவென்ருல் அகப்பேய் பேதகம் பண்ணுதே—துறவியானவர்கள் அகப்பேய் சும்மாயிருப்பார்கள்.” என்று சித்தர் கூறியிருக்கிருர்.

சாது சங்கத்தினுல் (சாதுக்களுடைய சேர்க்கை) சமத்துவம் உண்டாகும். காட்டுக்குப் போய்த்தவம்

செய்யவில்லையே, முக்தி எப்படிக் கிடைக்கும் என்று பயப்படவேண்டாம். "கலியுகத்தில் கஷ்டப்படாமல் சுகமாயிருக்க வழியிருக்கிறது. பகவானுடைய நாம பஜனை செய்யுங்கள். சிவசத்தியாகிய ஜாலவரை ஒன்று சேர்த்துத் திருப்புகழ் பாடுங்கள். பாடிப் பாடிப் பகவானுடன் மனதை ஒன்று சேர்த்துவிடுவதே, பூஜையில் சிறந்த ஆத்ம பூஜை. மூவாசை கொண்ட மனமே! உனக்கு ஏன் தேவாசை கொள்ளத் தெரியவில்லை." என்றார் அருணகிரி நாதர். அவர் உலகத்திற்குச் சிறந்த பூஜையாகிய ஆத்ம பூஜையை உபதேசித்திருக்கிறார்.

"ஆசை கூர்பக்தனேன் மனோபத்ம
மான பூவைத்து நடுவே
அன்பான நூலிட்டு நாவிலேசித்ர
மாகவே கட்டி ஒருஞான
வாசம் வீசி ப்ரகாசியா நிற்ப
மாசிலோர் புத்தி அளிபாட
மாத்ருகா புஷ்பமாலை கோலப்ர
வாளபாதத்தி லணிவேனோ"

மனத்துக்கு ரம்யமான பாடல். ஆத்ம பூஜையை உபதேசிக்கும் பாடல் இது.

முருகன் மேல் தீவிரமான ஆசைகொண்டே மனமாகிய தாமரைப் பூவையே "மனோபத்மமான பூ" என்றார். அதைப் பகவானுடைய பாதத்தில் போடுவதெப்படி? மனமாகிய தாமரைமொட்டு பகவானுடைய நினைவினால் மலர்ந்து தாமரைப் பூவாகி அவனது பாதாரவிந்தத்தைச் சேர்ந்துவிடும். நினைவினாலேயே மனத்தாமரையை பகவானது பாதத்தில் சேர்த்து விடவேண்டும். நாம ரூபங்களினால் கட்டப்பட்டது

உலகு. உலகில் ஒரு ரூபத்தைக் கூப்பிடவேண்டு மென்ருல், ஏதாவதொரு நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுகிருேம். உடனே, அந்த நாமத்தையுடையவன் வந்து நிற்கிருன். ஒலிப்பதே நாமத்தினுடைய பிரயோஜனம். குழந்தை பிறந்திருக்கிறது அதை எப்படிக் கூப்பிடுவது? கிச்சு, ராமு, கோபு, என்ரு அழைப்பது? பகவானுடைய அழகான பெயர்களைச் சொல்லி, கிருஷ்ணு! ராமா! கோபாலாவென்றழைத்தால் அவன் ஏனென்று கேட்பான். கேட்பது உலகமல்ல; ஆணவமல்ல; உள்ளே உயிருக்குயிராயிருக்கும் பகவானே. ஆதலால், பேதமாகக் காணப்படும் உலகை அபேதமாகிய நாம சப்தத்தினுல், கட்டவேண்டும். மூன்று உலகங்களிலும் அதற்கப்பாலும் நிறைந்திருக்கும் பரம்பொருளை அவனுடைய நாம சப்தத்தினுல் கூப்பிடுகிருேம். அவ்வாறு கூப்பிடும் சப்தசங்கள் உலகத்தில் பல இடங்களில் ஏற்பட்டிருக்கின்றன. அது, இது என்று பிரிப்பது சத்சங்கமல்ல. பிரிவை வளர்ப்பது அசத் சங்கமேயாகும். யாவரையும் நம்மவராகக் கருதி யாவற்றிலும் ஒன்றுபடுவதே சத்சங்கம். ஆதலால், நாவினுல் முருகாவென்றழைத்து அந் நாம சப்தத்தினுல் மனதைக் கட்டு. அவனுடைய விசித்தரமான பல லீலைகளையும், அவற்றிற்குரிய நாமங்கள் எல்லாவற்றையும் கூறி நாவினுல் சித்ரமாகக் கட்டு. நாவிலே நாமத்தையேற்றி அதனுல் மனம் கட்டுப்பட்டதும், உள்ளம் பேஷ் பேஷ் என்று சொல்லும். அது நமக்குத் தெரியாவிட்டாலும் அதுவே மனச்சாட்சி. அப்படிக் கட்டிய மனத்தில் வாசனையாயும், கற்பூர ஜோதியா

யும், எங்கும் வியாபித்திருக்கும் பகவானுடைய அருள் ஏற்படுகிறது. ஞானவாசனை வீச ஆரம்பிக்கிறது. நாமசப்தங்களே, மாத்ருகா புஷ்பம். அந்த சப்தங்களில் உலகத்திலுள்ள எல்லா தேவதைகளும் அடக்கம். கண்ணு! என்று கூப்பிட்டால் முருகன் ஏற்றுக்கொள்வானு என்ருல், நிச்சயமாய் ஏற்றுக் கொள்வான். இதை உதாரணத்தால் காட்டுகிறேன். கணபதி முன் செல்லுகிறேன். கற்பூரத்தைக் காட்டுகிருர் குருக்கள். கணபதி வேறல்ல; கற்பூரம் வேறல்ல. ஜோதியாய் இருக்கும் கணபதியை வணங்கு என்பதே இதன் கருத்து. மற்றவிடங்களில் முருகனுக்கும் அவ்வாறே சூரியனுக்கும், லிங்கம், அம்பாள் முதலிய எல்லா மூர்த்திகளுக்கும் கற்பூரக் கட்டியை ஏற்றுகிருர். இதனுல். பகவான் எங்கும் ஜோதி மயமாய் நிறைந்திருக்கிருன் என்று தெரிகிறது. "ஜகத்தில் ஜோதிப் பெருமாளே;' என்று அருணகிரியார் முருகனை அழைக்கிருர். இறைவனிடம் அன்புகொண்ட மனத்தை 'மாத்ருகா' புஷ்பம் என்று குறிப்பிடுகிருர் அருணகிரியார். பரமனுக்குப் 'பூவும் நீரும் என் மனம்" என்று அர்ப்பணம் செய்கிருர் சித்தர். "கடிமனமே அடிமையாக" என்ருர் அப்பர். ஆண்டவனுக்கு அடிமையாக்கப்பட்ட மனம் ஞான பரிமளம் வீசும் மாத்ருகா புஷ்பமாக மலருகிறது. சித்தர்களும்: பக்தர்களும் பரம ஞானிகளும் ஆத்ம பூஜையை இவ்வாறு உபதேசித்திருக்கிருர்கள்.

எவர் எத்தகைய கொடுமை செய்தாலும் கொடிய விஷத்தை நீலகண்டன் கழுத்திலடக்கியது

போல தீமையை மனத்திலடக்கிவிட வேண்டும் உள்ளம் குளிரும்படியான இன்சொற்களையே பேச வேண்டும். துன்பம் செய்பவர்களையும் அன்பாக அழைப்பதே தவத்தில் சிறந்த தவம்."

'துள்ளுமறியாம் மனது பலி கொடுத்தேன்'; என்றார் தாயுமானவர். அடக்கமில்லாமல் அகங்காரத்துடன் துள்ளும் மனதை ஆண்டவனுக்குப் பலியாகக் கொடுத்தால் பிராரப்தம் போய்விடும். மனம் எப்பொழுதும் ஆண்டவனிடமே ஈடுபட்டிருக்கவேண்டும். அதுவே சதாகால பூஜை. உலகத்தை மறந்து ஆண்டவனோடு ஒன்றுபடுவதே ஆத்ம பூஜை. இந்த ஆத்ம பூஜைக்கு மடி வேண்டாம்; குளிக்க வேண்டாம். பூஜைக்குரிய சாதனங்களோ, சவுகரியங்களோ எதுவும் வேண்டாம். எப்பொழுதும், எங்கும் செய்யலாம் இவ்வாறு ஆத்ம பூஜை செய்பவருக்கு சமத்துவம் தானாக வந்துவிடும். உலகத்தை லக்ஷியம் செய்யவேண்டாம். உலகம் அந்த உத்தமர்களது வெளி ஆசாரங்களில் ஏமார்ந்து பரிகசிக்கும். உத்தமர் யார்? பகவானுடைய நாமத்தைச் சொல்லி, மனத்தை பிரகிருதி சுவபாவங்களிலிருந்தும் விடுவித்து ஏற்றி, ஏற்றி மேலே ஞானத்துக்குக் கொண்டு வருபவர் உத்தமர். உலகத்தை நினைத்து நினைத்து பிரகிருதி சுபாவத்தில் தன்னை இறக்கிக்கொண்டிருப்பவரே, இறங்குபவர்.

ஆதலால், முருகா சரணம்! என்று பாடிக்கொணடே படிப்படியாக மேலேமேலே ஏறி தணிகை உச்சியை அடைந்து ஆறுமுகன் திருவடி அடைவோமாக!

---

# புலித்தோலுடுத்த புனிதன்

பரமசிவன் காமனை எரித்தார் என்பர். காமம் என்பது ஆசை. சிவனை நினைத்தால் ஆசை அடியோடு ஒழிந்துவிடும். ஆசையை வென்றால் பெருத்த சக்தியைப் பெறலாம். மன்மதனெனும் ஆசையை எரித்து சக்தியாகிய பார்வதியை அடைந்தார் பரமசிவன். ஆசையை வெல்வதெப்படி? ஆசை ஆண்டவனால் நமக்களிக்கப்பட்ட பெருத்த சக்தி. அதை உலகப் பொருள்களில் செலுத்தி வீணாக்குவதனால் துன்பமுண்டாகிறது. ஆனால், அதை உலகப்பொருள்களிடம் செல்லாதபடி தடுத்து ஆண்டவனிடம் திருப்பினால் ஆனந்தமுண்டாகும். ஆசையை ஆண்டவனிடம் திருப்பி பெரும் பேறடைந்தவர்களே, ஆண்டாள் மீரா, கோபிகள், வள்ளி முதலியவர்கள். வேண்டாத வழியாகிய உலகத்திலிருந்து ஆசையைத் திருப்பி வேண்டும் வழியாகிய ஆண்டவனிடம் செலுத்துவதே ஆசையை வெல்வது.

மங்களத்தைத் தரும் பண்புக்கு சிவம் என்று பெயர். எங்கும் பரவியிருக்கும் தத்துவத்திற்கு விஷ்ணு வென்று பெயர். இந்த சிவ, விஷ்ணு (அல்லது) சங்கர நாராயண தத்வமே எல்லா ஜீவ ராசிகளின் இதயத்திலும் ஒன்றியிருக்கும் தத்துவமாகிய பிரம்மம். அந்த பிரம்ம தத்துவத்தை 'ஓம்' என்ற சத்தம் (அல்லது) ஒலியால் குறிப்பிடுகிறது வேதம். எந்த மனோ வெளியில் நாமிருக்கிறோமோ அந்த மனோ வெளியில் 'ஓம்' என்ற பிரம்ம தத்துவம் குடிகொண்டிருக்கிறது. அந்த 'ஓம்' என்ற சப்தம்

எதைக் குறிக்கிறதோ அதுவே பரம். பரமே முருகன். ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு விதமான சத்தம் (அல்லது) ஒலியுண்டு. ஒருவரை வைவதும், வாழ்த்துவதும், ஒலியினுல்தான். ஒலி யில்லாவிட்டால் உலகமேயில்லே. பிரம்ம தத்துவம், ஜீவ ராசிகளேக் காப்பதற்காகப்பற்பலகருணையுருவங்களே எடுத்துக் கொள்ளுகிறது. ஒவ்வொரு உருவத்தையும் ஒவ்வொரு சப்த அடையாளத்தினுல் குறித்தனர் பெரியோர். அப்படிப்பட்ட ஒலி அடையாளங்கள் தான், இராம, கிருஷ்ண, முருக, சிவ முதலியன. இந்த சத்தங்களெல்லாம் 'ஓம்' என்ற ஒலியிலிருந்து உண்டாகி அந்த ஒலியிலேயேபோய் ஒடுங்குகின்றன. 'ஓம்' என்ற பரபிரம்ம சுவரூபத்தையே 'ராம' என்ற சத்தத்தினுல், வா! வா வென்றழைத்தனர் தேவர் களும் முனிவர்களும். அந்த அழைப்பிற்கிணங்கியே இராமாவதாரம் வந்தது.

இராமனும் கிருஷ்ணனேப்போல் குழந்தையாய் விளேயாடினுன். அதனுல், நாட்டிலிருந்த பாவங்க ளெல்லாம், புண்ணிய சொரூபனுகிய இராமனிருக்கு மிடத்தில் இருக்க முடியாமல் காட்டிற்குச் சென்ற னவாம். அதனுல், காட்டில் வசித்துவந்த முனிவர்க ளெல்லாம் துன்புற்றனர். அவர்களுடைய துன்பத் தைத் தீர்ப்பதற்காக அரண்மனேயில் விளேயாடிக் கொண்டிருந்த அழகன் சடைமுடி தரித்து புலித் தோலணிந்து சிவரூபமாகி, பாவ வடிவங்களான அரக்கர்களே அழிப்பதற்காக காட்டுக்கே போய் விட்டானும். பிரம்ம சித்தம் தன் தொழிலுக்கேற்ப வேடம் பூண்டு கொடிய குணங்களான அரக்கர்களே

யழித்தது. இராமனும், முருகனும், பிரம்மத்தின் இரண்டு விதமான கருணையுருவங்களே. அருணகிரியார் முருகனை "ரகுராமர் சிந்தை மகிழ்மருகா" என்றார். முருகனை மனதால் மருவி சிந்தை மகிழ வேண்டும்.

இராமர் ஜானகியுடன் சடைமுடி தரித்து அர்த்தநாரீசுவரராகி வனத்திற்குச் சென்றார். அங்கு பதினான்கு வருடங்கள் கஷ்டப்பட்டார். அதனால், பதினான்கு உலகங்களும் க்ஷேமத்தை யடைந்தன. பகவான் ஆடுவது காட்டில்தானே! பரமசிவன் சுடுகாட்டில் ஆடுகிறான். எப்பொழுதும் ஒரே மாதிரியான சூட்டுடன் இருப்பதே சுடுகாடு. அதுதான் நமது உடல். உயிரற்ற உடலைச் சுடும் காட்டையே சுடுகாடென்கின்றனர் மனிதர். ஆனால், அந்தக் காட்டிற்கு இயற்கையில் சூடு கிடையாது. நம் உடலில் எப்பொழுதும் இயற்கையாக 984 டிகிரி உஷ்ணம் இருந்துக் கொண்டேயிருக்கிறது. ஆதலால் இதுதான் சுடுகாடு. இந்தச் சுடுகாட்டில்தான் பரமசிவன் ஆடுகிறான். இதை,

"கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான் தனியன் என்னேடி"

என்று குறிப்பிடுகிறார் மாணிக்கவாசகர்.

ஜீவராசிகளின் உடலாகிய சுடுகாட்டைத்தான் ஆடும் அரங்காகக் கொண்டார் பரமசிவன்.

**கொல்புலித்தோல் நல்லாடை :**

புலி இறந்தபிறகு அதன் தோல் நல்லாடையாய் விடுகிறது. குரோதம் நிறைந்தது புலி. அதனுடைய குரோதம் ஒழிந்ததும் அதன் தோல் தூய்மையாய்

விடுகிறது. பரமசிவனுக்கு அந்தத் தோலில் மிக்க விருப்பமாம். ஒன்றிலும் பற்றற்ற பரமயோகிய பரமசிவனுக்குப் புலித் தோலில் மட்டும் ஏன் அத்தனை விருப்பம்? குரோதம் என்ற உணர்ச்சியே புலியின் வடிவமாக வந்திருக்கிறது. புலியைக் கொன்று அதன் தோலிலுள்ள மாமிசம் முதலியவற்றை அகற்றிச் சுத்தம் செய்த பிறகு, அந்தத் தோல் குரோத மின்மையைக் குறிக்கிறது. காம குரோதங்களை யழித்த மகா யோகிகள் குரோதமற்ற தன்மையைக் குறிக்கும் புலித்தோலை ஆடையாக அணிகின்றனர். நாமனைவரும் காம குரோதங்களைக் கொன்று சாந்தமாயிருக்க வேண்டு மென்பதையே; கொல்புலித் தோலாடை குறிக்கிறது.ஜீவராசிகளின் உள்ளமாகிய காட்டிலே உறுமிக் கொண்டிருக்கும் புலியாகிய குரோதத்தைக் கொன்றழித்துவிட்டால், குரோதமழிந்த அந்த உடலைத் தனது நல்லாடையாகக் கொண்டு உலவுகிறுனும் பரமன். 'சிவனை' நினைத்துக் கொண்டிருந்தால் குரோதம் தானுகவே அழிந்துவிடும்.

"தான் தனியன்" என்ருர். உலகமெல்லாம் தானேயாகித் தன்னைத் தவிர வேருெருவருமில்லாத பகவானைப் பெற்றவர் யார்? அவன் தான் ஆதியும் அந்தமுமில்லாதவனுயிற்றே. 'நான்' என்று உறுமும் புலியைக் கொன்றழித்து விட்டால், உலகமெல்லாம் தானென்ற உணர்ச்சி பெறலாம். உலகமெல்லாம் தானென்ற உணர்ச்சி பெற்ற ஜீவன் சிவ சுவரூபமாய் விடுகிறது.இதையே அருணகிரியார் "சீவன் சிவ சுவரூபமென தேறி" என்று திருப்

புகழிலும் "யானாகிய என்னை விழுங்கி வெறும் தானாய் நிலைநின்றது தத்பரமே" என்று அனுபூதி யிலும் குறிப்பிட்டுள்ளார். அனுபூதியைப் பாடிக் கொண்டே யிருந்தால் உள்ளே தானான தத்துவ மிருப்பதை அனுபவிக்கலாம்.

'பித்தனோ நின் தந்தை? ஞானவித்தனோ நீ மைந்த?' என்று ஒரு அற்புதக் கேள்வியைக் கேட் டார் ஒருவர். பரமசிவனைப் பித்தனாக்கினார். ஆனால், அவன் மைந்தனை ஞானவித்தன் என்றார். உலகை மறந்து எல்லாம் தானாகக் கண்டவர்கள் பித்தனைப் போல் காணப்படுவாராம். பிரம்ம ஞானிகள் பித்த ராகவே காணப்படுவாராம். தாயுமானவர் ஆண்ட வனைச் சொற் பிரகாசத்தனி யென்றும், அத்வைத வஸ்து என்றும் சொன்னார்.

## முடிச்சவிழ்க்கும் பெருமான்

அருணகிரியார், சிவமயமான பக்தர்களுடைய ஹ்ருதயத்தில் பிரகாசிக்கின்ற ஒப்பற்ற பரஞ் சுடர், சிவமய வடிவு என்று பழனி நாதனை வருணிக் கின்றார். கவலையற்று ஆனந்த மாயிருப்பதற்காகத் தொண்டர்கள் கோயிலில் கூடி பகவானைப் பாடு கின்றனர். ஆண்டவனுடைய அருள் விளங்குமிடம் கோயில். ஆறுபடை வீடுடையான் முருகன். ஆறு படை வீடென்பது மனித சரீரத்திலேயேயிருக்கிறது இதில் மூலாதாரம் முதல் பிரம்மாந்திரம் வரையில் ஆறு மலைகளிருக்கின்றன. ஆறு ஆதாரங்களா யுள்ள படை வீட்டைத் தாண்டி ஏழாவது வீட்டில்

ஜோதிமயமான ஆண்டவனைக் காணலாம். கற்கள் எத்தனையோ விடங்களில் பற்பலவிதங்களில் பயன் பட்டாலும் கோயிலிலிருக்கும் கல்லில் பகவான் குடி கொண்டிருக்கிறார். அதுபோல் பிரகிருதி ஸ்வரூபத் தினாலான இந்த உடலிலும் தெய்வம் விளையாடுகிற தென்று அறியவேண்டும்.

காயமே கோயிலாகக் கொண்டு, ஓங்கார உள்ளொளிக்குள்ளிருக்கும் முருகனுருவம் கண்டு, பிரபஞ்சத்தைக் காணாமல் உள்ளேயிருக்கும் முருக னைக் கண்டு தூங்கினால், பிறர் என்பது தோன்றாது. எல்லாம் தம்மவராகவே தோன்றும் எல்லாரும் நம் மவராகி விடுவதால், நமன் வந்த வழியைப் பார்த்துக் கொண்டு ஓடிவிடுவான். பிறர் என்று விரோதித்து எங்கு ஆண்டவனைப் பாராமல், அவர்களை விரட்டி யடித்து துரத்திப் பகைத்தால், அந்த பகைக்கும் வடிவத்திலுள்ள ஆண்டவனே யமனாகி விடுகிறான். "பேத அபேத மோடு உலகாய் வளர்வது" என்றார் அருணகிரியார். "வேதக் காட்சிக்கும் உபநிடதத் துச்சியில் உதித்த போதக் காட்சிக்கும் காணலன், புதியரிற் புதியன்" முருகன் என்றார், ஒரு பெரியார்.

ஆண்டவனை எத்தனை முறை பார்த்தாலும், கூடினாலும் இன்னும் பார்க்க வேண்டும் என்ற ஆவலுடன் கூடியவர்கள் தொண்டர்கள். ஆண்ட வன் தொண்டர்களுக்கு எப்பொழுதும் புதிது புதிதாக ருசியையும் இன்பத்தையும் கொடுத்துக் கொண்டேயிருப்பதால், தொண்டர்கள் அவனை அனுபவித்து திருப்தியடைவதில்லை. முருகாவென் றழைத்தால் கன்றின் குரலைக் கேட்டு தாய்பசு ஓடிவருவதுபோல் ஓடி வருகிறானும் முருகன். கோடை

மழையில் இடிவிழும் பொழுது அந்த மின்னலின் சாரம் ஆகாயம் முழுவதும் பரவியிருக்கிறது. எங்கும் நிறைந்திருக்கும் சக்தியாகிய மின்னல் திரண்டு பளீரென்று தன்னுடைய சக்தியை ஒரு குறியில் விடுகிறது. அதுபோல் எங்கும் நிறைந்த கடவுள் தொண்டர்கள் முருகாவென்று கூப்பிட்டால், உலகெங்கும் நிறைந்த தன்னுடைய சக்தியை அந்த தொண்டர்களுடைய இருதயத்தில் சேர்க்கிருன். உலகெலாம் நிறைந்த அகண்ட ஜோதியாகிய கருணை மயமான சக்தியானது இருதயமென்னும் பாயிண்ட் (அல்லது) குறியில் வந்து தங்குகிறது. எங்கும் நிறைந்த அன்பு மயமான ஜோதியைத் தொண்டர்கள் கண்ணின் வழியாகப் பார்க்கலாம். தொண்டர்கள் எல்லாவிதமான சக்தியையும், சித்தியையும் இருதயத்தின் மூலமாகவே பெறுகின்றனர். மழையாயும். தானியமாயும் இருப்பவன் பகவானே- இல்லாவிட்டால் தானியத்தைத் தின்று வளர்ச்சியடைய முடியுமா? இன்பம், அன்பு, கருணையாயிருக்கப்பட்ட நாமங்களே, தெய்வத்தினுடைய சிவ, கிருஷ்ண, முருகா என்னும் நாமங்கள்.

அந்நாமங்களில் ஏதேனும் ஒன்றைச் சொல்லி சாப்பிடவேண்டும்' வள்ளலார் உலகத்தின் கொடுமைகளிலிருந்து தொண்டரை எழுப்புகிருர். அவ்வாறு எழுப்பி எங்கும் நிறைந்த ஓங்கார ஜோதியே! எங்கள் உள்ளம் இருளாயிருக்கிறது, நீ வந்து உள்ளத்திருளைப் போக்கி ஒளியைத் தர வேண்டும் என்கிருர். அவர் வினைகளை நீக்கிவிட்டதால் அவருடைய உடம்பில் ஜோதியே நிலைபெற்றுவிட்டது.

"அருட்பெரும் ஜோதி தனிப்பெருங் கருணை," என்பதே காயத்ரி மந்திரம் நான் எனது என்னும் தன்மையற்ற வள்ளலாரது சரீரம் அவனதாய் விட்டதால், வந்த காரியம் முடிந்ததும், எல்லாமாகிய ஓங்கார சுவரூபமாகிய கற்பூரமாய் விட்டது. முருகனை நினைத்த உடன் அவனது ஜோதியில் கலந்துவிட்டார். முருகன் ஜோதியே வடிவானவன் ஜெகத்தில் ஜோதிப் பெருமாளே! என்றார் அருணகிரியார். ஓங்கார சுவரூபமே சேவல். அதன் தலையிலுள்ள கொண்டை முருகனே. முருகன் குங்கும ரக்தவர்ணன். நாம் அனைவரும் கற்பூரமாய் விட்டால், ஜோதியாகிய முருகனிடம் கரைந்துவிட லாம். உலகத்திற்கெல்லாம் ஒன்றாயிருப்பதும், ஓலமறைகளறைகின்றதுமான ஒரு பொருள் முருகன். அவன் "வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த போதக் காட்சிக்கும் காணலன், புதியரில் புதியன்".

வேதம் சப்த ஸ்வரூபமாகயிருக்கிறது சப்தத்தி னால் அது பார்த்துக் கொண்டேயிருக்கிறது. ஆனால் முழுவதும் பார்க்க முடியவில்லை. பார்க்கின்ற காட்சி யாகிய முருகன் பூரணனாகையால், பூரணமற்ற கண் பார்வையால் அவனைப் பார்த்து திருப்தியடைய முடியாது.

முழுதுமான ப்ரம்ம ஸ்வரூபத்தில், வைஷ்ணவ வன் ஒரு பாகத்தையும், சைவன் ஒரு பாகத்தையும், முகமதியரும், கிரிஸ்தவரும் ஒவ்வொரு பாகத்தை யும் பார்த்தார்களேயன்றி முழுவதும் பார்த்தவர் ஒருவரும் இல்லை. ஞான ஸ்வரூபமாய் உலகெலாம்

ஆனந்தமாய் நிறைந்த முருகனைக் கண்டு திருப்தி யடைந்தவர் ஒருவருமில்லை. கண்டுக் கொண்டே யிருந்தாலும் தெவிட்டாத காட்சியையுடையவன் முருகன். ஊனும் உயிரும் கலந்து எங்கும் நிறைந்த பொருளைக் காண்பதெப்படி? உலகத்தில் உள்ள பொருள் முருகனே.

ஐம் பொறிகளில் குறையேற்பட்டு அப்பொறி களால் அனுபவிக்க முடியாதவர்கள்கூட உணர்ச்சி யால் அனுபவிக்கக் கூடியவன் முருகன்.

"உளமவிழ, உயிரவிழ, உரையவிழ, உணரவிழ,
உளபடியை உணருமவர் அனுபூதியானதுவும"

என்றார் அருணகிரியார். ஏகமாகிய அந்த ப்ரம்ம ஸ்வரூபத்தை உரையும், உணர்வும், உளமும் அவிழ அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களாம் தொண் டர்கள்.

தாமரை மொட்டின் மேல் சூரியனுடைய ஒளி பட்டவுடன், கட்டுத் தளர்ந்து மொட்டு அவிழ்ந்து ஆனந்தமாகிய தேனைப் பெருக்கி, ஞானவாசனையை யெழுப்பி ஜோதிக்கு அர்ப்பணம் செய்கிறது. தன் வாழ்க்கையின் ரகசியமான தேனை ஹ்ரீங்கார ஸ்வரூபத்திற்கு அர்ப்பணம் செய்கிறது. அதுபோல் உள்ளமாகிய தாமரை மொட்டு அவிழவேண்டும். உரை, உணர்வு, உளம், உயிர் எல்லாம் ஒன்றினல் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டு (அல்லது, முடிச்சை அவிழ்க்கக் கற்றுக்கொள்ள வேண்டும். முடிச்சை அவிழ்க்கத் தெரிந்தவனே பிழைக்க வழி தெரிந்தவன். ஐந்து முடிச்சுக்கள் அவிழ்ந்து ஆறுவது முடிச்சவிழ்க்கத் தெரிந்தவுடன் ஜோதிமயமான முருகனைப் பார்க்கலாம்.

உள்ளத்திலுள்ள முடிச்சை யவிழ்த்து சிந்தா ரத்தினத்தைப் பார்த்து அதில் அப்படியே லயித் திருக்கின்றனராம் யோகிகள். சிந்தையிலிருக்கப் பட்ட இரத்தினம் வீணுகக்கூடாது. அதையடைந்து அனுபவிக்கத் தெரிய வேண்டும். முருகா வென்று சொல்லிக் கொண்டிருந்தால், உள்ளேயிருக்கப்பட்ட முடிச்சுகள் தானே அவிழ்ந்துவிடும். உடம்பு கோயிலாய்விடும். பிறவியின் பயன் அதுவே.

"திமிர உததியனைய நரக ஜெனன மதனில் விடுவாயேல்" என்ற திருப்புகழில் அருணகிரியார் அக்கியான இருள் நிறைந்த சமுசார சமுத்திரத்தில், பிறவியைத் தருவாயேல், உன்னிடம் செலுத்து வதற்கு ஐம்பொறிகளும் குறையற்றிருக்க வேண்டும். தரித்திரம் இருக்கக்கூடாது. அறிவு நிறைந்திருக்க வேண்டும்" என்று வேண்டுகிறார்.

உலகம் அறிவாளிகளிடம்தான் இருக்கிறது. அவர்களுக்கு நல்ல பாவத்தை உணர்த்துகிறது.

டகரம் சிவன், ணகரம் சக்தி, அவிழ்தல் என்பது வளர்ச்சி. உயிர் உளம் எல்லாம் அனுபூதி யால் வளருகிறது. மனிதனுடைய மானத்தைக் காப்பவன் முருகனே. முருகனைக் கேட்டால் அவமானம்போய் பெருமானம்வந்துவிடும். பாஞ்சாலி துரியோதனன் சபையில் நிறுத்தப்பட்டபொழுது உறவினர்களனைவரும் கைவிட்ட காலத்தில் கையைக் கூப்பினுள். தன்னை மறந்தாள், 'ஹரிஹரி' என்ருள். கண்ணன் ஆடை தந்து அவள் மானத்தைக் காத் தான். அது பொய்யர் தம் துயரினைப் போலவும், மெய்யறிவாளர்களினுடைய புகழ்போலவும் வளர்ந்த னவென்ருர் பாரதியார். அடியார்களுடைய பாதமே துணையென்று நினைத்து முருகனைப் பாடுவது பெரி

தாம். அனுபூதியில் உணரும் ஆனந்தமே முருகனுடைய சரணாரவிந்தம். முருகனுடைய சரணத்தை நினைக்கும்பொழுது உயிரும், உளமும் வளர்ச்சியடையும். மானத்தைக் காப்பாற்றி இகபர சௌபாக்கியங்களைக் கொடுப்பவன் முருகன். தொண்டர்களின் மனோ வெளியாகிய மேல வெளியில் ஒளிரும் பரஞ்சுடர் முருகனே. அந்த ஒளி மேல வாசலைத் திறந்து கண்களின் வழியாக உள்ளே புகுந்துவிடுகிறது. ஜோதியாகிய பகவானுடைய தரிசனத்தைக் கண்டவுடன் தெய்வீக குணங்களெல்லாம் சேர்ந்துவிடுகின்றன. தெய்வீக குணங்களே பகவானுடைய கிரணங்கள். பிறகு தொண்டர்களின் உள்ளே புகுந்து கலந்து விடுகிறான்.

> "வெள்ளநீர்ச் சடையான ஏதோ வினவுவார் போலே
> வந்து என் உள்ளமே புகுந்தார்; அவரை நோக்கி
> நீர் கள்ளனோ வென்றேன்."

என்றார் அப்பர்.

"எல்லாமாகி கலந்து நிறைந்த பின் ஏழமையுண்டோடா" என்றார் பாரதியார். எல்லாமாகிக் கலந்து நிறைந்தால்தான் நிறைவுண்டாகும். அதுவே மெய்க் கலப்பு. அன்பினால் சித்தம் கலக்கிறது. முருகனை அன்பினால் பாடும்பொழுது எல்லார் மனமும் அன்பினால் ஆண்டவனிடம் கலந்துவிடுகிறது இறைவனிடம் உள்ளத்தால் கலப்பதே உண்மைக் கலப்பு. மற்றதெல்லாம் உண்மைக் கலப்பல்ல. பாரதியார் எல்லாமுமாகி ஆண்டவனுடன் கலந்தார்; நிறைந்தார். பிரிக்க முடியாத அனுபூதிச் செல்வத்தில் கலந்தபின் பிரிவு கிடையாது. அது வருபவர்களை யெல்லாம் சேர்த்துக்

கொள்ளும். வந்தவர்களை வெளியில் விடாது. உள்ளதெல்லாம் ஒருயிராகிய முருகன் என்று உணர்ந்தபின் நிறையுமேயன்றிக் குறையுமோ?

உலகெலாம் ஒரே குடும்பம். குடும்பத் தலைவன் முருகன். உள்ளது ஒரே உயிர். உள்ளத்தைச் சுத்தப்படுத்துவது முருகா வென்ற சப்தமே. முருகா வென்ற நாமத்தை ஓதி முடிந்து அறிய முடியாது ஆதலால் ஓத அரியது முருகா வென்ற நாமமே முருகா வென்று சொல்லி அனுபவிப்பவனின் அனுபூதியா யிருப்பவன் முருகன். கந்தா, கந்தா வென்றால், உணர்வு, உளம் முதலியவற்றால் கட்டப் பட்ட உயிராகிய தாமரை மொட்டு முறையே ஒவ்வொன்றாய் அவிழ்ந்து மலரும். உலகத்தை மறந்து தொண்டருடன் கலந்து ஆண்டவனைப் பாடி அவனுடன் கலப்பதே மௌனம். சரீரத்தைக் கர்ம காண்டத்தினால் அனுபவிக்க வேண்டும். அதைத் தாண்டினால் ஞானகாண்டமாகிய மனோவெளியில் அனுபவிக்க வேண்டியவன் முருகனே. உடல் மண் வடிவம். உயிர் விண்வடிவம். மண்ணும் விண்ணும் கலந்ததே உடலும் உயிருமாகும். அதுவே சிவமும் சக்தியும் கலந்த கூடல் க்ஷேத்திரம். அதில் அனுபவிக்க வேண்டியவன் முருகனே.

கல்லும் சுண்ணும்பும் சேர்த்துக் கட்டுவது கோயிலல்ல. "கோ" என்றால் இறைவன். இல் என்றால் வீடு. இறைவனது இருப்பிடமே கோயில். தேகத்தையே கோயிலாகக் கட்டவேண்டும். இதுவே சமாதி. சமாதியைச் சந்தத்தினால் கட்டவேண்டும்.

"சிந்தையில் வைத்து சிராதியில் வைத்து
சந்தையில் வைத்து சமாதி செய்வீரே."

என்றார் திருமூலர்.

திருப்புகழ் சந்தத்திலும், ஆண்டவனுடைய நாமத்திலேற்பட்ட சந்தத்திலும் வைத்து சமாதி கட்ட வேண்டும். எந்தப் பண்ணுக ஆண்டவன் உலகில் நிறைந்திருக்கிருனே. அந்தப் பண்ணுக்குப் பெயர் சந்தஸ். இதையே சந்தம் என்பர். பண் சுமந்த பாடலைப் பாடும் தொண்டர்களுக்கு முருகன் தன்னையே கொடுத்து விடுகிருன். பெண் சுமந்த பாகத்தான் என்ருல் பெண்ணைச் சுமந்திருக்கிருன் என்பது பொருளல்ல. அம்மையப்பனுடைய உருவத்தையே பெண் சுமந்த பாகத்தான் என்பர். உள்ளத்தில் அம்மை அப்பனையும் அப்பன் அம்மையையும் வைத்துக்கொள்வர். இதனுல் சுமையும் பளுவும் இல்லை.

அரச மரத்தினடியில் இரண்டு பாம்புகள் பின்னிக் கொண்டிருப்பதுபோல் கல்லில் செதுக்கி வழிபடுவதைப் பார்க்கலாம். அதுபோல் சக்தி சிவத்தையும், சிவம் சக்தியையும் அன்பினுல் விழுங்கி இரண்டும் ஒன்ருன ஓங்கார வடிவமே அம்மையப்பனுடைய வடிவமும். நாம ரூபத்தினுல் பக்தன் அடையும் விடுதலையையும் மற்றொருவிதத்தில் இந்தப் பின்னிக் கொண்டிருக்கும் பாம்பின் வடிவம் குறிக்கிறது.

ஜீவிதம் என்ற பாம்பு பரமாத்மாவையும். பரமாத்மா வென்ற பாம்பு ஜீவிதத்தையும் ஒன்றையொன்று அன்பினுல் விழுங்க இரண்டும் ஒன்ருக ஓங்காரமாகிவிடும்.

எங்கும் ஆதியாய் நடுவாய் முடிவாய் ஊடுருவியிருக்கப்பட்ட தத்துவமாகியவனே முருகன். உலகத்திலுள்ள ஜீவராசிகளைத் தன்னிடம் இழுக்கும்

காந்தமாகிய கந்தன் அவனே. இந்த காந்த சக்தியாகிய இழுப்புச் சக்தியினுல், துருப்பிடித்த ஊசிபோல் ஆணவம் ஏறியுள்ள ஜீவராசிகளின் துருவாகிய ஆணவத்தைத் தன் கருணையினுல் போக்கித் தன்னுடன் சேர்த்து ஒற்றுமைப்படுத்திக் கொள்ளுகிருன்.

"வேற்றுமையில் பிறந்த நான் ஒற்றியூராணுகிய ஆண்டவனுடன் சேர்ந்து ஒற்றுமையாய் ஒன்ருய்விட்டேன்" என்ருர் பட்டினத்தார்.

பேதமாகிய பள்ளிக்கூடம் உலகம் அதில் அபேதமாகிய ஒற்றுமையைக் கொள்ளவேண்டும். வேற்றுமையைப் பார்க்கும் உலகுடன் மனதில் "முருகா" வெனும் நாமமாகிய கோந்தைப் போட்டு ஒட்டிக்கொள்ள வேண்டும். அந்த நாமத்தின் ருசியை உணரவேண்டும். முருகாவென்று சொல்பவர் உள்ளதை உள்ளபடி உணருவார். அதுவே பேரின்ப அனுபூதி. பிராரப்த கர்மம் நம்மைத் தன்னிடம்அகப்படுத்திக்கொள்ள சுற்றிக்கொண்டேயிருக்கிறது. அதனிடம் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது. வேற்றுமையிலாது ஒன்றுபடுகின்ற தொண்டர்களை நாடவேண்டுமேயென்று அருணகிரியார் கதறுகிருர். மனதிலுள்ள வேற்றுமையினுல், நீ வேறு நான் வேறு என்று நினைத்துக்கொண்டு, வந்தவரை விரட்டும் வழக்கம் நீங்கவில்லையே என்கிருர். ஞானத்தினுல் வந்தால் போதாது பழக்கத்தில் ஒற்றுமையைக் கொண்டு வரவேண்டும். முருகனிடம் அன்பு செலுத்துவதாயிருந்தால் உயிருக்குயிராகிய முருகனைப்பற்றி தெரிந்த ஞானத்தை சேவை யென்கிற தொண்டால் வழிப்படுத்திக்

கொள்ளவேண்டும். அபேதமான பொருளை பேதப் படுத்துகிற காலத்தில், அபேதத்தையுண்டாக்கு கிறது. உதாரணமாக ஒரு முழு பழத்தைப் பல துண்டுகளாகப் பேதித்து அன்பர்களுக்குக் கொடுத் தால், துண்டுகள் பலவாயினும் ருசி ஒன்ருய்விடு கிறது. ஆதலால் ருசியின் உணர்வு அபேதமாய் விடுகிறது. எதையும் எனக்கென்று வைத்துக் கொண்டால் பேதமாய் விடுகிறது. தொண்டர் களனைவரும் வள்ளி. முருகன் உலகெங்கும் நிறைந் திருப்பதால் முருகனை நாடும் மனமெல்லாம் வள்ளியே. அன்புமயமாயிருக்கப்பட்ட தொண்டர் களெல்லாம் ஞானிகள். பிரமத்தைச் சேர்ந்தவன் பிராம்மணன். முருகா, வென்றழைத்தவுடன் அவன் உள்ளத்தில் வந்து விடுகிருன். பிறகு அவ்வுள்ளத்தி லுள்ள ஆசாபாசங்களாகிய புகைகளை எடுத்துவிட்டு, உள்ளத்தைத் தூய்மையாக்கி அந்த உள்ளத்தில் தானும், தன் உள்ளத்தில் அவனுமாய் அமர்ந்து விடு கிருன். முருகனுக்குள் தொண்டர்களும் தொண் டர்களுள் முருகனுமாய்க் கலப்பதுதான் மோக்ஷம்.

## மறை பொருள்

முப்பத்து முக்கோடி தேவர்களும் பக்தர்களுக் குள் அடங்கியிருக்கிருர்கள். ஏனெனில், பகவானுக் குள் முப்பத்து முக்கோடி தேவர்களும் அடங்கியிருப் பதால், பகவானுடைய நாமத்தைச் சொல்லிக் கொண்டிருக்கும் பக்தனுக்குள் பகவான் புகுந்து

விடுகிருன். அவனுடன் முப்பத்து முக்கோடி தேவர்களும் புகுந்துவிடுகின்றனர். ஆதலால், பஜனை செய்யும் பொழுது எதிரில் ஒருவருமில்லையே என்று நினைக்கவேண்டாம். முப்பத்து முக்கோடி தேவர்களும் பஜனை செய்பவன் எதிரில் கூடி விடுகின்றனர். அவ்வாறு கூடியிருப்பதை அன்புக் கண்ணுல் பார்த்தால்தான் தெரியும். எதிரில் காணப்படும் ரூபங்களெல்லாம் தெய்வ சுவ ரூபங்களாயிருப்பதை அன்பினுல் மட்டுந்தான் பார்க்கமுடியும்.

பிரம்மா ஜீவாத்துமாவாகிய விதையை நட்டு விசித்திர செடிகளை வளர்க்கிருன். அந்தச் செடிகளே மானிடர்கள். விதை முளைத்து வளருவதற்கு வெய்யிலும், நிழலும் வேண்டுமல்லவா? அதுபோல, ஜீவாத்துமாவாகிய விதை முளைப்பதற்கு நல் வினை, தீவினைகளாகிய இருவினைகளும் வேண்டும். ஆதலால், அவ்விருவினைகளையும் கூட்டி ஐந்து பூதங்களாகிய மண்ணையும், விண்ணுகிய ஆவியையும் சேர்த்து ஜீவராசிகளாகிய செடிகளை வளர்க்கிருன். அம்பாளுடைய சுவரூபமே பிரகிருதியாக விகஸித்து ஐந்து பூதங்களாக மாறுகிறது. அந்தச் செடியில் மலரும் மலரே, பக்தியெனும் மலர். அம்மலர் மலர்ந்த உடன் தன் மணத்தை ஆகாச வடிவான பிரம்மத்துக்கு அர்ப்பணம் செய்கிறது. ஜீவராசிகளாகிய செடிக்குள் பகவான் பிரகாசித்துக் கொண்டிருக்கிருன், அவன் பிரகாசிப்பதினுலேயே அவைகள் வளருகின்றன. ஆனுல் அவனைப் பார்க்கமுடியவில்லையே, என்ருல், உள்ளத்தில் அன்பெனும் விளக்கை வைத்தால், ஒவ்வொரு ஜீவராசிகளிடமும் அவனிருப்பதைப் பார்க்கமுடியும். அன்புதான் எல்லாவற்

றையும் விளக்குகிறது விளக்கினல் தெளிவேற்படு கிறது. தெளிவே ஞானம். அன்பு உள்ளத்தி லில்லையே, என்ருல், அன்பர்களுடன் சேர்ந்தால் அன்பூற்றம்தானே ஏற்படும். எரியும் விறகுடன் எரியாத விறகைச் சேர்த்து வைத்தால், எரியாத விறகும் எரியும் விறகுடன் சேர்ந்து எரிய ஆரம்பிப் பது போல, பக்தியில்லாதவன் பக்தர்களுடன் சேர்ந்து பழகினல் பக்தியுண்டாகும், இதை குறிக் கத்தான், "தொண்டரொடு கூட்டு கண்டாய்" என்று தாயுமானவரும், "சூரில் கிரியில் கதிர் வேலெறிந்தவன் தொண்டர் குழாம் சாரில் கதியன்றி வேறிலே காண்" என்று அருணகிரியாரும் பாடி யுள்ளார்.

ஒன்றுக்கொன்று ஒவ்வாத பொருள்களைச் சேர்த்து உலகைப் படைத்திருப்பது போல், ஒருவர்க் கொருவர் ஒவ்வாதிருந்த மனிதர்களையும் தொண்டர் கூட்டத்தில் சேர்த்தால் பக்தியேற்பட்டுவிடும். விறகில் தீயைப் போலும், பாலில் நெய்யைப் போலும்" உலகில் ஆண்டவன் மறைந்திருக்கிருன்" என்ருர் அப்பர். விரகிலே தீயைப் பார்க்கவேண்டு மென்ருல் விறகைக் காயவைக்கவேண்டும். பாலில் நெய்யைக் காண வேண்டுமென்ருலும் பாலைக் காய்ச்சவேண்டும். அதுபோல், மனதை அன் பெனும் உஷ்ணத்தினல் காய்ச்சினல், ஆசாபாச ஆணவாதிகளாகிய ஈரம் உலர்ந்துவிடும். பிறகு பகவான் எங்கும் நிறைந்திருப்பதைப் பார்க்கமுடியும்.

ஒரு மனிதனைப் பார்த்து, நீ யாரப்பா, கண்ணு? மூக்கா இரத்தமா, மாமிசமா, எலும்பா? இவற்றை யெல்லாம் சேர்த்துக் கட்டின இந்த உடம்பா?

என்று கேட்டால், இவைகளெல்லம் நானில்லை நான் இவற்றிற்குள்ளேயிருக்கும் ஆத்மா என்பான். கண்களை மூடி பகவானுடைய நாமங்களைச் சொன்னால் உள்ளே மறைந்திருக்கும் ஆத்மாவாகிய ஆண்டவனைப் பார்க்கலாம். கண்ணுக்குக்கண் காணுமல் மறைந்திருக்கும் பொருளாகிய ஆத்மாவை அன்பினலுண்டாகும் தெளிவு அல்லது ஞானத்திஞல்தான் உணரமுடியும். அன்பற்ற வறட்டு ஞானத்திஞல் அவனையறிய முடியாது. நாம் "நான்", என்று எதைச் சொல்லுகிருேமோ, அந்த நானுக்குள் ஆத்மாவாயிருப்பவன் முருகன். அந்த 'நான், அவனுடையதே, இக்கருத்தையே "நாளென்று மார் தட்டும் பெருமாள்" என்று குறிப்பிடுகிருர் அருணகிரியார். வெளியில் காணப்படுவது காம குரோதங்களாகிய பிசாசுகள்தான். அந்த பிசாசுகளைப் பார்த்து நாம் ஏமாறக்கூடாது. அவற்றிற்குள்ளிருக்கும் முருகனைக் காணவேண்டும். உடம்பிலிருக்கும் உயிர் கண்ணுக்குத் தெரிகிறதா? தாய்க்குப் பிள்ளையிடம் மிக்க அன்பு. ஆனல் அந்த அன்பை கண்ணுல் பார்க்க முடிக்கிறதா? அதனல் அன்பும், உயிரும் இல்லையென்று சொல்லிவிடுவோமா? அதுபோல், எங்கும் ஆத்மாவாய் நிறைந்திருக்கும் பகவானை பேதம் காய்ந்த மனதினல், உணரமுடியும்.

உலகிலுள்ள ஜீவராசிகளை அன்பாய்ப் பார்க்க மட்டும்தான் நமக்கு உரிமையேயன்றி பிற, பிற என்று ஒதுக்குவது நமது உரிமைபல்ல. முருகன் இல்லாத மனிதனில்லை. அவனில்லாத பொருள் ஒன்றுமேயில்லை. முருகனிடத்தில் அன்பை மட்டும்

நிலை நிறுத்தி விட்டால் ஒவ்வொரு மனிதனிடத்தி லும் முருகனிருப்பதைப் பார்க்கலாம். அப்பொழுது பிறர் என்று விலக்குவதற்கு ஒருவருமேயில்லை. ஏனெனில், யாவரும் முருகனுய்க் காணப்படு கின்றனரன்றோ? கோபிப்பவரையும், கெடுதி செய்பவரையும் அடக்கும் கடமையும் நமதல்ல. அந்தக் கடமையை வேலும் கையுமாகயிருக்கும் முருகனுடையது வேலில்லாமல் முருகனில்லை. பிசாசு களை அடக்கத்தான் முருகன் வேலை வைத்துக் கொண்டிருக்கிறுன். நம் கையில் ஜாலரையும், தனது நாமத்தையுமே கொடுத்திருக்கிறுன் ஆதலால் பஜனை செய்யமட்டுந்தான் நமக்குரிமை யுண்டு சிறுவர்கள் மணலிலே விளையாடும் பொழுது, தங்கள்பாதத்தை வைத்து அதைச் சுற்றி மணலால் மூடிசிறு வீடுகட்டி விளையாடுகிறுர்கள். அது போல், பகவான் தன் பாதத்தை வைத்து, தான் விளையாடு வதற்காகக் கட்டிக்கொண்ட சிறு வீடுகளே ஜீவ ராசிகளின் உடல்கள். "கன்னெஞ்சினுள்ளே கழு நீலம் பூத்தாப்போல் என்னெஞ்சினுள்ளே இணையடி கள் வைத்தாண்டீ" என்ற பெரியார் வாக்கு இக் குறிப்பையுணர்த்துகிறது. பிள்ளைத் தமிழில் "சிற்றிலழித்தல்" என்றெரு பருவமுண்டு. அதில் பெண் குழந்தைகள் கட்டிய மணல் வீடுகளை ஆண் குழந்தைகள் அழித்து விடுவதாகவும், அவ்வாறு அழிக்க வேண்டாமென்று அச்சிறுவர்களைக் கேட் டுக் கொள்வதாகவும் அமைந்திருக்கும். இதைச் "சிறியேஞ் சிற்றில் சிதையேலே" என்ற அடி களால் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இதன் கருத்தை ஆராய்வோம்.

பிள்ளைத் தமிழில் சிற்றில் என்று குறிப்பிட்டிருப்பது ஜீவராசிகளின் உடல்களே. இவற்றை ஆண்டவன் கட்டியும் அழித்தும் விளையாடி வருகிறான். சிறுமிகள் கட்டி விளையாடும் மணல் வீட்டைச் சிறுவர்கள் காலால் அழித்து விளையாடுவது போலவே, ஆண்டவனும் தனது சக்தியாகிய அம்பாள் கட்டி விளையாடும் சிற்றிலாகிய சிறு வீட்டைத் தன் காலால் அழித்து விளையாடுகிறான். சிறுவர்க்ள் விளையாடும் மணல் வீட்டை அழிப்பது மறுநாள் புதிய வீட்டைக் கட்டுவதற்காக. அது போல், ஆண்டன் சிறு வீடுகளாகிய சீவராசிகளின் உடல்களையழிப்பதும் மோக்ஷமாகிய பேரின்ப வீடு கட்டி தருவதற்காகத் தான். 'எட்டடிகுச்சுக்குள்ளே முருகா நான் எத்தனை நாளிருப்பேன், மச்சு வீடு கட்டித்தாரும் திருத்தணி மலையில் வாழ்பவரே' என்ற பாட்டு எட்டடிக் குச்சாகிய இந்த உடலிருந்தது போதுமப்பா! இனி மச்சு வீடாகிய பேரின்பத்தை தாரும் என்று தணிகேசனைக் கேட்பதாக அமைந்துள்ளது நோக்கத்தக்கது.

சிவகாம சுந்தரியாகிய சிறுமி வீடு கட்டி விளையாடும் ஜீவராசிகளின் உடல்களாகிய சிறிய மண் வீடுகளைத் தன் காலாலழித்து, அவற்றிற்குப் பேரொளி மயமாகிய தனது அருள் வீட்டைக் கட்டிக் கொடுத்த ஆனந்தத்தால் ஓயாமல் ஆடிக் கொண்டேயிருக்கிறானும் நடராஜன்.

அவனை நினைத்துப் பஜனை செய்யும் பொழுது அவன் திருவடிகள் உள்ளே பிரகாசிப்பதையுணரலாம். தனக்குள் இறைவனுடைய திருவடியைக் கண்டவன் தான் மற்ற ஜீவராசிகளுக்குள்ளும் அவன் திருவடிகள் மறைந்திருப்பதை எளிதிலுணர முடியும்.

சூரிய மண்டலத்தை உற்றுப் பார்த்தால் அதன் நடுவில் சிறிய கருப்புப் புள்ளிகளிருப்பது

தெரியும். அப்புள்ளிகளை யொட்டிப் பொன்னிற ஒளியொன்று காணப்படும். கருமை நிறமே பார்வதி. பொன்னெளி பரமசிவன். அம்மையுமப்பனுமான ஆண்டவனை அர்த்தநாரீ சுவர ரூபியாய் சூரிய மண்டலத்தின் நடுவிலிருந்துக் கொண்டு உலகைப் படைத்துக் காத்தழித்துக் கொண்டிருக்கிருர். இதையே "சூரிய மண்டல மத்யஸ்தம் சாம்பம் சம்சார பேஷஜம்" "ருதகம் சத்யம் பரம்பிரம்ம புருஷம் கிருஷ்ணபிங்களம்" என்ற உபநிஷத் வாக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

பகவான் எல்லா ஜீவராசிகளிடத்திலும் ரஸமாக நிறைந்திருக்கிருன். ரஸமே ஆத்மஸ்வரூபம்.

> "நிறைவு குறைவின்றி நிறைந்தெங்கும நிற்பதனை
> அது என உணர்த்தியது அது"

என்பது சித்தர் மொழி.

இந்த உண்மையை நாம் பூரணமாய்த் தெரிந்துக் கொண்டால்தான் எல்லா ஜீவராசிகளையும் ஒன்ருய் பார்க்க முடியும். ஒவ்வொரு ஜீவராசிகளுக்குள்ளும் பகவான் பூரணமாய் நிறைந்திருக்கிருன் புருஷன் என்ருல் பூரணத்துவமுடையவன் என்பதே பொருள். முருகனில்லாத மனிதனில்லை. முருகனில்லாத பொருளும் இடமுமில்லை. நம்மைக் கோபிப்பவரும், திட்டுபவரும் யார்? ஒரு உடம்பிற்குள் புகுந்திருக்கும் பிசாசுகளே. அந்தப் பிசாசுகளை ஓட்டிவிட்டால் உள்ளே முருகன் தான் காணப்படுவான்.

மிருதங்கம் மேல்புறத்தில் முரட்டுத் தன்மை வாய்ந்ததா யிருக்கிறது. ஆனல், அதை மெதுவாக விரல்களால் தட்டினல் அதிலிருந்து கிளம்பும் ஒலியோ மிக்க இனிமையாயும் மிருதுவாயுமிருக்கிறது அதுபோல், முரட்டுச் சரீரத்தில் மிருதுவான இதய

யிருக்கிறது. எத்தகைய முரடர்களா யிருந்தாலும் நாம் அன்பைக் காட்டினால், அவர்களுடைய முரட்டுத் தன்மை நீங்கி உள்ளேயுள்ள மிருதுவான அன்பு வெளிப்படுவதைக் காணலாம். நடராஜா நடனம் செய்யும் காலத்தில் விஷ்ணு மிருதங்கம் வாசிக்கிறார் என்று கூறும் கருத்தென்ன?

ஜலமே தன் வடிவாக உடையவனே நாராயணன். ஜலம் நிறைந்துள்ளது சமுத்திரமே. சூரியனாகிய சிவஜோதி தன் கிரணங்களாகிய சடைகளை வீசி உலகமெனும் அரங்கிலே நடனமாடுகிறானும். அச்சமயத்தில்தான் சும்மா யிருக்கக் கூடாதென்று அலைகளாகிய தன் கரங்களால் பூமியாகிய மிருதங்கத்தை வாசிக்கிறானும் திருமால். இக்கருத்தமைந்த பாட்டைக் கம்ப ராமாயணத்தில் காணலாம். ஆதலால், யாராவது நம்மைக் கோபித்தால், வெளியிலிருக்கும் பிசாசு கோபிக்கிறது என்று அதை மதிக்காமல் உள்ளே யிருக்கும் முருகனைப் பார்த்தால், முருகன் வெளிப்படுவான் பிசாசு பயந்து ஓடிவிடும். நடராஜன் காமகுரோதங்களாகிய பிசாசைத் தன் காலின் கீழழுத்தி, அன்பு சுவரூபமாகிய மற்றொரு காலைத் தூக்கிக் காட்டுவதுபோல, நம் உள்ளத்தில் கோபமோ ஆணவமோ தோன்றினால், அவற்றையடக்கி அன்பை மேலெழுப்பி உலகிற்குக் காண்பித்தால், உலகமும் நம்மிடம் அன்பையே தான் காட்டும். இதையுணர்த்த ஒரு சிறு வரலாறுண்டு.

ஆதிசங்கரரிடம் பொறாமை கொண்ட காபாலிகனொருவன். ஆபிசார ஹோமத்தினால் பிசாசொன்றை வரவழைத்து அதை ஆதிசங்கரரை

மயக்கிக் கொல்லும்படி ஏவினன். அது அழகான மோஹினி வேடம் பூண்டு ஆதிசங்கரரின் முன்னிலையில் வந்து நின்றது. அதன் இயல்பை யுணர்ந்த அப்பெரியார், அதற்குள்ளிருக்கும், ஜெகன் மாதாவை நினைத்து நமஸ்கரித்தார். தாயென்று வணங்கிய உடன் மந்திர ரூபமான பிசாசு உள்ளடங்கித் தாய் ரூபமாகிய அன்பு வெளிப்பட்டது. கொல்லவந்த அத்தேவதை அவருக்கு மந்திரோபதேசம் செய்து அவரை ஆசீர்வதித்துச் சென்று விட்டது. இதைக் கொண்டு,

"சிதைத்தவர் முடிக்கும், பகைத்தவர் குடிக்கும்
செகுத்தவ ருயிர்க்கும்—சினமாகச்
சிரிப்பவர் தமக்கும் பழிப்பவர் தமக்கும்
திருடபுகழ் நெருப்பென் றறிவோம் யாம."

என்ற திருப்புகழுக்குப் பொருள் கூறவேண்டும்.

திருப்புகழ் பாடுபவரைப் பார்த்து ஒருவன் பழித்தால் அவன் குடியோடழிந்து விடுவான் என்று இதற்குப் பொருள் கொள்ளக்கூடாது. அவர்களது பழிப்பிற்கும், பகைக்கும், நெருப்பா யிருந்து அவற்றை யழித்து அவர்களை நல்லவர்களாக்கிவிடும் தன்மைவாய்ந்ததே திருப்புகழ். திருப்புகழ் நெருப்புக்கு நெருப்பாயும், சினத்திற்குச் சினமாயுமிருந்து அவற்றை யழிக்கிறது. ஆதலால், பழிப்பவர்களைப் பதிலுக்குப் பகைக்காமல், அவர்கள் உள்ளிருக்கும் முருகனை வணங்கி விட்டால், அவர்களது சினமடங்கி நமது நண்பர்களாய் விடுவார்கள். நம்மைப் புகழும் பொழுது இப்புகழ் எனக்குரியதல்ல எனக்குள்ளிருக்கும் ஆண்டவனுக்கேயுரியது என்று நினைத்தால், ஆணவம்வளராது.

ஆமை நிலத்தில் வந்து முட்டையிட்டு நீரில் புகுந்துவிடுகிறது. பிறகு அம்முட்டைகளைப் பார்ப்ப தில்லை. ஆனால், அவற்றை நினைத்துக் கொண்டிருக் கிறது. அந்த நினைவினாலே முட்டைகள் முதிர்ந்து குஞ்சு வெளிப்பட்டுத் தாயுடன் போய்ச் சேருகிறது. அதுபோல் முருகன் தன் பக்தர்களை எப்போதும் கண்ணுங் கருத்துமாய் நினைத்திருக்கிறான். அந் நினைவினால் பக்தனுடைய உடம்பாகிய முட்டையி லுள்ள உயிரைப் பூரணமாக வளர்த்து ஜோதிமய மாக்கித் தன்னிடம் சேர்த்துக் கொள்ளுகிறான்.

உடலில் உயிர் மறைந்திருக்கிறது. நெருப்பில் ஒளியும் உஷ்ணமும் மறைந்திருக்கிறது. ஜீவராசி களிடத்தில் பண்பு மறைந்திருக்கின்றன. ஆண்டவன் உலகங்களைப் படைத்து அவற்றிற்குள் புகுந்து மறைந்திருக்கிறான். அந்த மறை பொருளைக் கண்டவனன்றோ, அறிவாளி; ஞானி. வேதம் மறையென்று பெயர் பெற்றதேன்? தெய்வத்தை யும், அதன் தத்துவத்தையும் தனக்குள்ளே மூடிவைத்துக் கொண்டிருப்பதாலன்றோ? வேதம் தன்னை விண்டவர்க்கன்றித் தன்னில் புகாதவர்க்குக் காட்டாமல் ஓங்காரப் பொருளை மறைத்து வைத் திருப்பதாலல்லவோ மறையெனப் பெயர் பெற்றது. அதுபோல் மனத்தின் திரையைத் திறந்துவிட்டால், ஆத்ம ஒளியாக உள்ளே தோன்றும் பரம்பொருளே மறை பொருள். அம்மறைப் பொருளைக் காணப் பஜனை செய்வோம்.

சுபம்.

உ



வேலுமயிலுந் துணை

முருகா முருகா முருகா

Jyothi Printers, Madras-1.